www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

ஒக்.08–14,1995


# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 122

## அமெரிக்காவின் இராஜதந்திரம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தலையிடியும் நெருக்கடியும்



பட்டுக்கோட்டை பிரபாகர்

போர் நிறுத்தம் நிபந்தனைகள்

பாரிசில் கார்லோஸ்

முத்து எங்கள் சொத்து ரஜினிக்கு வலை

குழந்தைகள் கவனிக்கிறார்கள்





படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## தளர்த்தலாம் தவறில்லை

**அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.**

இராணுவ இரகசியங்கள்
வெளியாவதை
போரில் ஈடுபடும்
எந்தவொரு தரப்பும் விரும்பாது.
வெளிப்படுத்த வேண்டும் என்று
நினைப்பதும் நியாயமல்ல.

ஆனால்-இரகசியங்கள்
வானில் இருந்து கொட்டுவதில்லை.
வெளியாகும் வழி ஒன்று
இருப்பதால்தான் வருகின்றன.

அந்த வழியை அடைப்பதை
செய்ய இயலாமல்
பத்திரிகைகளின் -
வாயை அடைப்பதில் பயனில்லை.

அதேசமயம்-
போரில் சாதாரண மக்கள்
பாதிக்கப்படும் சம்பவங்கள்
இராணுவ இரகசியங்கள்
என்ற வரையறைக்குள்
அடக்கப்படுவதும் நியாயமல்ல.

இனவாதத்தை அடக்குவதும்
தணிக்கையின் ஒரு நோக்கம்
என்று காரணம் கூறப்படுகிறது.

ஆனால் - இன விரோதங்களை
உருவாக்கும்
வாத-விவாதங்கள்
நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

யுத்த நிலவரத்தோடு தொடர்பில்லாமல்
இனவாதக் கருத்துக்களை
விதைக்கக் கூடியதாகவே இருக்கிறது.

எந்தவொரு இனத்தையும்
சிறுமைப்படுத்தும் கருத்துக்களை
வெளியிடுவதற்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டால்
அதனை வரவேற்க முடியும்.

அந்த விடயத்தில்
அரசு கவனம் செலுத்தாமல்
இனவாதப் பிரசாரத்தை
தடுக்கவே தணிக்கை
என்று சொல்வது
தக்க கருத்தாக இல்லை.

சில பத்திரிகைகள்
யுத்தச் செய்திகளை
கற்பனை கலந்து வெளியிட்டதை
மறுக்க முடியாது.

ஆனால்-அவற்றை முறியடிக்க
அரசிடமும்
வெகுஜன தொடர்பு சாதனங்கள்
இருக்கவே செய்கின்றன.

அந்த-வெகுஜன தொடர்பு சாதனங்கள்
நம்பகத்தன்மையை இழக்காமலிருந்தால்
அவற்றின் மூலமாக
மக்களுக்கு உண்மையை
உணர்த்த முடிந்திருக்கும்.

நம்பகத்தன்மையை இழக்கும் வகையில்
தற்காலிக நிலைமைகளுக்கு
ஏற்றவாறு செய்திகள் திரிக்கப்படுவதுண்டு.
அதனால் நீண்டகால நோக்கில்
அரச வெகுஜன தொடர்புசாதனங்கள்
வெறும் பிரசார நிறுவனங்களாக-
மக்களால் கருதப்பட்டு விடுகின்றன.

ஆகவே, அவை உண்மை சொன்னாலும்
பொய்யென்றே கருதப்படும்
நிலமை உருவாகிவிடுகிறது.

எனவே-வதந்திகளையோ
பொய்யான செய்திகளையோ
மறுக்கும் திறனை
அவை இழந்து போகின்றன.

இவ்வாறான நிலையில்
தனது மறுப்புக்கள் பயனற்றுப் போக
அரசுக்கு வெறுப்பு வருகிறது.
கருத்து மோதல் தோல்வியில் முடிய
அரசு தனது கையில்
தடியைத் தூக்கிக்கொள்கிறது.

சுதந்திரமான பத்திரிகைகளும்
எதிர்க்கட்சிகள் மாதிரித்தான்.
எனவே-ஆட்சியிலிருப்போரோடு
உரசல்கள் இருக்கவே செய்யும்.
சகிப்புத்தன்மை-கருத்துமோதல்
என்பவை கருவழிக்கப்பட்டால்
ஜனநாயகம் உயிர்ப்பிழந்துவிடும்.

தட்டிக்கேட்க யாருமில்லாவிட்டால்
தடி எடுத்தவர்களெல்லாம்
தண்டக்காரர்களாகி விடுவார்கள்.
நாம் என்ன செய்தாலும்
யாருக்குத் தெரியப்போகிறது என்று
தலைகீழாய் நடக்கத் துணிவர்!

எனவே-இராணுவ இரகசியங்கள்
விடயத்தில் எவ்வாறிருந்தாலும்,
போரில் பொதுமக்கள் பாதிப்புக்கள்
தொடர்பான செய்திகளை வெளியிட
தணிக்கை தளர்த்தப்பட வேண்டும்.
அதுவே-நம்பிக்கையை வளர்க்கும்.

▫▫

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## பெண், புருஷனின் கிரீடம்

கருத்தொருமித்த ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதே இல்லறவாழ்வு எனப்படும். இல்வாழ்வின் பெருமை விவிலியத்தில் பேசப்படுகிறது.

'தேவனாகிய கர்த்தர், மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். இதனிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்.' (அதி: 2:18,24) ஒரே மாம்சமாய் இருப்பார்கள் என்று ஆணித்தரமாக கூறப்பட்டிருப்பதை நாம் நன்கு அவதானிக்க வேண்டும். ஈருடல் ஓருயிராக வன்றி, 'ஓருயிர் ஒருடலாக' வாழும் புதிய தத்துவம் கூறப்படுகிறது. எனவே -

'தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்' (மத்: 6:9) என்று கூறப்படுகிறது திருமணம் என்பது சொர்க்கத்தில் தீர்மானிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல சொர்க்கத்தினாலேயே இணைக்கப் படுகிறது. எனவேதான் எபேசியர் 5:28 இல் 'கணவர்களும் தம் மனைவியரைத் தம் சொந்த உடலெனக் கருதி அவர்களுக்கு அன்பு செய்யவேண்டும். மனைவிக்கு அன்பு காட்டுகிறவன் தனக்கே அன்பு காட்டுகிறான்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல-

'புத்தியுள்ள மனைவி கர்த்தர் அருளும் ஈவு' என்றும் 'குணசாலியான ஸ்திரி தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்' (நீதி:19:14:12:4) என்பவைகளால் பெண்ணின் பெருமை எவ்வளவு தூரம் உயர்த்திக் கூறப்படுகிறது என்பதையும் சிந்தித்துப் பார்க்கலாம்.

ஏ.பி.வி.கோமஸ்

## ஆன்மீகம்



### நரக நெருப்பை அணைக்கும் கண்ணீர்த் துளி

தாபித் பனானிய்யி (ரலி) என்பவர் அல்லாஹ்வின் அச்சத்தால் அழுதழுது கண்நோய் வந்து விட்டது.

அந்நோயைப் பரிசோதித்த டாக்டர் இனி மேல் அழுவதில்லை யென வாக்குறுதியளித்தால் இந் நோய்யை குணப்படுத்த முடியும் என்றார்.

இதைக் கேட்ட தாபித் அல்லாஹ்வின் மறு உலக விசாரணையை நினைத்து அழாத கண்களுக்கு எத்தகைய பெருமையும் இல்லையென பதிலளித்ததோடு, தன் கண்நோய்க்கு நிபந்தனையின் பேரில் சிகிச்சை அளிப்பதை நிராகரித்தார்.

ஒருவன் அழுவதற்கு ஏழு காரணங்கள் இருக்கின்றன. அவை ஆனந்தம், பைத்தியம், வாதனை, பீதி, நடிப்பு, போதை, அல்லாஹ்வின் மீதுள்ள அச்சம் ஆகியவையாகும்.

இவற்றில் இறுதியானவை முதன்மையானவை. அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்தால் வெளிப்படும் ஒரு துளிக் கண்ணீர் சமுத்திரம் போன்ற அளவிடமுடியாத நரக நெருப்பைக் கூட அணைத்துவிடும்.

எம்.சீ.கலீல்-கல்முனை 05

## கவிதைப்போட்டி இல-119
### பரிசுக்குரிய கவிதை

#### விழி(ப்) பூட்டு

விழி தொலைத்த பிணம் சுமந்து
ஆறு ஓடும்
மடல் விரித்து நோக்க விழி
முகாரிபாடும்!
இருளுறைந்த மனம் சுமந்தோர்
கொடுமைகாண
முடியாற் தானிந்த
விழிக்குப் பூட்டு!

ஏ.அஹ்மது ஜுனைது-ஏறாவூர்

## கவிதைப் போட்டி இல-122



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 14.10.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 122
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்



### சுதந்திரமே இல்லையோ?

ஏட்டுச் சுதந்திரங்கள் - கவிஞன்
எழுதியதால் போயிற்று
வோட்டு சுதந்திரங்கள் - போன
தேர்தலுடன் போயிற்று
பார்வைச் சுதந்திரந்தான் - இனி
பாக்கி என்று எண்ணுகையில்
வார்ப்பிரும்பு பூட்டுக் கொண்டு -
கண்ணை(ப்)
பூட்டியதால் போயிற்றோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை

### எச்சரிக்கை!

கண்தான வள்ளல்கள்
இம்மண்ணில் திரிகிறார்கள்
கவனம்! கவனம்!! - உங்கள்
கண்கள் மிகக்கவனம்!!!!

ஜி.ஸ்ரீநேசன்-மட்டக்களப்பு

### வழி

அவள் நோக்கினால்.....
அண்ணல் நோக்க வழி?....

அமுதா-மகாலிங்கசிவம்-மட்/கல்லடி

### தோண்டப்படாதினியோ

சுட்டும் விழிச் சுடர்தான்
கண்ணப்பா
பாரிய பூட்டுக்களோ...
வட்டக்கருவிழிதான்
கண்ணப்பா
தோண்டப்படாதினியோ!

அமிர்தஷாந்தி-மட்/கல்லடி

### கண்மூடி சிலையானாய்

பச்சை இலை சலசலக்கும்
நீலக் கடல் அலை கிழப்பும்
கண்பார்த்துக் கவி கூறி
பொய்யான புகழ் பாடக்
கூடாது என்றோ நீ?
பூட்டிட்டு கண் மூடி
நாட்டிற்குள் சிலையானாய்!

நிஜந்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு

### நம்பிக்கையோடு

"கண் பூட்டுப் போட்டதாலே
கருத்தெல்லாம் இருண்டு போச்சோ
கருமேகப் போர் சூழ்ந்ததாலே
கலியுகம் நாறலாச்சோ
நல்லவை நடக்க வேண்டில்
நாசமாம் போரொழிய வேண்டு மென்ற
நம்பிக்கை யோடு வாழும் மாந்தர்
நலம் வாழ்ந்தால் நாடெலாம் போற்றுமன்றோ."

ஆரையூர் இறையடியான்.

### கண் மறைத்தாய்

பூட்டிய பூட்டாலே - என்
கண்ணிரெண்டும் மறைத்தாலும்
உணர்ச்சிகள் தான் ஓடிவந்து
ஊர்ச் செய்தி சொல்லாதோ

அ.உதயகீர்த்தி-செட்டிபாளையம்.

### அச்சம்

உச்சி முடி நீங்கிற்று சாந்திக்காக தலையிட்டு!
ரகசியங்களை நோக்கியதால் வந்ததிப் பூட்டு
இனி வாய் திறந்தால் தேடிவரும் வேட்டு
இறைவா! சமாதானத்தின் வழியை நீ காட்டு!

பீ.எம்.எம்.அன்ஸார்-வெலிகம.

### தேவை இன்னொன்று

நடப்பவை மறைக்கவோ
கண்களுக்குப் பூட்டு?
கடந்தவை மறக்க
மனதுக்கொன்று மாட்டு!

முகம்மது தானிஷ்-நீர்கொழும்பு

### இறுதித் தீர்வு!

மூண்ட சோகத்தினால்
மூட மறுத்த என் இமைகளுக்கு
உறுதியாக நான் எடுத்த
இறுதியானத் தீர்வு இது!

ஜி.முத்துநீலன்-வெல்லம்பிட்டி

### சபதம்

நாட்டுக்கு நலங்கள் தோன்றும்
நாளது வரும் வரையும்
பூட்டுகள் போட்டுக் கண்கள்
பூட்டியே வைத்தேன் பாரீர்!

வானம்பாடி- கொழும்பு-09

### போர் தந்த பரிசு

அறிவுக் கண்களைப்
பூட்டிக் கொண்டு
ஆடு-புலி ஆட்டம்
ஆடுவதன் அர்த்தமென்ன...?
ஓ...நீதி தேவனே!
கண்ணீர் விடக்
கண்கள் ஒன்றுமில்லை!
கட்டியழ
உறவுகள் மிச்சமில்லை...!

ஷியானி நளீர்-அக்குறணை

### என்னைத் தெரிகிறதா?

என்னைத் தெரிகிறதா?
ஜனநாயக நாட்டின்
சகல உரிமையும் கொண்ட
சந்தோஷப் பிரஜை நான்?

மெ.கோவிந்தராஜா-நமுனகல




## ஆசை

மகாபாரதம் தந்த இராஜகுமாரனுக்கு கைகொடுக்க ஆசை. அடுத்து வாரம் தவறாமல் இராமாயணம் காண ஆசை. மகாபாரதம் தந்த சூட்டோடு இராமாயணம் தரும் முரசுக்கு நன்றி சொல்ல ஆசை.

எம். சோம சேகரன்-வவுனியா

▫▫

மகாபாரதம் வழங்கிய இராஜகுமாரன் மீண்டும் மற்றொரு காவியம் தருவது எதிர்பாராத இன்ப அதிர்ச்சி. முரசுக்கு சபாஷ்.

ஆர்.பாலாம்பிகை-மாத்தளை.

▫▫

வாரா வாரம் காத்திருந்து முதலில் படிப்பது மகாபாரதத்தையே. எம்.ரி.வி தராத மகாபாரத முடிவையும் சுருக்கித் தந்த இராஜகுமாரனை பாராட்டுகிறேன்.

செல்வன்.இளங்கோ-நீர்கொழும்பு.

▫▫

சலிப்பின்றி, தூய தமிழ் நடையில் மகாபாரதம் ஒரு கலக்கல்.

இராமாயணமும் கலக்கட்டும்.

எல்.அப்துல் ஹமீட் -பேருவளை.

▫▫

தமிழில் ஒரு பொக்கிசம் இராமாயணம். இளைய தலைமுறைக்கு அதை சுவையாக வழங்கட்டும் முரசு.

வி.தமயந்தி-அப்புத்தளை.

முரசோடு கைகுலுக்கியவர்களில் இங்கு இடம் பிடித்துக் கொள்பவர்கள்:

செல்வி.க.கோமளச் செல்வி, வாழைச்சேனை.
கே.கனகராஜா, நுவரெலியா.
எம்.நிர்மலா, கொழும்பு 13.
பூபாலபிள்ளை லிங்கன் அன்னமலையூர்.
கௌரி கைலாசம், கொழும்பு.
எம்.எச்.சுக்ரி, சவுதி அரேபியா.
க.இராஜதுரை, திருக்கோணமலை
வி.சுகுமாரன், சத்திரிகாமம், டயகம.
எம்.எல்.எம்.ஜவாஹிர், மினுவாங்கொட.
க.றஞ்சிதமலர், மாவடிவேம்பு.
எம்.எம்.எம்.மஹரூப், கல்முனைக்குடி -9.
ச.ஜெகதீஸ்வரி, ரன்னகல தோட்டம், நேபொட.
ஜெ.கிறிஸ்துராஜா, கல்பொத்தவீதி, நாவல.
ஈ.செல்வநாயகம், ஆலைகோவில்வீதி-பெரியநீலாவணை.
திருமதி-ஜே.ஜெகதீஸ்வரி, லிங்கநகர்-திருமலை.

### செஸ்

செஸ் விளையாட்டு போல தொடர்கதையை கொண்டு செல்கிறார் பட்டுக்கோட்டைப் பிரபாகர். ரசிகனின் கார்லோஸ் இன்னொரு விருந்து.

எல்.என்.பர்ஸானா-கண்டி

விலை உயர்ந்த குற்றம் தரம் உயர்ந்த படைப்புத்தான். அபிமான எழுத்தாளருக்கு வாழ்த்துக்கள்.

ஜே.மலர்விழி-கொழும்பு 11

முரசு ஒருமுறை சொன்னா நூறுமுறை சொன்னமாதிரி. (பாட்ஷா ஸ்ரைல்) கத்தரி மிரட்டல் தொல்லைப்படுத்துகிறதோ? (அதாங்க தணிக்கை)

என்.ராம்குமார்-சுவிற்ஸர்லாந்து

## வாசகர் சாலை

தினமுரசினைத் தவறாது தரிசிப்பவர்களில் யானும் ஒருத்தி. சின்ன சின்ன எழுத்துக்களில் சிறிய சிறிய இடங்களிலும் பெரிய பெரிய விடயங்களைப் பயனுறத் தருவது தினமுரசே என்றால் யார் மறுப்பார்கள்? ஆமாம் தினமுரசின் கவிதைப் போட்டிப் படங்கள் கூட ஆச்சரிய நிலைக்கு கொண்டு செல்கிறது. இல-119 கவிதைப் போட்டிப் படம் அற்புதமானது. யோசிக்க வைத்தது. காலத்துக்கேற்ற படம்

சசிகலா நடேசபவானந்தம்-கிண்ணியா 1

தினமுரசே முதற்கண் உனக்கு என் வாழ்த்துக்கள். ஆனால் உன்னைத் தெரியும்; உன் ரசிகனைத் தெரியாதே. கண்ணே மதுமிதா கண்டு ரசிகன் யார் என்றேன். மீண்டும் இலக்கிய நயத்தால் என்னைக் கலக்கிய ரசிகனே முரசின் வழி நீ தொடர என் வாழ்த்துக்கள்!

வ.சுரேஸ் கண்ணா-மட்டக்களப்பு

அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை அரசியல் தொடரை அற்புதன் உண்மையில் அற்புதமாகவே தருகின்றார். அரசியல் தகவல்களை சுடச்சுட தருவதில் முரசு தனிப்பாணியைத்தான் கைக்கொள்கிறது. வாவ்...பட்டுக்கோட்டைபிரபாகர் தன் விலை உயர்ந்த குற்றத்தில் சொட்டெடுக்கிறாரே.

மொஹம்மட்டஷ்மீர்-
குறிஞ்சாக்கேணி -3

வாராவாரம் தினமுரசு 'பாப்பா முரசு' பகுதியில் இடம்பெறும் சிறுகதைகள், சிறுவர்களுக்கு நல்ல அறிவுரைகளை தருவதுடன் படிப்பினை ஊட்டுவதாகவும் அமைந்துள்ளது. 'இலக்கிய நயம்' வெகு சிறப்பாக உள்ளது.

மங்களா வாமதேவன்
தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.



படிப்பகம்

www.padippakam.com

# மூன்றுநாள் மோதலில் 163 புலிகள் பலி!

## புலிகளும் பலத்த ஷெல் தாக்குதல்!

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று படையினரின் இடிமின்னல் தாக்குதல் ஆரம்பித்ததை அடுத்து புலிகளுக்கு பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை 163 பேரின் பெயர் விபரங்கள் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மோதலில் மட்டும் 150 புலிகள் பலியானதாக புலிகளின்குரல் வானொலி அறிவித்துள்ளது.

**ஷெல் தாக்குதல்**

யாழ்-குடாநாட்டில் படையினர் கடந்த முதலாம் திகதி (1.10.95) அன்று இடிமின்னல் தாக்குதலை ஆரம்பித்தனர்.

முன்னர் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கையின்போது படையினர் முன்னேறிச் சென்ற பகுதிகளில் புலிகள் தயார் நிலையில் தாக்குதல் முஸ்தீபுகளுடன் இருந்தனர். ஆனால், படையினர் இம்முறை அச்சுவேலிப் பகுதியை நோக்கி முன்னேறினார்கள். படையினரின் முன்னேற்றத்தை தடுக்கப் புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல்களை கடுமையாகப் பிரயோகித்தனர். படையினரும் பீரங்கிகளை பயன்படுத்தினார்கள். பருவ மழைக்கு முற்பட்ட இடியும் மின்னலுமாக போர்க்கள நிலவரம் காட்சியளித்தது.

மோதலில் ஏற்படும் இழப்புக்கள் குறித்து பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலியில், படையினரின் முன்னேற்றத்தைத் தடுக்க தாம் கடுமையாக சண்டையிட்டு வருவதாகப் புலிகள் கூறியுள்ளனர். எனினும் போதிய விபரங்களை புலிகளின் குரல் வானொலி உடனடியாக வெளியிட வில்லை.

அச்சுவேலிப்பகுதியை படையினர் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த போதும், புலிகளின் குரல் வானொலியில் அச்சுவேலியில் படை முன்னேற முயற்சி என்றே அறிவிக்கப்பட்டது.

**புலிகள் தாக்குதல்**

இதேவேளை, படையினர் நிலைகொண்ட பகுதிகளில் 2.10.95 அன்று இரவும், 3.10.95 அன்று அதிகாலையிலும் புலிகளது அணிகள் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டன. படையினர் திருப்பித் தாக்கினார்கள். அதன்பின்னர் புலிகளது அணிகள் திரும்ப அழைக்கப் பட்டனர்.

அந்த மோதலில் புலிகளுக்கு பெருமளவு சேதம் ஏற்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

புலிகள் வெளியிட்ட பட்டியல் ஒன்றில் பலியான 163 புலிகளின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. புலிகளது 105 சடலங்களை தாம் கைப்பற்றி யுள்ளதாக பாதுகாப்புப்படை செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

படையினர் ஆனையிறவு பிரதான தளத்திலிருந்து முன்னேறாமல் தடுப்பதில் புலிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனையிறவு முகாம் பகுதிக்குள் ஊடுருவிச் சென்று தாக்கும் முயற்சிகளை புலிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

30.9.95 அன்று ஆனையிறவில் புலிகளால் தாக்குதல் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. அப்போது ஏற்பட்ட மோதலில் புலிகளின் தரப்பில் கப்டன் நியாஸ், 2வது லெப்ரினன்ட் ரவீந்திரன் ஆகியோர் பலியானார்கள்.

ஆனையிறவிலிருந்தும் படையினர் முன்னேறிச் சென்றால் தென்மராச்சியில் உள்ள தமது நிலைகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதால், ஆனையிறவுப்பகுதியில் புலிகளது அணிகள் கூடுதலாக நிறுத்தப் பட்டுள்ளன.

புலிகள் அமைப்பின் மூத்த தளபதிகளான பால்ராஜ், சொர்ணம், ஆகியோரும், யாழ்- மாவட்ட புலிகளது தளபதி பானு, கடற் புலிகளின் தளபதி சூசை ஆகியோரே கடந்த ஜூலையில் நடைபெற்ற புலிப்பாய்ச்சல் நடவடிக்கைக்கு தலைமை தாங்கி இருந்தனர். தற்போதும் அவர்களது தலைமையில்தான் புலிகளது அணிகள் போரில் ஈடுபடுத்தப் படுகின்றன.

மழைக்காலம் விரைவில் ஆரம்பமாகப் போவதால், அதுவரை வரையறைக்கு உட்பட்ட பதில் தாக்குதல்களை மட்டுமே புலிகள் நடத்திக்கொண்டிருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

**புலிகளின் தாமதம்**

புலிகள் அமைப்பினரும் தமது தரப்பில் ஏற்படும் இழப்புக்கள் குறித்து முழு விபரங்களை உடனடியாக அறிவிப்பதை தவிர்த்து வருகின்றனர்.

கடந்த ஜூலை மாதத்தில் பலியான பெண் புலிகள் இருவரது விபரங்களை கடந்த வாரமே புலிகள் அறிவித்திருந்தனர். எனவே -உண்மையான சேத விபரங்களை உடனடியாக உறுதி செய்ய இயலவில்லை.

## வரலாறு காணாத ஊர்வலம்

### பிரேதப் பெட்டிகளோடு மாணவர்கள்

29.9.95 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவர் பேரணியில் ஒரு இலட்சம் பேர் கலந்துகொண்டதாக புலிகள் கூறியுள்ளனர்.

60 ஆயிரம் பேர் வரை கலந்து கொண்டதாக முரசுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

யாழ்-பல்கலைக்கழக மைதானத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமானது. பல்கலைக்கழக மைதானத்திற்கு மாணவர்களையும் பொதுமக்களையும் கொண்டுவந்து சேர்ப்பதற்கு புலிகள் உதவினார்கள். பிரேதப் பெட்டிகளை தோளில் சுமந்தபடி மாணவர்கள் சீருடைகளோடு ஊர்வலத்தின் முன்னால் சென்றனர்.

ஊர்வலத்தின் முடிவில் யாழ் - பல்கலைக்கழக துணை வேந்தர் க.குணரட்ணம், யாழ்-மறைமாவட்ட குரு முதல்வர் வண. இம்மானுவேல் ஆகியோர் உரையாற்றினர். வடமராட்சி நாகர்கோவில் மகாவித்தியாலய அதிபரும் உரையாற்றினார். அவர் உரையாற்றும் போது உணர்ச்சிவசப்பட்டு அழத் தொடங்கிவிட, கூட்டத்தினரும் உறைந்து போனார்கள்.

சமீபகாலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பேரணியிலோ கூட்டத்திலோ 60 ஆயிரம் பேருக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டமை இதுவேயாகும். வரலாறு காணாத ஊர்வலம் என்று யாழ்-குடாநாட்டுப் பத்திரிகைகள் விபரித்துள்ளன.

## தனுவின் பெயரில் ஜனாதிபதிக்கு கடிதம்

### புலிகளின் பத்திரிகையில் பிரசுரம்

புலிகள் அமைப்பின் உத்தியோகபூர்வ பத்திரிகையான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அக்கடிதம் தனு என்னும் பெயரில் எழுதப்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி கொலையில் மனிதக் குண்டாகச் சென்று பலியான பெண்ணின் பெயரும் தனு என்பது குறிப்பிடத்தக்கது.

அக்கடிதத்தில் இங்கு இடம்பெறக்கூடிய பகுதிகள் பின்வருமாறு:

"சந்திரிக்கா அக்கா, நீங்கள் நலமாக இன்றுவரை இருப்பதாக அறிகிறேன். ஆனால், நானும் என் இனத்தவரும் மரணத்தின் விளிம்பில் நின்று தினமும் தவிக்கிறோம். பத்திரிகைகளில் வெளிவந்த உங்கள் தீர்வு யோசனைப்படி இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்த தமிழர் தாயகப்பகுதியை கோதி எடுத்து புதிய எல்லைகள் போட்டிருப்பதாக அறிந்தேன்.

இந்த ஒன்றே போதும் உங்கள் தீர்வு யோசனைகளைப்பற்றி மேற்கொண்டு ஆராயாமல் விடுவதற்கு என்பது என் உறுதியான எண்ணம். ஏனெனில் எமது தாயபூமி பேரம் பேசுதலுக்கு அப்பாற்பட்டது.

சமாதான கோஷங்களோடு தேர்தலில் வெற்றி பெற்ற நீங்கள் ஒருவருட காலத்திற்குள் எங்களுக்கு ஏற்படுத்திய அனர்த்தங்களால் உங்களை நீங்களாகவே ராஜீவ் காந்தி, பிரேமதாசா, அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா, ரஞ்சன் விஜேரட்ண போன்றோரது பட்டியலில் சேர்த்துக்கொள்கிறீர்கள் என்ற உண்மையை உணர்கிறேன்" என்று அக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் முகாம்கள்

அச்சுவேலி, பத்தமேனி, நிலாவரை, புத்தூர், கோப்பாய், வாதரவத்தை, ஆவரங்கால், சிறுப்பிட்டி, நவக்கிரி, அச்செழு, நீர்வேலி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தென்மராட்சியிலுள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

தென்மராட்சியிலுள்ள பாடசாலைகளிலும் அகதிகளாக இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர். மட்டுவில் மகாவித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளிலும், சந்தைகளிலும், கோவில்களிலும் இடம்பெயர்ந்தோர் தங்கியுள்ளனர்.

இதனால் பாடசாலைகள் இயங்க முடியாமல் இருக்கின்றன. இடம்பெயர்ந்த மக்களுக்கான தங்குமிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் தொண்டர் நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. இதேவேளை சாவகச்சேரி வைத்தியசாலையிலும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

## சேரும் பணத்தை தருமாறு கேட்டார்

### மறுக்க போது உண்டியலை உடைத்தார்

கத்தோலிக்கக் குருமார் இருவர் சேர்ந்து ஒரு கத்தோலிக்க ஆலய உண்டியலையும் அதன் சுற்றுமதிலையும் பெயர்த்தெறிந்த சம்பவம் இங்குள்ள கத்தோலிக்கர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

உவர்மலையிலுள்ள குழந்தை யேசு ஆலய உண்டியலும் அதன் அழகிய கிறில் வேலியும் இவ்வாறு அக்டேபர் 1ந் திகதி பெயர்த்தெறியப்பட்டது. மத்தியானம் ஒரு மணிபோல் குழந்தை யேசு ஆலயக்குரு லோப்புவும் வியாகுலமாதா ஆலயக்குரு ஜோர்ஜ் திசாநாயக்கவும் இணைந்து இக் கைங்கரியத்தைச் செய்துள்ளனர்.

1986ல் ஆலயத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட இவ்வுண்டியலை அப்பகுதி மேய்ப்புப் பணிச்சபையே பரிபாலித்து வந்தது. இப்பணம் ஆலய அபிவிருத்திக்கே செலவிடப்படுகிறது. எனினும் உண்டியலில் சேரும்பணம் தன்னிடம் தரப்பட வேண்டும் எனக் குரு லோப்பு கேட்ட பொழுது மேய்ப்புப் பணிச்சபைச் செயலாளர் சபையைக் கூடி முடிவு எடுப்போம் என்றிருக்கிறார். தலைவரான தனது கோரிக்கைக்குச் செயலாளர் சபையைக் கூட்ட வேண்டும் என்று கூறியதால் வெகுண்ட குரு லோப்பு செயலாளர் பி.எல்.பீட்டர் என்பவருக்கு எதிராக பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளார்.

அத்துடன் நிற்காத ஆலயக்குரு பொலிஸ் நடவடிக்கைக்கு முன்பதாகவே வேறொரு ஆலயக்குருவுடன் சேர்ந்து தன்னிச்சையாக உண்டியலைத் தகர்த்தெறிந்துள்ளார்.

இதுபற்றி முரசு நிருபர் அந்தப்பகுதி கிறிஸ்தவர்கள் பலருடன் தொடர்பு கொண்டு விசாரித்த போது குருவானவர்கள் தங்கள் நிலையை விட்டிறங்கி அடாத்தாக நடந்து கொண்டது வெட்கத்துக்குரியதும் கண்டிக்கப் பட வேண்டியதும் என்றனர் கவலையோடு.

## கிழக்கில் இழப்புக்கள் குறித்து புலிகள் தெரிவிப்பு

கிழக்கு மாகாணத்தில் சமீபத்தில் படையினருடன் நடைபெற்ற மோதல்களில் தமது தரப்பில் பலியானோர் தொடர்பாக புலிகள் அறிவித்துள்ள பெயர் விபரங்கள்.

18ம் திகதி (18.9.95) அம்பாறையில் நடைபெற்ற மோதலில் புலிகளின் தரப்பில் 2ம் லெப்ரினன்ட் வதனன் (சாமித்தம்பி செல்வரட்ணம்-அம்பாறை), 2ம் லெப்ரினன்ட் சுரேஸ் (சாத்தமுத்து ராஜேந்திரன்-அம்பாறை) ஆகியோர் பலியானார்கள்.

மட்டக்களப்பு ஆலங்குளம் சந்தியில் 26.9.95 அன்று நடைபெற்ற மோதலில் மறவன் (புவனேந்திரன் தவேந்திரன்), வர்மன் (இளையதம்பி கந்தசாமி), வேல்ராஜ் (கணபதிப் பிள்ளை புவனேந்திரன்), நேசராஜ் (மாரிமுத்து கீர்த்தி சீலன்) ஆகியோரது பெயர் விபரங்கள் புலிகளால் வெளியிடப் பட்டன.

28.9.95 அன்று கல்குடாவில் பொலிஸ் நிலையம் மீது புலிகள் ஒரு தாக்குதல் நடத்தியிருந்தனர். அத்தாக்குதலில் 2வது லெப்ரினன்ட் அழகப்பன் (செல்லையா மனோகரன்), அரியரசன் (வைரமுத்து விக்கினேஸ்வரன்) ஆகியோர் பலியானதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

28.9.95 புல்மோட்டை பகுதியில் புலிகள் நடத்திய கிளைமோர் தாக்குதல் ஒன்றின் போது படையினர் திருப்பித்தாக்கியதில் புலிகளின் தரப்பில் லெப்-ஜெரூபன் (செல்வரத்தினம் ரவிச்சந்திரன்) பலியானார்.

27.9.95 இல் மட்டக்களப்பில் செங்கலடியில் வைத்து ரெலோ உறுப்பினர் மணிமாறன் என்பவரை சுட்டுக் கொலை செய்தமையையும் புலிகள் அறிவித்துள்ளனர். கிழக்கில் ரெலோ படையினருடன் ஒத்துழைத்து வருவதாக புலிகள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

## நமது பாதுகாப்பு நமது கரங்களில்!

### மட்டக்களப்பு பா.உ. மௌலானா தெரிவிப்பு

(ஏறாவூர் நிருபர்)

"நிரந்தரமான பாதுகாப்பும், சமாதானமும் சமூகங்களின் மத்தியிலான அன்பிலும் பரஸ்பர விட்டுக் கொடுப்பிலும், புரிந்துணர்விலுமே தங்கியுள்ளது. பாதுகாப்பு என்பது ஆயுதங்களினாலேயோ ஆயுதப்படைகளினாலோ, பொலிஸாராலோ கிடைப்பதில்லை. ஏனைய மக்களுடன் விட்டுக்கொடுப்புடனும், அன்புடனும் வாழ்வதன் மூலமே நமது பகுதியில் வறுமையை நீக்கி நம்டவர்களின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவமுடியும். ஒருவரையொருவர் சந்தேகக்கண் கொண்டு பார்ப்பது எந்த வகையிலும் அமைதிக்கு வழிவகுக்காது. எந்தவொரு சம்பவம் நிகழ்ந்தாலும் திடீரெனத் தோன்றும் நிதானமற்ற மனித உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்காது நிதான மாக இருக்க வேண்டும். நம் எதிர்கால சிறார் களையாவது நிம்மதியாக வாழவைக்க நாம் பாடுபட வேண்டும். ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தை அழிப்பதாலோ வெறுப்புணர்வுடன் நோக்குவதாலோ உயர்வடைய முடியாது. சிந்தனையிலும் நாம் பரந்த நோக்கைப் பெற்றிருக்க வேண்டும். மற்றவர்களின் வேதனையில், இழப்புக்களில் நாம் பங்கெடுத்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ், சிங்கள முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றேன் என்பதற்காக மட்டும் நான் அவர்களுக்கு சேவை செய்ய எண்ணியதில்லை. ஒவ்வொருவரும் அடுத்தவருக்குப் பணிபுரிவது கடமையாக உள்ளது."

இவ்வாறு ஏறாவூரில் 15 இலட்ச ரூபா செலவில் வீதிநிருமாண வேலைகளைத் துவக்கிவைத்து தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் உரையாற்றிய மட்டு மாவட்ட பா.உ.அலி ஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

## மருந்துப் பொருட்களுக்கு புலிகள் வரி

## தொண்டர் நிறுவனப் பிரதிநிதி எதிர்ப்பு

சமீபத்தில் தொண்டர் நிறுவனம் ஒன்று வவுனியா தாண்டிக்குளம் வழியாக வட பகுதிக்கான மருந்துப் பொருட்களைக் கொண்டு சென்றது. தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதியான வெளிநாட்டவரும் சென்றிருந்தார்.

புலிகளது தடைமுகாமில் மருந்துப் பொருட்களின் பொதிகளை சோதனையிட வேண்டும் என்று புலிகள் கூறினார்கள். "இது உங்கள் மக்களுக்காக கொண்டு செல்லும் மருந்துப் பொருட்கள். சோதனையிட்டு எமக்கு சிரமம் தர வேண்டாம்." என்று வெளிநாட்டவரான பிரதிநிதி கூறினாராம். அதன்பின்னர் பொதிகளை மேலோட்டமாக சோதனையிட்ட புலிகள் அவற்றை ஏற்றி இறக்கியதற்காக ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்று கேட்டார்களாம்.

அதற்கு உடன்பட மறுத்த வெளிநாட்டவர் நிவாரணமாக செய்யும் உதவிக்கு நீங்களே பணம் கேட்டால் என்ன நியாயம்? என்று தர்க்கப்பட்டாராம்.

இச்சம்பவத்தின் காரணமாக அதிருப்தியடைந்த குறிப்பிட்ட தொண்டர் நிறுவனம் வடபகுதிக்கு மருந்துப் பொருட்களை கொண்டு செல்வதில்லை என்று தீர்மானித்துள்ளது.

## கடற்புலிகளுக்கு முக்கியத்துவம்

யாழ் குடாநாட்டில் படையினரின் முகாம்கள் உஷார் நிலையில் இருப்பதால், தற்போது வேறுமுனைகளில் அதிர்ச்சிகளை ஏற்படுத்துவதிலேயே புலிகள் கவனம் செலுத்துகின்றனர்.

முல்லைத்தீவில் கடற்படைக் கப்பல்மீது புலிகள் தாக்குதல் நடத்தியமையும் அதனை வெளிப்படுத்தியுள்ளது. கடல், வான் போக்குவரத்தில் தடைகளை ஏற்படுத்துவது மூலம் படையினரது விநியோகப் பாதையை தடை செய்து, யாழ் குடாநாட்டில் படையினரது முன்னேற்றத்தைத் தடுப்பதே புலிகளது நோக்கமாகும். இதனால் புலிகளுக்குள் கடற்புலிப் பிரிவினருக்கே அதிக முக்கியத்துவம் ஏற்பட்டுள்ளது.

## மூதூர் விவசாயிகளுக்கு உதவுக

### பாதுகாப்பு அமைச்சுக்கு கடிதம்

மூதூரிலும், மூதூரை அண்டிய பிரதேசங்களிலும் இம்முறை முழுமையான விவசாய நடிவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். அதனால் அவர்களுக்கு தேவையான உரவகைகளை பெற்றுக் கொள்ள படையினர் அனுமதிக்க வேண்டும். இவ்வாறு யாழ் மாவட்ட ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சம்பூர், சேனையூர், கூனித்தீவு போன்ற பிரதேச மக்கள் தமக்குரிய உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக கட்டைபறிச்சானுக்கு வரவேண்டியிருக்கிறது. பல மைல் தூரம் நடந்து வந்தே அவர்கள் உணவுப் பொருட்களை பெறவேண்டியுள்ளது. மேற்படி பகுதிகளுக்கான பஸ் சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டு விட்டன. மட்டக்களப்பில் இருந்து இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளான வாகரை ஊடாக வெருகல் வரை மட்டக்களப்பு போக்குவரத்துச் சபையால் பஸ்சேவை நடத்தப் படுகிறது. ஆனால் மூதூரிலிருந்து மட்டும் பஸ் சேவை நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே நிறுத்தப்பட்ட பஸ்சேவை மீண்டும் நடத்தப்பட வேண்டும் என்றும் சந்திரகுமார் எம்.பி. தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## ஓடும் பஸ்ஸில் கொள்ளையர் கைவரிசை

### நடத்தை தவறும் நடத்துநர்கள்

(ஏறாவூர் நிருபர்)

கொழும்பிலிருந்து வந்த வாழைச்சேனை டிப்போவைச் சேர்ந்த 61-9941 இலக்க பஸ்ஸில் ஓட்டமாவடி பெரிய பாலத்தடியில் வைத்து ஏறிய ஒரு கோஷ்டியினர் நகருக்குள் வைத்து பஸ் நடத்துநரைத் தாக்கி அவரிடம் இருந்த ரூபா 2907.50 சதத்தைக் கொள்ளையடித்ததாக பஸ் நடத்துநர் வி.தாஹிர் வாழைச்சேனை பொலிஸில் புகார் செய்துள்ளார். இச்சம்பவம் கடந்த 29.09.95 அன்று நடந்துள்ளது. சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது நாம் கொழும்பிலிருந்து வரும்போது ஓட்டமாவடியைச் சேர்ந்த சிலர் ஓட்டமாவடி பெரிய பாலத்தடி சோதனைச் சாவடியில் வைத்து பஸ்ஸில் ஏறினர். அப்பொழுது அவர்களிடம் டிக்கட் எடுக்குமாறு கேட்டேன். அவர்கள் தாங்கள் பின்னால் பரிசோதனைக்காகக் காத்துநிற்கும் இ.போ.ச.பஸ்ஸில் வந்ததாகக் கூறி டிக்கட் எடுக்க மறுத்தனர். எனினும் நான் சம்மதிக்காததால் என்னுடன் வாய்த்தர்க்கம் புரிந்து என்னைத் தாக்கினர். அப்பொழுது பஸ் நிறுத்தப்பட்டதும் என்னை பஸ்ஸிலிருந்து கீழே இழுத்து எடுத்துத் தாக்கி எனது பணத்தையும் கொள்ளையடித்து மறைந்தனர் என்றார்.

இது இப்படியிருக்க மட்டக்களப்பு வாழைச்சேனை டிப்போக்களைச் சேர்ந்த இளம் பஸ் நடத்துநர்கள் சிலர் பண்பா நடந்து கொள்வதில்லையெனவும், மரியா யற்ற பேச்சுக்களைப் பேசுதல், ம பயணம் செய்யும் பெண்களுடன் போன்ற செயல்களில் ஈடுபடு பயணிகள் தெரிவிக்கிறார்கள். ஏனைய நடத்துநர்களுக்கும் ஏற்படுவதாக நடத்துநர் ஒ தெரிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

# ரஜினி தலைமையில் புதிய சகாப்தம்

தமிழக செய்திகள் — தருவது ஏழுமலை

## ஆர்.எம்.வீரப்பன் ஆவேச உரை

ரஜினி அரசியலுக்கு வருவது அநேகமாக உறுதி என்பது போல முன்னாள் அமைச்சர் ஆர்.எம்.வீரப்பன் பேசி வருகிறார்.

செப்டம்பர் 24ம் திகதி மதுரையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் ஆர்.எம்.வீரப்பன் உரையாற்றினார். ரஜினி இரசிகர்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்தனர்.

அ.தி.மு.கவைவிட்டு ஆர்.எம்.வீரப்பன் நீக்கப்பட்ட பின்னர் முதன் முதலில் கலந்துகொண்ட கூட்டம் அதுதான்.

அங்கு ஆர்.எம்.வீரப்பன் உரையாற்றும்போது கூறியதாவது: "தமிழ்நாட்டில் ரஜினிகாந்த் தலைமையில் புதிய சகாப்தம் உருவாகப்போகிறது. ரஜினியால் ஆட்சி செய்ய முடியுமா? என்கிறார்கள். எம்.ஜி.ஆரையும் முதலில் இப்படித்தான் கேட்டார்கள். அன்று ஆருடம் கணித்த



வர்கள் மண்ணோடு மண்ணாகப் போய் விட்டனர். அதே கதிதான் இப்போது ரஜினி பற்றி ஆருடம் கணிப்பவர்களுக்கும் ஏற்படும்" என்று கூறினார் ஆர்.எம்.வீரப்பன்.

ரஜினி இரசிகர்கள் புடைசூழ ஆர்.எம்.வீரப்பன் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் நடத்திவருகிறார். புதிய கட்சி தொடங்குவதற்கான வெள்ளோட்டமே அதுவாகும். என்று அரசியல் பார்வையாளர்கள் கூறியுள்ளனர்.


அக்டோபர் மாத மத்தியில் தனது முடிவை அறிவிப்பதாக ரஜனிகாந்த் அறிவித்திருக்கிறார்.

ஆர்.எம்.வீரப்பனோடு சேர்த்து ஜெயலலிதாவால் கட்சியில் இருந்து கல்தா கொடுக்கப்பட்ட மாதவன் எம்.பி. ஜெயலலிதா மீது கடும் விமர்சனங்களை ஏவிவருகிறார்.

தமிழக சட்டமன்ற துணைச்சபாநாயகர் வி.பி.பாலசுப்பிரமணியமும் கட்சியைவிட்டு நீக்கப்பட்டார்.

கட்சியைவிட்டு நீக்கப்பட்ட மூவரும் ரஜினி இரசிகர்களைச் சந்தித்து ஆதரவு திரட்டிவருகின்றனர்.

## கார்ட்டூன் மூலை




# சிவாஜியும் நானும் கணக்குக் காட்டுவோம்!

## தமிழக முதல்வர் விடுத்த அறிக்கை

தனது வளர்ப்பு மகன் திருமணத்திற்கு நூறு கோடி ரூபாய் செலவு செய்ததாக தமிழக முதல்வர் ஜெயலலிதா மீது புகார்கள் கிளம்பியுள்ளன. வருமான வரித்துறை அதிகாரிகள் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இதேவேளை ஜெயலலிதாவுக்கு சம்பந்தம் இருப்பதாகக் கூறப்படும் ஜெ.ஜெ.டி.வி. நிலைய இயக்குநர் பாஸ்கரன் கைது செய்யப்பட்டுள்ளார். அந்நிய செலாவணி மோசடி தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜெயலலிதாவின் தோழி சசிகலாவிடமும் வருமான வரி அதிகாரிகள்



விசாரணை நடத்தியுள்ளனர்.

தனது வளர்ப்பு மகன் திருமண விடயமாக ஜெயலலிதா அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

"சிவாஜி கணேசனின் குடும்பமும் சரி என்னுடைய குடும்பமும் சரி சமுதாயத்தில் மதிப்பு வாய்ந்த குடும்பங்கள். எங்களுடைய இல்லத் திருமணத்திற்காக செலவிடப்பட்ட ஒவ்வொரு பைசாவிற்கும் சரியான கணக்கை எங்களால் காண்பிக்க முடியும்.

இந்தத் திருமணமானது என்னால் மட்டுமே நடத்தப்பட்டதல்ல; இரண்டு முக்கிய குடும்பங்கள் நடத்திய திருமண நிகழ்ச்சியாகும்," என்று தெரிவித்தார் ஜெயலலிதா.

## "பால் குடிப்பதை நிரூபித்தால் ஒரு இலட்சம்!"

## சென்னையில் வீரமணி முரசடித்து பிரசாரம்

பிள்ளையார் பால்குடிப்பதாக செய்திகள் வெளியாகிக் கொண்டிருந்தபோது திராவிடர் கழக பொதுச் செயலாளர் கி.வீரமணி தெருவில் இறங்கினார். சென்னையில் தனது ஆதரவாளர்களோடு வீதி வீதியாகச் சென்று முரசடித்து சவால்விட்டார் வீரமணி.



பிள்ளையார் பால்குடிப்பதை நிரூபித்தால் ஒரு இலட்சம் ரூபாய் பரிசு. கொழுக்கட்டை சாப்பிட்டால் 2 இலட்சம் ரூபாய் பரிசு என்று அவர் அறிவித்தார்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் 200 மனுக்கள் தாக்கல் செய்யப்படும். பிள்ளையார் பால்குடிப்பதாக மோசடி செய்தவர்கள் மீது மத்திய புலனாய்வுத்துறை விசாரணை நடத்த வேண்டும். அதற்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று கேட்கப்படும்" என்றும் வீரமணி அறிவித்தார்.

## சஞ்சய் தத் விரைவில் விடுதலை

பிரபல இந்தி நடிகர் சஞ்சய் தத்தை பிணையில் விடுதலை செய்ய தடா நீதிமன்ற நீதிபதி மறுத்திருந்தார். இப்போது சஞ்சய் தத் உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் செய்துள்ளார். அக்டோபர் 10ம் திகதி சஞ்சய் தத் பிணைமனு விசாரணைக்கு வருகிறது.

சஞ்சய்தத்தை விடுதலை செய்வதில் ஆட்சேபனை இல்லை என்று இந்திய மத்திய புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர். அவ்வாறு தெரிவித்தால் மட்டும் போதாது அதற்கான காரணங்களை விளக்கும் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு உச்ச நீதிமன்றம் புலனாய்வுத் துறைக்கு கட்டளையிட்டுள்ளது.

எதிர்வரும் பத்தாம் திகதி அந்தப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும். அதனையடுத்து சஞ்சய் தத் விடுதலையாவார் என்று நம்பப்படுகிறது.

## நீதி மன்றத்திலுமா?

கொழும்பு அளுத்கடையில் நீதவான் நீதிமன்றில் அமைந்துள்ள பொது மலசல கூடம் மிக மோசமான நிலையில்- சுற்றாடல் சூழலை மாசுபடுத்தும் வகையில் உள்ளது. கொழும்பு மாவட்டத்திலும் சரி, வெளி மாவட்டத்திலிருந்தும் சரி இந்த நீதிமன்றத்திற்கு வழக்கு சம்பந்தமாக வரும் பொது மக்கள் அவசர தேவைக்காகக்கூட மலசல கூடத்திற்குச் செல்ல முடியாதிருக்கின்றது.

அரசாங்கம் சுற்றாடல் சூழல்வாரம் கொண்டாடுகின்றது. ஆனால் நீதவான் நீதிமன்றில் உள்ள பொதுமலசலகூடம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கண்ணுக்குத் தெரியாமலிருக்கின்றது. சம்பந்தப்பட்டவர்கள் இது விஷயத்தில் கூடிய கவனம் செலுத்தி பொதுமக்கள் பாவிக்கக் கூடியதாக திருத்தி அமைத்துத்தந்தால் எவ்வளவோ வசதியாக இருக்கும் என்று நீதிமன்றத்திற்கு வரும் பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மீனாம்பிகை-திருக்கோணமலை


விளம்பரப்பகுதி

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.


# துறைமுக வீதியின் குறை நீங்குமா?

குறுமண்வெளி துறைமுகத்திற்கு செல்லும் வீதியில் விசேட அதிரடிப் படையினரும், பொலிசாரும் 1992ம் ஆண்டு முகாம் அமைத்ததால் போக்குவரத்து பிள்ளையார் ஆலயத்துடன் தடைப்பட்டு உள்வீதிகளால் இடம்பெற்றது. இதனால் வாகனப் போக்குவரத்திற்கும் பெரும் சிரமம் ஏற்பட்டது. ஆனால் தற்போது இந்த முகாமில் இருந்த பொலிஸாரும் முகாமை விட்டு சென்றுள்ளதால் போக்குவரத்து மீண்டும் துறைமுகத்திற்கு செல்லும் பிரதான வீதியினூடாக இடம்பெறுகின்றது. இந்த வீதியின் நடுவில் இருந்த காவல் அரண்கள் மற்றும் வீதி எல்லாம் குறுமண்வெளி இளைஞர்களால் துப்பரவு செய்யப் பட்டும், துறைமுக வீதியானது பாவிக்கப் படாமல் இருந்ததால் குழியும் குட்டையுமாக புல்வளர்ந்து காணப்படுகிறது. அத்துடன் துறைமுகத்திற்கு செல்லும் பஸ் வண்டியானது துறைமுக வீதியால் செல்லமுடியாமல் இடையில் திரும்புகின்றது. படுவான் கரைக்கு மக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கும், அங்கிருந்து வருவதற்கும் இந்த வீதி மிக முக்கியமாக உள்ளதால் இந்த வீதியைத் திருத்தி அமைக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கிறேன்.

சி. ரவீந்திரன், குறுமண்வெளி-11.

## வெளிச்ச விமோசனம் கிடைக்குமா?

காரைதீவு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மாளிகைக்காடு கிராமத்தின் அனேகமான வீதிகளிலுள்ள ஒவ்வொரு கம்பங்களிலும் தெருலாம்புகள் இணைக்கும் பணி அண்மையில் கல்முனை இலங்கை மின்சார சபையினால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. அத்தியாவசிய தேவையறிந்து உடன் செயற்பட்டமைக்காக கல்முனை இலங்கை மின்சார சபையினருக்கு எமது நன்றிகள்.

மேற்படி தெருலாம்புகள் அனைத்தும் இரவு 7.00 மணியளவில் தமது சேவைகளை முடித்து தானாகவே இளைப்பாறி விடுகின்றன. இதனால் தெருலாம்புகள் இருந்தும் ஒருசில வீதிகள் இருளில் மூழ்கும் பரிதாப நிலைக்கு தள்ளப்படுகின்றன. இவற்றுள் மிகவும் பிரதானமான கடற்கரை வீதியின் அனைத்துலாம்புகளும் மாலை 6.30 மணியளவில் முன் கூட்டியே அணைந்து விடுகின்றன.

இத்தெருலாம்புகளின் திடீர் சேவை நிறுத்தத்தினால் இப்பிரதேச பொதுமக்களும், குறிப்பிடத்தக்கதாக பாதசாரிகளும் பெருமளவில் பாதிக்கப்படுகின்றார்கள். இப்பகுதியில் தனியானதொரு மின்மாற்றி (ட்ரான்ஸ் போமர்) இருந்தும் இப்படியொரு நிலைமையா?

தெருலாம்புகளின் எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மேலும் சற்று அதிகமான மின் விநியோகத்தை தெருலாம்புகளின் நலன்கருதி வழங்குவதன் பொருட்டு மேற்படி சிக்கல்களையும், அசௌகரியங்களையும் முற்றாக தடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே இது விடயமாக கல்முனை இலங்கை மின்சார சபையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், ஊழியர்களும் கூடிய கவனமெடுப்பார்களாவென இப்பிரதேச பொதுமக்கள் பலரும் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

ஏ.ஏ ஜப்பார், வம்.வம்.ச. நிலையம், மாளிகைக்காடு.

## பணிப்பாளரின் பகிஷ்கரிப்பு

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலை 175வதுஆண்டு விழா வைபவத்தில் மாவட்டக் கல்விப் பணிப்பாளர், மண்முனை வடக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளாது பகிஷ்கரித்தது குறித்து பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கல்வித்திணைக்கள உயரதிகாரியொருவரின் மனைவி இப்பாடசாலையில் கற்பித்துவருகிறாராம். அவருக்கும் பாடசாலை நிர்வாகத்திற்கும் இடையிலான இழுபறியே இந்தப் பகிஷ்கரிப்பிற்கு காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

175வது ஆண்டு நிறைவையொட்டி வின்சன்ட் மகளிர் பாடசாலை விழாக்குழு ஏற்பாடுசெய்த சில நிகழ்ச்சிகளுக்கு அனுமதியளிக்காமல் கல்வித்திணைக்களம் வேண்டுமென்றே இழுத்தடித்து வருவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தனிப்பட்ட பிரச்சனைகளுக்காக பொது நிறுவனத்தின் செயற்பாடுகளை இழுத்தடிக்கக் கூடாது. தமது நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலையின் 175வது ஆண்டு நிறைவில் கலந்து கொள்ளாதது கவலைக் குரியது என்றும் அப்பிரமுகர் தெரி வித்தார்.

(மட்டக்களப்பு நிருபர்)


## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் தித்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் நடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷ்மி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷ்மி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336,3570.
FAX 0094523093 EXT 28


## அழிந்ததை ஆக்கித் தருக

கேகாலை மாவட்டத்தில் எட்டியாந்தோட்டை தொகுதியில் யக்கல்ல-எதுரா பொல பாலம் 1989ம் ஆண்டு வெள்ளத்தினால் உடைந்து விட்டது. இப்பகுதி மக்கள் மாகாண சபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 1991ம் ஆண்டு இப்பகுதியில் வாழும் தோட்டத்தொழிலாளர்கள், கிராம மக்களின் நிதி உதவியோடு தற்காலிக கம்பிப்பாலம் அமைக்கப்பட்டது. இக் கம்பி 24.8.95 திகதி மீண்டும் உடைந்து அறுந்துவிட்டது. சிங்கள, தமிழ் மக்கள் போக்குவரத்து செய்யும் பாலம் ஆபத்தாகவுள்ளது. பாடசாலை பிள்ளைகள், தொழிலாளர்கள் பயணம் செய்வது மிகவும் ஆபத்தாக உள்ளது. நகரத்துக்குச் செல்லும் ஒரே பாலம் உடைந்துவிட்டது. எமது மக்களின் நலன்கருதி நிரந்தர பாலம் அமைத்து தருமாறு இப்பகுதி சிங்கள, தமிழ் மக்கள்சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

எஸ். சதாசிவம், செயலாளர்,
மலையக சமுதாய மலர்ச்சி மன்றம்.

## ரூபவாஹினியின் புறக்கணிப்பு

"கிறிடா விசிதுறு" என்ற விளையாட்டுத்துறை சார்ந்த செய்தித் துணுக்குகளை உட்சேர்ந்த நிகழ்ச்சி ரூபவாஹினி புதன் கிழமைகளில் ஒளிபரப்பிவருவது வழமை. இந்நிகழ்ச்சி மூலம் எமது இலங்கையின் விளையாட்டுத் துறை சார் சில நல்ல விடயங்களை எமக்கு வழங்கி வருவதும் பாராட்டுப்பெற்றது. ஆனால் 20.09.95 அன்றைய நிகழ்ச்சி தனது நோக்கத்தை விட்டுக் கொடுத்ததா அல்லது அதன் நோக்கம் மாறியிருந்ததா என்பது பற்றி கேள்வியெழுந்துள்ளது. அண்மையில் நடந்த தேசிய விளையாட்டுவிழா (எல்லே வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம்) நிகழ்வின் ஒரு பகுதி நிறைந்து விட்டது. இவற்றினை 20.09.95 "கிறிடா விசிதுறு" நிகழ்ச்சி மிகத்துல்லியமாக தொகுத்து வழங்கியது- ஆனால் கூடைப்பந்தாட்ட நிகழ்ச்சியினைத்தவிர்த்து விட்டது. காரணம் கூடைப்பந்தாட்ட அகில இலங்கை சம்பியன்கள் மட்/புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலை. இதில் என்ன தவறு? வெற்றிக்குரிய பாடசாலை தமிழர்களுடையது என்பதாலா? வெற்றியும் தோல்வியும் வீரருக்கே?

தமிழ் நேசன்
மட்டுநகர்

## தவறு தவறுதான்

சென்றவாரம் 4ம் பக்கச் செய்தியில் இரண்டு தவறுகள் இடம்பெற்று விட்டன. ஆலையடி வேம்பு பிரதேசசபை அம்பாறை மாவட்டத்திலேயே இருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டம் என்று இடம்பெற்றுவிட்டது. திருமலை நகரசபை என்பதற்குப் பதிலாக மாநகரசபை என்று இடம்பெற்றுவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்காவின் இராஜதந்திரம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

இலங்கைப் பிரச்சனையில் இப்போதெல்லாம் இந்தியா வெளிப்படையாக எதனையும் தெரிவிப்பதில்லை.

அதற்காக, இந்தியாவின் வெளிவிவகாரத் துறை கண்ணை மூடிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தமல்ல.

இலங்கை விவகாரத்தில் இந்தியாவைப் பொறுத்தவரை புலிகளோடு சமரசம் செய்து கொள்ள முடியாதளவுக்கு விரோதம் வளர்ந்திருக்கிறது. நல்லெண்ணங்களால் இட்டு நிரப்பமுடியாதளவுக்கு விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

இருதரப்புமே ஒருவரை ஒருவர் நம்பத் தயாராக இல்லை. நம்பிக்கையை ஏற்படுத்த ஒரு தரப்பு முயன்றாலும்கூட, தந்திரமான வலைவிரிப்போ என்று மறு தரப்பு நினைக்குமளவுக்கு நிலவரம் மாறியிருக்கிறது.

இதனால் நஷ்டம் இரு தரப்புக்கும்தான். தனது அயல்நாடொன்றில் எரியும் பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கக்கூடிய சக்தி என்ற பாத்திரத்தை இந்தியா இழந்து விட்டது.

இந்தியாவைச் சுற்றியிருக்கும் நாடுகளில் இலங்கையில் மட்டும்தான் 1987ம் ஆண்டுவரை பிரச்சனைக்குரிய இரு தரப்பாலும் மதிக்கப்படும் மத்தியஸ்தராக இந்தியாவால் பங்கு வகிக்க முடிந்தது.

இப்போது அந்தப் பாத்திரம் கை விட்டுப் போய்விட்டது.

புலிகளைப் பொறுத்தவரை இந்தியாவோடு முற்று முழுதாக உறவைத் துண்டித்துக் கொண்டது மூலம் இரண்டு எதிரிகளை சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இந்தியா மௌனமாக இருப்பதாக வெளியே தெரிந்தாலும், அதுதான் புலிகளுக்கு உண்மையிலேயே பிரச்சனையான விடயம்.

அரசின் இராணுவ நடவடிக்கைகள் குறித்து இந்தியா, மௌனமாக இருப்பது சம்மதத்தின் அறிகுறி என்று கருதலாம்.

சம்மதம் மட்டும்தானா, சம்பந்தம் ஏதாவது இருக்கிறதா? எந்த வகையில் இருக்கிறது? என்றும் புலிகள் யோசிக்கவே செய்வர்.

இந்தியாவை ஓரம்கட்டிவிட்டு, மேற்குலக நாடுகளை புலிகள் நம்பினார்கள். போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிலும் இந்தியாவை ஒதுக்கிவிட்டு, மேற்குலக நாடுகளுக்கு புலிகள் இடம் கொடுத்தார்கள்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் இயங்கக்கூடும் சூழலை ஏற்படுத்தாமலும் புலிகள் பார்த்துக் கொண்டார்கள்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் மேற்கு நாடுகளின் பெயர்களை சிபாரிசு செய்தமை அந்த நாடுகளது ஆதரவைப் பெறும் முயற்சியாகவே இருந்தது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இயங்கத் தொடங்கினால் மேற்கு நாட்டு பிரதிநிதிகளோடு முரண்பாடுகள் ஏற்படக் கூடும் என்று கருதினார்கள் புலிகள்.

அதனால், போர் நிறுத்தம் தொடர்பான சில புதிய நிபந்தனைகளை விதித்து, அரசோடு பேசவேண்டியிருக்கிறது. அதன் பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்கள் இயங்கலாம் என்று புலிகள் புத்திசாலித்தனமாக காய் நகர்த்தினார்கள்.

கிழக்கில் ஆயுதங்களோடு நடமாட அனுமதிக்க வேண்டும் என்று புலிகள் விதித்த நிபந்தனை முக்கியமானது. அரசாங்கத்தால் அந்த நிபந்தனைக்கு உடன்பட முடியாது என்று தெரிந்தே புலிகள் அந்த நிபந்தனையை விதித்தனர்.

அரசாங்கம் வெளிப்படையாக அந்த நிபந்தைனக்கு ஒப்புக்கொள்ளவில்லையே தவிர, கண்டும் காணாமல் நடந்து கொள்ளுமாறு படையினர் கேட்கப்பட்டிருந்தனர்.

இடுப்பில் பிஸ்ரல்களோடு கிழக்கில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் புலிகள் நடமாடினார்கள். அதிலும் வேடிக்கை என்னவென்றால், பொது மக்களை சோதனையிட்ட படையினர், புலிகள் சயனைட் குப்பிகளை காட்டியவுடன் சோதனையில்லாமல் தடை அரண்களை திறந்துவிட்டனர்.

கிழக்கில் ரெலோ இயக்க உறுப்பினர்கள் பலர் போர் நிறுத்தக் காலகட்டத்தில் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ரெலோ உறுப்பினர் ஒருவரை சுட்ட புலிப்பிரமுகர் 'அரசோடுதான் போர்நிறுத்தம் ரெலோவோடு அல்ல' என்று சொல்லி விட்டுத்தான் சுட்டார்.

எனினும், தமது நிபந்தனைக்கு அரசு பகிரங்கமாக ஒப்புதல் தரவேண்டும் என்று புலிகள் பிடிவாதமாயிருந்தனர்.

யாழ்ப்பாணம் சென்ற மேற்குநாட்டு பிரதிநிதிகளும் ஏமாற்றத்தோடு திரும்பினார்கள்.

புலிகள் புத்திசாலித்தனமாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குபோட்ட தடைகளை மேற்கு நாட்டு பிரதிநிதிகள் வெளிப்படையாக விமர்சனம் செய்யவில்லை.

தமது நாடுகளுக்கு திரும்பிச் சென்று தமது அரசுகளுக்கு புகார் செய்தார்கள்.

அதனால்தான் போர் நிறுத்தம் முறிந்த கையோடு மேற்கு நாடுகள் புலிகளை கண்டித்தன. இதனைப் புலிகளே எதிர்பார்க்கவில்லை.

இந்தியப்படை வந்த காரணத்தால் இந்தியாவோடு புலிகளது உறவு முறிந்தது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் மேற்கு நாட்டு பிரதிநிதிகள் இடம்பெற்றதால் மேற்கு நாடுகளோடும் புலிகளுக்கு கசப்பான உறவு ஏற்பட்டுவிட்டது.

இதனால்தான், திருமதி அடேல் பாலசிங்கம் புலிகளது 'இன்சைட் ரிப்போட்டில்' மேற்கு நாடுகளை விமர்சனம் செய்தார். மத்தியஸ்தம் செய்யும் நம்பகத்தன்மையை அவை இழந்துவிட்டன என்று கூறுமளவுக்கு சென்றார்.

ஆக, புலிகளை நெருங்காமல் தூர இருக்கும் வரைதான் புலிகளுக்கு ஆதரவான சக்திகள் தொடர்ந்து புலிகளோடு நட்பாக இருக்க முடிகிறது.

புலிகளை நெருங்கி வந்துவிட்டால் ஒன்றில் எதிரியாக அல்லது அதிருப்தியோடுதான் புலிகளது நட்புச் சக்திகளாக இருப்பவர்களும் திரும்பிச் செல்ல வேண்டியிருக்கிறது.

இது ஏன்? காரணம் மிகத் தெளிவானது.

எக் கட்டத்திலும் தமிழ் ஈழத் தனியரசு என்ற நிலைப்பாட்டிலிருந்து இறங்குவதற்கு புலிகள் தயாராக இல்லை.

அந்தக் கட்டத்தில் இருந்தால் பரிசீலிக்கலாம் என்று புலிகள் சொல்வது ஒரு அரசியல் தந்திரம் என்பதில் ஐயமேயில்லை.

அதனை உணர்ந்து கொள்ளாமல் மாற்றுத் திட்டத்தை முன்வைத்து புலிகளை ஐக்கிய இலங்கைக்குள் ஒரு தீர்வுக்கு கொண்டுவரலாம் என்று நினைப்பவர்கள் மூக்குடைபட்டுப் போகிறார்கள்.

மாற்றுத் திட்டத்தை முன்வையுங்கள் என்று புலிகள் கேட்பார்களே தவிர, மாற்றுத் திட்டத்தை தம்மிடம் முன்வைப்பதற்குரிய சூழ்நிலை தோன்றுவதை புலிகள் அனுமதிக்க மாட்டார்கள்.

மாற்றுத் திட்டத்தை அரசால் முன்வைக்க முடியாது என்று சொல்லிக் கொண்டு போராடுவது மூலம் புலிகளுக்கு இரண்டு நன்மைகள் இருக்கின்றன.

1. அரசியல் தீர்வுக்குதாம் எதிரானவர்கள் அல்ல என்று வெளியுலகுக்கு காட்ட முடியும்.

2. போராட்டத்தை தொய்வின்றி நடத்தவும் முடியும்.

மாற்றுத் திட்டமொன்றை அரசு முன்வைத்து அதனை புலிகள் பரிசீலிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் புலிகளுக்கு இரண்டு பிரதான பாதிப்புக்கள் ஏற்படும்.

1. தமிழீழத்தை கைவிடாத தலைவர் என்று பிரபாவுக்கு உள்ள ஆளுமை மங்கிப் போகும்.

2. செய் அல்லது செத்துமடி என்று உருவாக்கப்பட்ட இயக்கம் தொய்ந்து போவதோடு, இதுவரை கொடுத்த இழப்புகளுக்கு பதில் சொல்ல முடியாமல் போகும்.

கைக் குண்டுகளை வீசுவது போல மனிதக் குண்டுகளை தொடர்ச்சியாக களத்திற்கு அனுப்பிவைக்கும் ஒரு தலைவரால், புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்வது நினைக்கவே முடியாத காரியம்.

**பிரபாகரன் வகுத்துள்ள போர்முறை வெற்றி பெற்றால் அவர்தான் முடிசூடா மன்னர். ஒரு வேளை தோல்வியடைந்தால் கடைசிக் கரும்புலியும் அவர்தான்.**

இதுதான் உண்மையான நிலவரம். இலங்கையில் ஆட்சிகள் மாறலாம். குணாம்சங்கள் மாறாது. என்பதில் பிடிவாதமான நம்பிக்கையோடு இருப்பவர் பிரபாகரன்.

வெளியிலிருந்து சில நிர்ப்பந்தங்கள் ஏற்படும்போது போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை என்பவற்றுக்கு பிரபாகரன் முன்வர மறுப்பதில்லை. ஆனால் அதனை யுத்தத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தத் தேவையான கால அவகாசத்திற்கு மேல் நீடிக்கவிட பிரபா விரும்புவதில்லை.

அந்தக் கட்டத்தில் மத்தியஸ்தம் செய்ய விரும்புபவர்கள் தாமாக விலகிக்கொண்டால் பகை இருக்காது. புலிகளுக்கு அழுத்தம் கொடுக்க முற்பட்டால் மத்தியஸ்தர்களை பகைத்துக் கொள்ளவும் புலிகள் தயங்க மாட்டார்கள்.

அதனால்தான் இந்தியாவின் மத்தியஸ்தம் யுத்தத்தில் முடிந்தது. போர் நிறுத்தத்தை கண்காணிக்க வந்த மேற்கு நாட்டு பிரதிநிதிகள் கையைக் கட்டிக்கொண்டு நின்று வேடிக்கை பார்த்துவிட்டு திரும்பிச் செல்ல வேண்டியும் ஏற்பட்டது.

## மத்தியஸ்தம் சாத்தியமா?




இப்போது அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபை இலங்கைப் பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று அறிவித்திருக்கிறது.

இன்று சர்வதேசரீதியாக போட்டியே இல்லாத நாட்டாமைக்காரனாக அமெரிக்கா மாறியிருக்கிறது. சோவியத் யூனியன் சிதைந்து போன பின்னர் எதிர்க் கடையே இல்லாத கீரைக்கடையாகிவிட்டது அமெரிக்கா.

இந்தியாவும் சோவியத் யூனியனும் கைகோர்த்துக் கொண்டு இந்துமாக்கடல் பிராந்தியத்தில் அமெரிக்கா கால் ஊன்றாமல் பார்த்துக் கொண்டன.

இப்போது இந்தியாவுக்கு துணை இல்லை.

அமெரிக்காவை பகைத்துக் கொள்ளவும் இந்தியா விரும்பவில்லை. முழுவதுமாக நம்பி உறவு கொண்டாடவும் இந்தியா விரும்பவில்லை.

பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கப் போவதாக அமெரிக்கா அறிவித்திருக்கிறது. ஏற்கனவே காஷ்மீர் பிரச்சனையில் பில் கிளின்டன் இந்தியாவுக்கு பிடிக்காத கருத்தை வெளியிட்டு வெறுப்பை வாங்கிக் கட்டிக் கொண்டார்.

பாகிஸ்தான் அமெரிக்காவின் நீண்டகால நண்பன். அதே சமயம் இந்தியாவும்-பாகிஸ்தானும் இரு துருவங்காக இருப்பதும் அமெரிக்காவுக்கு தேவையான விஷயம். பிரச்சனை இருந்தால்தான் தலையீடு செய்யும் தேவையும் இருக்கும். ஆக, பிரச்சனை தீராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதனால்தான் பாகிஸ்தானுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முடிவையும் அமெரிக்கா எடுத்து இருக்கிறது.

அடுத்தது இலங்கைப் பிரச்சனை.

இந்திய-புலிகள் விரோதம் இந்தியாவின் மத்தியஸ்தப் பாத்திரத்தை இல்லாமல் செய்துவிட்டது. பிரச்சனைக்குரிய இருதரப்புக்களில் ஒரு தரப்பு மட்டுமே இந்தியாவின் நட்பை நாடியிருக்கிறது. இரு தரப்பினதும் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நாடுதான் மத்தியஸ்தம் செய்ய முடியும். தற்போதைக்கு இந்தியாவுக்கு அந்த வாய்ப்புக் கிடையவே கிடையாது.

எனவே அமெரிக்காவுக்கு இது ஒரு வாய்ப்பு. அதனால்தான் தற்போது இலங்கை இனப்பிரச்சனையில் அமெரிக்காவின் கருத்துக்கள் நடுநிலையாளர் தொனியில் ஒலிக்கின்றன.

இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கப்போவதில்லை என்று அமெரிக்கா அறிவிப்பதால் புலிகள் மகிழ்ச்சியடைவார்கள். போர் நிறுத்த முறிவுக்காக புலிகளை கண்டித்தால் அரசு மகிழ்ச்சியடையும். இந்த இரண்டு வேலைகளையும் அமெரிக்கா செய்திருக்கிறது.

ஆனால், அமெரிக்கா தலைமையில் உள்ள நேட்டோ நாடுகள் அரசுக்கு உதவி செய்வதை அமெரிக்கா தடுக்காது. அதே போல அமெரிக்கா உட்பட நேட்டோ நாடுகளில் புலிகள் அரசுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதையும் அமெரிக்கா தடுக்காது. ஆனால் அந்த இரண்டு காரியங்களையும் அமெரிக்கா நினைத்தால் தடுக்க முடியும்.

ஆக, பிள்ளையையும் கிள்ளிவிட்டு, 'தொட்டிலை ஆட்டிவிட நான் வரலாமா' என்று அமெரிக்கா கேட்கும். கேட்டுவிட்டது.

ஆனால், விஷயம் என்னவென்றால் அரசோ, புலிகளோ அமெரிக்காவின் விருப்பம் குறித்து இதுவரை கருத்தெதுவுமே தெரிவிக்கவில்லை.

இரு தரப்புமே அமெரிக்காவின் உறவை விரும்புகின்றன. ஆனால், பிரச்சனையில் ஒரு பங்காளியாக அமெரிக்காவை கொண்டுவந்து சேர்ப்பதில் இரு தரப்புக்குமே நாட்டம் இல்லை.

இலங்கை அரசைப் பொறுத்தவரை உடனடியாக ஒரு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை அது விரும்பவில்லை.

இப்போதுதான் அரசியல் தீர்வு யோசனை ஒன்றை அரசு முன்வைத்திருக்கிறது. அந்த யோசனையே ஒரு கட்டத்திற்கு மேலே நகர முடியாமல் நின்றுகொண்டிருக்கிறது.

வெளிநாட்டு மத்தியஸ்தம் வருமானால் தற்போது முன்வைத்த யோசனையைவிட உயர்வான ஒன்றை தயாரிக்க வேண்டியிருக்கும். ஏனெனில் தற்போதைய யோசனையை புலிகள் நிராகரித்திருக்கிறார்கள்.

தற்போதைய யோசனையே அதிகம் என்று இனவாதிகள் கிளம்பியிருக்கிறார்கள். இந்த நிலையில் புதிய யோசனையை முன்வைப்பதோ, புலிகள் மீது குறிப்பிடத்தக்க வெற்றியை பெறாமல் பேச்சுக்குச் செல்வதோ அரசுக்கு பாதகமாகவே இருக்கும்.

எனவே-உடனடியாக அரசுக்கு தேவைப்படுவது யுத்தத்தில் வெற்றிபெறத் தேவையான வெளியுலக ஆதரவு மட்டுமே. இடையிலே குறுக்கிடும் மத்தியஸ்தம் அல்ல.

புலிகளைப் பொறுத்தவரை சுவிற்ஸர்லாந்து, சுவீடன், நோர்வே போன்ற நாடுகளது மத்தியஸ்தத்தை அவசியப்பட்டால் ஏற்றுக்கொள்ள விரும்புவார்கள்.

காரணம் என்னவென்றால், அந்த நாடுகளால் அதிகாரத் தோரணையில் அழுத்தங்களை ஏற்படுத்த முடியாது. முடிவுக்குக் கட்டுப்பட வேண்டும் என்று நாட்டாமையாக நடந்துகொள்ள முடியாது.

ஆனால், அமெரிக்கா நேரடியாகத் தலையிட்டால் நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம். புலிகளைப் பொறுத்தவரை மற்றொரு இந்தியாவாக அமெரிக்கா மாறலாம். எனவே அமெரிக்கா உதவி செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும் என்பதே புலிகளது தற்போதைய நிலைப்பாடாகும். அதனால்தான் பாரிசில் இருந்து பலத்த முயற்சி செய்து புலிகளது பிரமுகர் லோரன்ஸ் திலகர் அமெரிக்கா சென்றிருந்தார். வெளியுறவுத்துறை அதிகாரிகளை சந்தித்தார்.

அதே சமயம் அமெரிக்காவும் புலிகளை பெரிதாக நம்பத்தயாராக இல்லை. தனது கொள்கைக்காக எந்த எல்லைவரையும் செல்லத் தயாராக இருக்கும் ஒரு அமைப்போடு அமெரிக்கா கவனமாகவே நடந்து கொள்ளும். ஏற்கனவே அமெரிக்காவுக்குள் குண்டுகள் வெடித்துக்கொண்டிருக்கின்றன.

தீவிரவாத அமைப்புக்களை ஊக்குவிக்கும் நாடுகள் தற்போதெல்லாம் யோசிக்கத் தொடங்கிவிட்டன. பிறநாடுகளுக்கு தீவிரவாதத்தை ஏற்றுமதி செய்தால், தமது நாடுகளுக்கும் ஆபத்து என்று அவை உணர்ந்துகொண்டிருக்கின்றன.

பாலஸ்தீனத்தில் அரபாத் இருந்தார். அமெரிக்காவுக்கு தனது ராஜதந்திரக் காய் நகர்த்தலுக்கு தடை இருக்கவில்லை இலங்கையில் பிரபாகரன் இருக்கிறார். புலிகளது கவிஞர் புதுவை இரத்தினதுரை எழுதியது போல "பிரபாகரன் அரபாத் அல்ல, தந்ததை வாங்கி தலைகுனிந்து கொள்ள"

எனவே- இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் ராஜதந்திரம் ஒரு வரையறையோடுதான் தற்போதைக்கு நின்று கொள்ள வேண்டியிருக்கும். அதாவது, இரு தரப்பிடம் நல்ல பிள்ளையாக பேரெடுப்பது.

ஏதாவதொரு கட்டத்தில் எதிர்காலத்தில் அமெரிக்காவின் மத்தியஸ்த்தம் தவிர்க்க முடியாததாகிப்போனால், 'பிரபாகரன் அரபாத் அல்ல' என்பதை அமெரிக்காவும் அனுபவரீதியாக உணரவேண்டியிருக்கும்.

**நாரதர்**

## அதிரடி ஐயாத்துரை



பிரச்சனையின் சூடு கொஞ்சம் அடங்கினபிறகு வரலாம் எண்டு யோசித்து தாமதிச்சாராம் கிழக்கின் சிங்கத்தார். பிரச்சனை தீரும் அறிகுறி கிழக்கில் தெரியேல்லை. இனியும் வராமல் இருந்தால் லீவை நீடிக்க முடியாது. அண்ணர் வராட்டி திண்ணையைப் பிடிக்கலாம் எண்டு சிலர் காத்திருக்கினமாம். அது அண்ணருக்குத் தெரியாதோ? பொங்கியெழுந்து வரப்போறார். பொறுத்தார். பூமியாளலாம், பதவியைக் காப்பாற்ற முடியுமோ? சிங்கமா, கொக்கா?

**கொ**ழும்பில் தமிழ் கட்சிகள் கூட்டத்திலை கூட்டான கட்சியின் நிலமானவர் கலந்து கொண்டவராம். வான் தாக்குதல் பற்றி காரமான ஒரு அறிக்கையும் வாசித்தவராம். சோக்கான அறிக்கையண்ணே எல்லோரும் கையெழுத்துப் போடுவோம் எண்டு கேட்க, நிலமானவர் நழுவிப் போட்டாராம். மேலிடத்தில் அவரின் கையொப்பத்தைப் பார்த்தால் கசப்பாகிப் போகுமல்லோ. வாழ்க, மனிதாபிமானம். வளர்க: மனித உரிமைகள்.

**கூ**ட்டான கட்சித் தலைவர் எல்லாத்தையும் வரவேற்றுப்போட்டு ஓய்வுக்காக அயல் நாட்டுக்குப் போட்டாராம். இலவசமாகக் கொடுத்த வீடு அங்கையிருக்கல்லோ. கிழக்கில் பிரச்சனை சிங்கத்தார் கனடாவிலை. வடக்கில் பிரச்சனை தலைவர் தமிழ்நாட்டிலை. என்னதான் இருந்தாலும் எவ்வளவு கஷ்டப்பட்டு மக்களுக்காக உழைக்கினம் பார்த்தியளோ. நீரோ மன்னனின் வாரிசுகள். பிடில் மட்டுமில்லாததுதான் ஒரு குறை. பிடிலுக்கு பதிலாக வாய் இருக்குதல்லோ வரவேற்று வாசிக்கலாம்.

**மு**ன்னாள் வடக்கு கிழக்கு மாகாண கட்சியை நினைச்சாத்தான் கவலை. யோசனைகளின் சூடே அடங்கினபிறகு மாற்று யோசனை அறிக்கையொன்று விட்டவையல்லோ. வேறு ஒரு தமிழ் கட்சியின் யோசனைகளை கொப்பியடிச்சுப்போட்டு, இதுவரை எந்த ஒரு தமிழ் கட்சியும் தங்கள் கருத்தை தெரிவிக்கவில்லை. நாம் மட்டுமே தெரிவித்திருக்கிறோம் எண்டு போட்டினம் பாருங்கோ ஒரு போடு. யார் காதிலை பூ? ஒரு வேளை பொது மக்கள் சேவையில் பிஸியாக இருந்ததாலை ஏனைய கட்சிகள் முன்வைத்த கருத்துக்களைப் படிக்கேல்லையாக்கும்.

**யா**ழ்ப்பாணத்திலை இயங்கும் வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களிடம் தொலைத் தொடர்பு வசதிகள் இருக்கிற விஷயம் தணிக்கை வெற்றியை தடுத்துப் போட்டுதாம். உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது. ஒரு மாதிரி தற்காலிகமாக ஊர் வாயை மூடினாலும் உதவி நிறுவனங்களின் தொலைத் தொடர்பு சாதன வாயை மூட முடியாது. சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தலையைச் சொறிவதாகக் கேள்வி.

**வ**டமராட்சியில் கற்றுக் கொடுக்கும் கூடத்தில் திலீபன் நினைவு உண்ணாவிரதம் நடந்து கொண்டிருந்த நேரத்திலைதான் மழை பொழிஞ்சதாம். செய்தி கசிந்துதான் பறவை போனதாம். எப்படிச் கசிந்தது எண்டு ரெண்டு எழுத்தார் யோசிக்கினமாம். பள்ளிக் கூடங்களிலை சுழற்சி முறை உண்ணாவிரதம் நடத்த வேண்டும் எண்டு ரெண்டு எழுத்தார் கண்டிப்பான உத்தரவு போட்டிருந்தவையாம். உத்தரவு போட்டா நடத்தத்தானே வேணும். அது பறவைக்குத் தெரியாதோ? தெரிஞ்சம்...

**கி**ழக்கில் வெவ்வேறு விதமான கட்டுப்பாடுகளும், விதிகளும் சனத்தைப் போட்டுக் குழப்புதாம் பாருங்கோ. மட்டக்களப்பிலை ஹெல்மெட் தேவையில்லை. மட்டக்களப்பிலிருந்து மோட்டார்சைக்கிளில் ஒரு பிடி பிடிச்சிக்கொண்டு அம்பாறை மாவட்டம் போனா அம்போ! ஹெல்மெட் கட்டாயம் வேணும். விசித்திர விதிகள்.

**தே**வகத்தில் ரெண்டு எழுத்தார் வர்த்தகர்களிடம் வசூல் வேட்டையில் படு சுறுசுறுப்பாய் குதிச்சிருக்கினமாம். முன்னர் கொடுத்தவையும் மீண்டும் தரவேண்டும் எண்டு கேட்டிருக்கினமாம். ஒரு சில பிரபல வர்த்தகர்கள் இனிக் கொடுத்தா கட்டுப்படியாகாது. கொடுக்காமலும் கடை நடத்தமுடியாது எண்டு ஒரு தீர்மானத்திற்கு வந்திட்டினமாம். கடைகளை மூடுவதே தீர்மானம். சில கடைகள் மூடிக்கிடக்கும் மர்மம் அதுதான் பாருங்கோ.

**ஒ**ரே நாளில் உள்நாட்டு தொலைக்காட்சிகள் ஏட்டிக்குப் போட்டியாக தமிழ் படம் காட்டுகினம். அதாலை செய்தி வாசிப்பு நேரத்திலை பார்வையாளர்கள் அடுத்த அலைவரிசைக்குப் பட்டனைத் தட்டிப்போடுகினம். போட்டி தேவைதானோ?

சமீபத்தில் ரசித்த வித்தியாசப் புதுக்கவிதை. பிடிக்குதோ பாருங்கோ

*"பாலும் தெளிதேனும்*
*பாகும் பருப்புமிவை*
*கலந்தெனக்கு நீதா!*
*சங்கத்தமிழ் இந்தா!"*



படிப்பகம்

# 47

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**அரசியல் தொடர்**
**அற்புதன் எழுதுவது**

### கூடி ஒரு முடிவு

"போர் நிறுத்தம் செய்ய உடன் பட்டால் இந்தியாவில் இருக்கலாம். அல்லது இந்தியாவை விட்டு வெளியேறி விட வேண்டும்"

என்று போராளிகள் இயக்க தலைவர் களிடம் கூறிவிட்டு அவர்களது பதிலுக்கா கக் காத்திருந்தார் மத்திய அமைச்சர் சிதம்பரம்.

பிரபாகரன், பத்மநாபா, சிறீசபாரத் தினம், பாலகுமார் உட்பட நான்கு இயக்கங்களின் முக்கியஸ்தர்களும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

புலிகள் அமைப்பின் சார்பில் பிரபாகரன், அன்ரன் பாலசிங்கம், ரெலோ சார்பில் சிறீசபாரத்தினம், மதி, ஈ.பி.ஆர்.எல்.எஃப். சார்பில் பத்மநாபா, ரமேஷ், வரதராஜபபெருமாள், ஈரோஸ் சார்பில் பாலகுமார், சங்கர்ராஜீ, முகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்திய மத்திய அரசின் சார்பாக அமைச்சர் சிதம்பரம் மட்டுமே வந்தி ருந்தார்.

சிதம்பரம் கொக்கிபோடுகிறார் என்று தெரிந்துவிட்டது.

கூட்டமைப்பில் கூடிப்பேசி முடி வைச் சொல்லுகிறோம் என்று அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

சகஜநிலை உருவாக்கப்பட வேண்டும்.

2. சிறீலங்கா படையினர் தமிழ் பிரதேசங்களில் இருந்து வாபஸ் பெறப்பட்டு சகல இராணுவ கெடுபிடிகளும் நிறுத்தப்பட வேண்டும்.

3. அவசரகால ஊரடங்குச் சட்டங்கள் நீக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

4. கடற் கண்காணிப்பு வலயம் மற்றும் தடைப்பிரதேசங்கள் நீக்கப்பெற்று, தமிழ் பேசும் மீனவர்கள் கடற்தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும்.

5. தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நீக்கப் பெற்று, 1948க்குப் பின்னர் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் குடியகல்வு (Decolonization) செய்யப் பட வேண்டும்.

6. கைது செய்து, காவலில் வைக்கப் பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இந்த 6 நிபந்தனைகளையும் நிறை வேற்றினால் 12 வாரங்களுக்குள் போர் நிறுத்தம் செய்ய நாம் உடன்படுவோம்.

இந்த 12 வார காலத்திற்குள் சிறீலங்கா அரசு நிரந்தர அரசியல் தீர்விற்கான உருப்படியான திட்டமொன்றை எமது பரி சீலனைக்கு முன்வைக்க வேண்டும்.



ரெலோவும்-ஈரோசும் அதே போலவே பிரசாரம் செய்தன.

கூட்டமைப்பில் இல்லாவிட்டாலும் புளொட் அமைப்பினரும் போர்நிறுத்தம் ஒரு சூட்சி வலை என்று கருத்து வெளியிட்டு வந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ன செய்தது?

இந்தியா எங்களை கைவிடாது உறுதி தந்திருக்கிறது என்று கூறிவிட்டு சென்னைக் கும், டில்லிக்கும் இடையே பறந்து கொண்டிருந்தார் அமிர்தலிங்கம்.

### புலிகளின் நிலைப்பாடு

புலிகளின் சார்பாக பிரபாகரன் ஒரு அறிக்கை வெளியிட்டார். தற்போதும் பிரபாகரன் கொண்டுள்ள நிலைப்பாட்டை அன்றைய அறிக்கை மூலமே அறிந்தும் கொள்ளலாம்.

அந்த அறிக்கையில் முக்கியமான

சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது."

அது இந்தியாவின் நிர்ப்பந்தம் குறித்து பிரபாவின் மனதிலிருந்த கசப்பை மறைமுகமாக வெளிப்படுத்திய வாசகங் கள் என்று கருதலாம்.

### அரசின் அறிவிப்பு

போர் நிறுத்தத்துக்கு போராளி அமைப்புக்கள் விதித்த நிபந்தனைகளை படித்துப் பார்த்தார் அத்துலத் முதலி.

இருதரப்பும் உடன்பாட்டுக்கு வந்து போர் நிறுத்தம் செய்வதாக இருந்தால் தானே நிபந்தனைகள் பற்றிப்பேச வேண்டும்.

## பொறியாக வைக்கப்பட்ட போர் நிறுத்த நிபந்தனைகள்

"நல்ல முடிவாக இருக்கட்டும்" என்றுவிட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார் சிதம்பரம்.

கூட்டமைப்புக் கூட்டம் ஆரம்பமா னது. கூட்ட ஆரம்பத்திலேயே குண்டைத் தூக்கிப் போட்டார் பத்மநாபா.

"போர் நிறுத்தம் செய்வது என்று நாங்கள் தீர்மானித்துவிட்டோம். வேறு வழியில்லை" என்று கூறினார்.

அதற்கு முன்னர் நடந்த கூட்டத்தில் கூட்டமைப்பு என்ன முடிவெடுக்கிறதோ அதுவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் முடிவும் என்று கூறியவர் பத்மநாபா. இப்போது திடீரென்று குண்டைத்தூக்கிப் போட்டதால் ரெலோவும், புலிகளும் அதிர்ச்சியாகிவிட்டார்கள்.

ஈரோஸ் சங்கர்ராஜீ மட்டுமே பத்மநாபாவின் முடிவை ஆதரித்துப் பேசினார்.

### பிரபா சொன்ன முடிவு

அன்ரன் பாலசிங்கத்திற்கும், சங்கர் ராஜீக்கும் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டுவிட்டது.

அரசியல் தீர்விற்கான அத்திட்டம் எமக்குத் திருப்தியளிக்காவிட்டால் நாம் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளப் போவதில்லை. அத்தோடு போர் நிறுத்தத்தை கைவிட்டு போராட்டத்தைத் தொடருவோம்.




அதனால், ஒருதலைப் பட்சமாக போர்நிறுத்த அறிவித்தலை வெளியிட்டது இலங்கை அரசு.

நல்லெண்ண நடவடிக்கை என்று அரசே முன்வந்து போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டதால் உடனடி யாக அதனை போராளி அமைப்புக்களால் நிராகரிக்க முடியவில்லை.

போர் நிறுத்தம்-பேச்சுவார்த்தை தொடர்பாக சென்னையில் இருந்த போராளி அமைப்புக்களது தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்கு ஒரு அவசர செய்தி அனுப்பினார்கள்.

**பொதுமக்களைத் திரட்டி ஆர்பாட்ட ஊர்வலங்கள் நடத்தப்பட வேண்டும். ஈழமே ஒரே தீர்வு என்று பொதுமக்கள் மூலமாக குரலெழுப்ப வேண்டும்.**

**அதுதான் செய்தி**

## பேச்சுமுயற்சிகளும் பிரபாவின் அறிக்கையும்

வாய்த்தர்க்கத்தின் ஒரு கட்டத்தில் சங்கர்ராஜீ அன்ரன் பாலசிங்கத்திடம், "போர்நிறுத்தம் செய்யாவிட்டால் மூட்டை யைக் கட்டச்சொல்கிறார்கள். அங்கு போய் தனித்துநின்று..." என்று தொடர்ந்து ஒரு கெட்டவார்த்தையைப் பயன்படுத்தினார்.

அன்ரன் பாலசிங்கத்திற்கும் கோபம் வந்துவிட்டது. 'றோ' உளவுப்பிரிவோடு சங்கரை இணைத்துப் பேசிவிட்டார். வார்த்தைகள் தடித்துக் கொண்டிருந்த போது பிரபா குறுக்கிட்டார்.

"அண்ணர் பேச்சை நிறுத்துங்கோ. (அன்ரன் பாலசிங்கத்தை) அண்ணருக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன். நாங்கள் இங்கு பிரச்சனைப்பட வரவில்லை. போர் நிறுத்தம் செய்ய வேணும் என்று கூட்ட மைப்பு முடிவெடுத்தா நான் உடன்படு வேன். ஆனாலும் போர்நிறுத்தம் செய்யச் சொல்லி சொன்னவுடன் செய்தால் எங் களை குறைத்து மதிப்பிட்டு விடுவார்கள்."

அம்மா சோறு ஊட்டும்போது வேண்டாம் வேண்டாம் என்று குழந்தை அடம்பிடித்தால்தான் செல்லம். அப்படித் தான் செய்யமாட்டோம் என்று இழுத்து விட்டு உடன்பட்டால்தான் எங்களுக்கும் மதிப்பு."

இதனைக்கூறிவிட்டு பிரபாகரன் சொன்ன முக்கிய விஷயம் இது:

**"இந்தப்போர் நிறுத்தம் முடிவுக்கு வரும்போது யாழ்ப்பாணம் எமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். முகாம் களை விட்டு படைகள் வெளியேறக் கூடாது என்ற நிபந்தனைக்கு சம்மதித்தால் போர் நிறுத்தம் செய்யத் தயார் என்று அறிவிப்போம். நிபந்தனைக்குச் சம்மதித் தால், முகாம்களை சுற்றி பெடியளை நிறுத்திப்போடவேணும்."**

பிரபாவின் கருத்தை ஏனைய இயக்கத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டனர்.

### ஆறு நிபந்தனைகள்

போர் நிறுத்தம் செய்வதற்கு விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இறுதியில் ஆறு நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

1. எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்வை பாதிக்கும் சகல தடைகளும் நீக்கப்பட்டு தமிழீழத்தில்

### உஷாரான பிரபா

கூட்டமைப்புக் கூட்டம் சென்னையில் கோடம்பாக்கத்தில் வேளாளர் தெருவில் இருந்த கூட்டமைப்பு அலுவலகத்தில் நடந்து கொண்டிருந்தது.

பிரபாகரன், பத்மநாபா, சிறீசபா ரத்தினம், பாலகுமார் உட்பட நான்கு இயக்கங் களின் முக்கியபிரமுகர்கள் கலந்து கொண்டி ருந்தனர்.

திடீரென்று மின்சாரம் போய்விட்டது. எல்லோரும் அப்படியே அமர்ந்திருந்தனர்.

பிரபாகரன் மட்டும் துள்ளியெழுந்து சுவர் ஓரமாக நகர்ந்து சுவரோடு ஒட்டிக் கொண்டார். கையொன்று இடுப்பில் இருந்தது.

அந்த நேரம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் முக்கியஸ்தர் கேதீஸ்வரன் எழுந்து, ஒரு தீக்குச்சியை கிழித்து வெளிச்சம் ஏற்படுத் தினார்.

"அலனை அதை அணையுங்கோ" என்றார் பிரபாகரன். எங்கே நிற்கிறார் என்பதை வெளிச்சம் காட்டிக் கொடுத்து விடும் அல்லவா.

பின்னர் மின்சாரம் வந்துவிட்டது. அது வழக்கமான 'பவர்கட்' என்று தெரிந்தது. தனது பாதுகாப்பில் பிரபா எப்போதுமே அக்கறை கொண்டுள்ளமைக்கு அது ஒரு உதாரணம்.

பாதுகாப்பு விடயத்தில் பிரபாவுக்கு அடுத்தபடியாக உமாவும், சிறீசபாரத்தின மும் உஷாராக இருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ் இயக்கத் தலைவர்களைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை.

இதுதான் நான்கு இயக்கங்களின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) இறுதியாக அறிவித்த முடிவு.

இந்திய அரசு மூலம் அந்த முடிவு இலங்கை அரசுக்கு தெரிவிக்கப்பட்டது.

### பொறிக்குப்பொறி

இந்த இடத்தில் ஒரு விடயத்தை மறந்துவிடக் கூடாது.

போர் நிறுத்தம் செய்வதிலோ, பேச்சு வார்த்தை நடத்துவதிலோ எந்தவொரு தமிழ் போராளி அமைப்புக்கும் உள்ளார்ந்த விருப்பம் இருக்கவில்லை.

போர் நிறுத்தம் செய்யாவிட்டால் இந்தியா வின் உதவியை இழக்க வேண்டியிருக்கும்.

சர்வதேச அரங்கில் சமாதானத்தில் நாட்டமுள்ள அரசாக ஜே.ஆர் தனது அரசைக் காட்டிக் கொள்ளுவார். சமாதானத் தில் நாட்டமில்லாதவர்களாக போராளி அமைப்புக்கள் சித்தரிக்கப்படலாம்.

ஆக, ஜே.ஆர் அரசு போர் நிறுத்தப் பேச்சு வார்த்தை என்று வைத்துள்ள பொறியை எடுத்து, அரசுக்கே வைத்துவிட வேண்டும்.

அதுதான் தமிழ் போராளி அமைப் புக்களது எண்ணமாக இருந்தது.

இன்னொரு காரணமும் இருந்தது.

போரிடத் தீவிரவாத இயக்கங்கள், பேச்சு நடத்த மிதவாதத் தலைவர்கள் என்றிருந்த நிலைமையையும் தகர்த்தெறியவும் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தத் திட்டமிட்டார்கள்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இலங்கை அரசு தமிழ் போராளி அமைப்புக் களோடு ஒரு உடன்பாட்டுக்கு வர முற் பட்டமையும் அதுவே முதன்முறையாகும்.

போர் நிறுத்தம் செய்ய உடன்பட்டது ஏன் என்றும் நான்கு இயக்கத் தலைமைகளும் தமது உறுப்பினர்களுக்கு அவசரமாக விளக்க வேண்டியிருந்தது.

தமிழீழத்தை கைவிட்டு விட்டார்கள். அரசை நம்பிவிட்டார்கள் என்று உறுப் பினர்கள் தவறாக நினைத்துவிடக் கூடா தல்லவா.

எனவே- தமிழ் மக்களுக்கும் உறுப் பினர்களுக்கும் உண்மையைச் சொல்வதற்கு முடிவெடுத்தனர்.

போர் நிறுத்தமும்-பேச்சுவார்த்தையும் என்ற தலைப்போடு ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஒரு பிரசுரம் வெளியிட்டது.

அரசின் சமாதான நாடகத்தை உலகின் முன் அம்பலப்படுத்தவே போர்நிறுத்தம் செய்ய உடன்பட்டோம். ஈழத்திற்கு குறைந்த தீர்வுகள் எதற்கும் உடன்பட மாட்டோம் என்று அதில் கூறப்பட்டிருந்தது.

பகுதிகள் இவை:

இந்தத் தற்காலிக போர்நிறுத்த நடவடிக்கையின் பயனாக எமது பிரச் சனைக்கு ஒரு இறுதியான சமரச தீர்வு ஏற்படும் என்ற நம்பிக்கை துளியளவு கூட எனக்கில்லை. 35 வருடகால கசப்பான அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்து போன பாடங்களில் இருந்து நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறோம்.

ஆகவே, பேச்சுக்கள் என்ற இந்த பொறிக்குள் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பதை திட்டவட்டமாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, இந்திய அரசு எதிர் பார்த்தது போல சமஷ்டி அமைப்பு ஒன்றை உருவாக்கி வடக்கு -கிழக்கு மாகாணங்களுக்கு ஆட்சியைவழங்க சிறீலங்கா அரசு தயாராக இல்லை.

இரண்டாவதாக, சமஷ்டி ஆட்சி தனி அரசுக்கு ஒத்தது என்பதே பெரும்பான்மை சிங்கள மக்களது கருத்தாகும்.

வடக்கையும், கிழக்கையும் இணைத்த தமிழ் பிரதேச ஐக்கிய அமைப்பொன்று உருவாக்கப்படுவதை இனவெறியர்கள் விட்டுக் கொடுக்கப்போவதில்லை.

ஆகவே, மீண்டும் மாவட்ட சபை என்றும் அதிலிருந்து மாகாண சபை என்றும் புளித்துப்போன திட்டங்களே முன்வைக் கப்படும். இந்தக் குறைந்த பட்சத்திட்டங்கள் எதனையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

நாம் சுதந்திரமாக, கௌரவமாக, நிம்மதியாக, சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திர தமிழீழத்தில்தான் சாத்திய மாகும். அந்த சுதந்திர தமிழீழம் கிட்டும்வரை எமது போராட்டம் தொடரும் என்பதை தெட்டத் தெளிவாக எடுத்துக்கூற விரும்பு கிறேன்.

**ஆகேவ, இந்த யுத்த நிறுத்தம், சமாதானப்பேச்சுக்கள், சமரசத்திட்டங்கள் என்ற மாயைகளில் மயங்கிட வேண்டாம் என நான் மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.**

**இந்திய அரசின் நல்லெண்ண முயற்சி களுக்கு நாம் ஒத்துழைக்கும் அதேவேளை எமது இலட்சியத்தில் இருந்து ஒரு போதும் வழிதவறிப் போவதில்லை என்பதையும் திட்டவட்டமாக எடுத்துக்கூற விரும்பு கின்றேன்.**

என்று தெரிவித்திருந்தார் பிரபாகரன். அறிக்கையின் இறுதியில் அவர் தெரிவித்த கருத்து முக்கியமானது.

அது இதுதான்:

"எனது கையில் ஆயுதமும் ஆன்மபலமும் இருக்கிறது. மக்கள் பலமும் எனது கரங்களை பலப்படுத்தினால் எமது இலட் சியம் வெற்றியடைவதை யாராலும் எந்தச்

ஈழத்தை கைவிட முடியாது என்று இந்தியாவிடம் நேரடியாக சொல்வதில் பயனில்லை. எனவே, மக்கள் கூறுகிறார் கள் பாருங்கள் என்று இந்தியாவுக்கு காட்டுவதே நோக்கம்.

பொதுமக்கள் என்ற பெயரில் இயக்கங்கள் பின்னணியில் நின்று ஊர்வலங்களும் ஆர்பாட்டங்களும் நடத் தும் முறையும் முதன் முதலில் அப்போது தான் ஆரம்பமானது.

போர் நிறுத்தத்தை இலங்கை அரசு அறிவித்த போதும், தேடுதல் நடவடிக்கை களில் ஈடுபட முயல்வதாக போராளி அமைப்புக்கள் குற்றம்சாட்ட தொடங்கின.

இலங்கை வானொலியில் உரை யாற்றிய அத்துலத் முதலி, தீவிரவாதி களது நிபந்தனைகளை அரசு நிறை வேற்றப் போவதில்லை என்று அறி வித்தார்.

### விளையாட்டுப் போட்டிகள்

இக்கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம்.

அரசு ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்த கையோடு யாழ்ப்பாணத்தில் சில விளையாட்டுப் போட்டிகளை நடத்த முன்வந்தனர் இராணுவத்தினர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரிகளோடு உதைபந்தாட்ட போட்டி களையும், கிரிக்கெட் போட்டிகளையும் நடத்த ஆரம்பித்தனர்.

**இப்போட்டிகள் நடந்து கொண்டி ருந்த போது யாழ்-சென்ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ஆனந்தராஜா சுட்டுக்கொல்லப் பட்டார்.**

27.6.85 இல் அந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஆனந்தராஜா சிறந்த கல்விமான். திறமையான அதிபர் என்றும் மதிப்பி ருந்தது. அதனால் அவரை யார் சுட்டார் கள்? என்று மக்கள் மத்தியில் சந்தேகங்கள் எழுந்தன.

சந்தேகம் நீடிக்கவில்லை. ஆனந்த ராஜாவுக்கு மரண தண்டனை விதித்தது யார் என்பது தெரியவந்தது.

சர்ச்சைகளும்-பல்வேறு அபிப் பிராயங்களும் எழுந்தன. அதுபற்றியும் ஆனந்தராஜாவைச் சுட்டவர் பற்றிய சில தகவல்களையும் அடுத்தவாரம் சொல் கிறேன்.

(தொடர்ந்து வரும்)

# பொதுமக்கள் மத்தியில் புலிகள். வேறுபடுத்தி இனம்காண்பது முடியுமா?

பருவமழையை எதிர்பார்த்துள்ள வடபகுதியில் 'குண்டுமாரி' என்பது தற்போது மும்முரமடைந்திருக்கக் காணப்படுகின்றது. எல்.ரி.ரி.ஈ யினரின் இலக்குகளிலிருந்து பொதுமக்கள் விலகியிருக்க வேண்டும் என்றும், எல்.ரி.ரி.ஈ தளங்களை விட்டுவைக்கமாட்டோம் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கூறியுள்ளமை அதனை உறுதி செய்கிறது.

'ஒப்பரேஷன் முன்னேற்றப்பாய்ச்சல்' இருமாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றபோது புக்காரா குண்டு வீச்சு விமானம் மேற்கொண்ட கடுங் குண்டு வீச்சில் வடக்கே நவாலிப்பகுதியில் உள்ள சென்பீட்டர்ஸ் தேவாலய சுற்றாடலில் பொதுமக்கள் பலர் பலியானார்கள்.

இதனையடுத்து கடந்தமாதம் 22ம் திகதி வடமராட்சிப்பகுதியில் நாகர் கோயில் என்ற இடத்தில் குண்டுவீச்சு விமானமான புக்காரா மேற்கொண்ட தாக்குதலில் பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாகர் கோயில் பிரதேச குண்டுவீச்சில் ஏற்பட்ட உயிர் இழப்புகளை வடக்கே பணிபுரியும் பிரெஞ்சு மருத்துவ தொண்டர்ஸ்தாபனமான எம்.எஸ்.எவ். (Medicins Sans Frontieres) உறுதிப்படுத்தியுள்ளது. இந்நிலையில் நாகர்கோயில் பிரதேச இழப்பு 'தணிக்கை'க் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தற்போது ஊர்ஜிதமாகியுள்ளது. எம்.எஸ்.எவ். நிறுவனம் தனது அறிக்கையில் பலியானவர்கள் புலிகளா-பொதுமக்களா என்பதை உறுதி செய்யவில்லை என்று பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இருமாதங்களுக்கு முன்னர் வடக்கே

நவாலிப்பகுதியில் சென்பீட்டர் தேவாலய சுற்றாடலில் இடம்பெற்ற புக்காரா விமானகுண்டுவீச்சில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டதை வடக்கே இருந்து இயங்கிவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே (ICRC) முதலில் அறிவித்திருந்தது.

ஆனால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இந்த அறிவிப்பு அரசாங்கத்தை ஆத்திரமடையச் செய்திருந்தது.

வெளிநாட்டமைச்சர் திரு.லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பிலுள்ள ஐ.ஸி.ஆர்.ஸி. பிரதிநிதியை தமது அலுவலகத்திற்கு வரவழைத்து நவாலிச்சம்பவம்பற்றி அந்த ஸ்தாபனம் தெரிவித்தவை சம்பந்தமாக தமது கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

நவாலி குண்டுவீச்சுச் சம்பவம் இடம்பெற்றதுமே ஸ்தலத்துக்கு யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.ஸி.ஆர்.ஸி.. பிரதிநிதிகளே முதலில் சென்றிருந்தனர். இதனையடுத்து அவர்களே குற்றுயிராகக் கிடந்தவர்களை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதிலும் துரிதமாக இயங்கியிருந்தனர்.

எனவே தாம் நேரில் கண்டவற்றையே அன்று ஐ.ஸி.ஆர்.ஸி.யினர் வெளிஉலகுக்குத் தெரியப்படுத்தியிருந்தனர்.

தற்போது இருமாதகாலத்தில் வடக்கே மீண்டும் ஒரு பெரும் உயிரழிவு நாகர்கோயில் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்தடவை இடம்பெற்றுள்ள உயிரழிவையும் வடக்கேயுள்ள ஒரு வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனமான எம்.எஸ்.எவ். பிரெஞ்சு மருத்துவ ஸ்தாபனமே முதன் முதலில் உறுதிப்படுத்தியுள்ளது.

இருந்தபோதிலும் எம்.எஸ். எவ். நிறுவனம் தெரிவித்துள்ள உயிரிழந்துள்ளவர்கள் பற்றிய விபரம் எல்.ரி.ரி.ஈயினருடையதா? அல்லது பொதுமக்களுடையதா? என்பதுபற்றி உறுதிசெய்யப்படவில்லை என்று கடந்தவார பத்திரிகையாளர் மகாநாட்டில் இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்திருந்தார்.

பிரிகேடியர் சரத் முனசிங்கவின் இக்கருத்து குழப்பம் நிறைந்ததாகவே இருக்கின்றது.

இதேவேளை, கடந்த காலத்தில் வடக்கு-கிழக்கு யுத்தத்தைப்



பொறுத்தவரை சுமார் 50 ஆயிரம் பேர் இதுவரை யுத்த அனர்த்தங்களால் உயிரிழந்துள்ளனர். இத்தொகையினரில் 90' சதவீதமானவர்கள் அப்பாவிப் பொதுமக்களேயாவர் என்பதை 'ஜயந்திரிபற' ஊர்ஜிதப்படுத்தமுடியும்.

யாழ்குடாநாட்டில் ஒருவர் விரிவாகப்பயணஞ் செய்யும் பட்சத்தில் அங்கு தென்படும் இடிபாடுகள், சிதைவுகள் என்பன எத்தனை ஆயிரம் உயிர்கள் துடிதுடித்து மாண்டிருக்கும் என்பதற்கு நல்ல உதாரணங்களாக இருக்கின்றன.

1985ம் ஆண்டின் இறுதிப்பகுதியிலேயே சிறிது, சிறிதாக யாழ்குடாநாட்டில் ஆகாயமார்க்கமான தாக்குதல்கள் ஆரம்பமாகின.

படையினரின் 'ஆகாய ஜீப்வண்டி' (Air Jeep) என்று வர்ணிக்கப்படும் அமெரிக்கத் தயாரிப்பு 'பெல்-212' ரக ஹெலிகப்டர்கள் மூலமாகவே ஷெல், ராக்கெட் வீச்சுக்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து எல்.ரி.ரி.ஈயினர் கலிபர் - 50 (Calibre -50) என்ற ரகத்தைச்சேர்ந்த நீண்டதூர தாக்குதல் துப்பாக்கியைப் பயன்படுத்த ஆரம்பித்ததும், பெல் -212 ரக ஹெலிகப்டர் தாழப்பறந்து தாக்குதல்களை நடத்துவதை பெரிதும் தவிர்த்துக்கொண்டது.

இதனைத்தொடர்ந்தே ஸியாமாச்செட்டி என்ற இத்தாலிய தயாரிப்பு குண்டுவீச்சு விமானம், மற்றும் சீனத்தயாரிப்பு குண்டுவீச்சு விமானங்கள் என்பன படிப்படியாக வடபகுதியின் ஆகாயப்பிரதேசத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கின. கூடவே பெரியளவிலான 'அவ்ரோ' ரக விமானங்களும் பாரியகுண்டுகளைப் போட்டு வடக்கே செயலில் இறங்கலாயின.

வடக்கு-கிழக்கின் இன்றைய யுத்தத்தில் இந்த வான்மார்க்கமான தாக்குதல்களே இதுவரை ஏராளமான உயிர்களை ஏப்பம் விட்டுள்ளன.

ஆகாயத்தில் இருந்து போடப்படும் குண்டுகள்மட்டுமல்ல, விண்ணைக் கிழித்துக்கொண்டு வரும் ஷெல் வெடிகளும் அசுரவேகத்தில் உயிர்களைக் குடிப்பனவாக இருந்தன என்பதை கடந்தகால யுத்த வரலாறுகள் தெளிவுபட உணர்த்தியிருக்கின்றன.

இந்த இருவகையான, அதாவது ஷெல்வீச்சுக்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் என்பனவே வடக்கு, கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள

படையினரின் பிரதான தாக்குதல் முறைகளாக இருக்கின்றன. இதனை கடந்தவாரம் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கவும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

## கடந்த காலத்தில் நேர்ந்த அனர்த்தங்கள்

இருந்தபோதிலும் இந்த இருவகையான தாக்குதல்களினாலும் அரச படையினர் குறிப்பிடும் எல்.ரி.ரி.ஈ இலக்குகளைத் தாக்கியழிப்பதென்பது எவ்வளவுதூரம் சாத்தியம் என்பது சந்தேகத்திற்குரியதாகும். ஆனால், இலக்குகளை தாக்குவதே நோக்கம் என்று இராணுவ பேச்சாளர் சரத் முனசிங்க கூறியிருக்கிறார்.

ஷெல் வீச்சுக்கள், விமானக் குண்டுவீச்சுக்கள் என்பன முற்றுமுழுதான யுத்தப் பிராந்தியங்கள், அதாவது மோதல்களில் குதித்துள்ள இருதரப்புகளும் பரஸ்பரம் பரந்திருக்கும் பகுதிகளிலேயே பெரும்பாலும் மேற்கொள்ளப்படுவதுண்டு.

இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுமுன்னர் சிவிலியன்களது பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கும் விதத்தில் முன்கூட்டியே எச்சரிக்கைகள் வழங்கப்படுவதே இன்றைய கால யுத்த நடவடிக்கைகளில் முக்கிய அம்சமாக கருதப்படுகின்றது.

## அலசுவது—இராஜதந்திரி

ஆனால் வடக்கே யாழ் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் சிவிலியன்களது பாதுகாப்பை எவ்வகையிலும் கவனத்தில் எடுக்காதவையாகவும், பெரும்பாலும் இலக்குத் தவறியவையாகவுமே இருக்கின்றன.

எல்.ரி.ரி.ஈ நிலைகளைத் தாக்குவதாகத் தெரிவித்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் குறிதவறி சிவிலியன் இலக்குகளையே சேதமாக்குபவையாக இருக்கின்றன.

வடக்கே யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டைப் பகுதியில் ஆறு வருடங்களுக்கு முன்னர் குடிகொண்டிருந்த காலப்பகுதியிலேயே ஷெல்தாக்குதல்கள் வடக்கே ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அப்போது ஒருதடவை யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல் வெடியொன்று யாழ்பொது மருத்துவமனையின் நோயாளிகள் வார்ட் (Ward) ஒன்றின்மீது வீழ்ந்திருந்தது. இதில் 10க்கும் அதிகமான நோயாளிகள் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டிருந்தனர்.

இந்நிலையில் யுத்தம் இடம்பெறும் வடக்கு-கிழக்கு பகுதிகளில் சிவிலியன்களும் பரந்து இருக்கும் பிரதேசங்களில் அரசபடையினரின் இலக்குகளான எல்.ரி.ரி.ஈ. தளங்களையும், மற்றும் எல்.ரி.ரி.ஈயினரின் நடமாட்டத்துக்குட்பட்ட தமது பிணக்குகள், மற்றும் தமது தேவைகளைக்கையாள எல்.ரி.ரி.ஈயினரது அலுவலகங்கள், நிர்வாக மையங்களை நாடிச்செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் பிரிகேடியர் சரத் முனசிங்க குறிப்பிட்டது போல எல்.ரி.ரி.ஈயினருக் கெதிரான விமானக் குண்டுவீச்சுக்கள், ஷெல் வீச்சுக்கள் என்பன பொதுமக்களைப் பாதிப்படையவே செய்யும்.

எனவே எல்.ரி.ரி.ஈயினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் என்று தெரிவிக்கும் போது பொதுமக்களின் இக்கட்டான நிலையறிந்து அவதானமாகச் செயல்பட வேண்டியது படையினரின் பெரும் பொறுப்பாக இருக்கின்றது.

பொஸ்னியாவில் இடம்பெறும் மோதல்கள், மற்றும் அதையொத்த பிரச்னையுள்ள வேறுநாடுகளில் இடம் பெறும் மோதல்களை அவதானிக்கும் போது, யுத்தப்பிரதேசங்களில் பொதுமக்கள் பாதுகாப்புக்கருதி விரிவான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைக் காணமுடியும்.

பாதுகாப்பு வலயங்கள் (Safe Heavens) ஏற்படுத்தப்பட்டு பொதுமக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளார்கள்.

இப்பணிகளை பொஸ்னியாவில் உள்ள ஐ.நா. சமாதானப் படையினரும், வேறு

## போர் தொடரும் நிலையில் வரையறுக்கப்பட வேண்டிய பொதுமக்களின் பாதுகாப்பு

பகுதிகளையும் பொதுமக்கள் வதியும் பிரதேசங்களிலிருந்து பிரித்தறிவதென்பது எவ்வகையிலும் சாத்தியப்படாத தொன்றாகவே இருக்கும்.

கடந்தவாரம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றிய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க கருத்து வெளியிடுகையில் அரச படையினர் எல்.ரி.ரி.ஈயினருக்கெதிராக முழு அளவிலான யுத்தத்தில் குதித்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன், "இத்தகைய சூழ்நிலையில் எல்.ரி.ரி.ஈயினர் ஏற்பாடு செய்து நடத்தும் கூட்டங்கள், வைபவங்கள், ஊர்வலங்கள் என்பனவற்றில் பங்குபற்றுவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எல்.ரி.ரி.ஈயினர் எங்கெங்கு இருக்கிறார்களோ, அங்கெல்லாம் தாக்குதல் நடத்தவேண்டிய நிலைக்கு நாம் ஆளாகியுள்ளோம்; சுருங்கக்கூறின் நாம் அவர்களைத் தாக்குகின்றோம்" என்று பிரிகேடியர் சரத் முனசிங்க குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் வடக்கே, அதாவது எல்.ரி.ரி.ஈயினர் பெருமளவில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்தியுள்ள வவுனியாவுக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் தாம் நடத்தும் போராட்டத்தை இராணுவ ரீதியாக மட்டுமல்ல, அரசியல் ரீதியாகவ்ும் விரிவான வகையில் மக்கள் மயப்படுத்தப்பட்ட நிலையிலுமே எல்.ரி.ரி.ஈ யினர் மேற்கொண்டிருக்கக் காணப்படுகின்றனர்.

வவுனியாவுக்கு வடக்கே திரும்புமிடமெல்லாம் எல்.ரி.ரி.ஈயினரின் சட்டம், ஒழுங்கு, மற்றும் சிவில் நிர்வாக நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கும் அம்சங்களையே காணமுடிகின்றது.

வடக்கே, இன்று அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் செயலிழந்துள்ளது. எல்.ரி.ரி.ஈயினரே அங்கு உள்ளூர் பரிபாலனத்தை மேற்கொண்டிருக்கின்றனர். பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், மட்டுமல்ல வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பவற்றைக்கூட எல்.ரி.ரி.ஈயினர் வடக்கே நடத்திவரக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் வடக்கே பொதுமக்கள்

சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களும் மேற்கொண்டிருக்கின்றன.

ஆனால் இலங்கையில் தாக்குதல் நடவடிக்கைகள் மும்முரமடைந்துள்ள யாழ் குடாநாட்டில் கோயில்கள், பாடசாலைகள் என்பனவே அகதிமுகாம்களாக இருக்கின்றன.

திடீர், திடீரென தாக்குதல்கள் மும்முரமடைந்ததும் அப்பாவி மக்கள் தாம் வசிக்கும் பகுதிகளுக்கு அண்மையில் உள்ள கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள் என்பவற்றை நாடிச்சென்று புகலிடம் தேடுகின்றனர்.

பின்னர் பொதுமக்கள் தங்கிநிற்கும் பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள் என்பனவே அகதி முகாம்களாகவும் மாற்றமடைந்து விடுகின்றன.

இந்நிலையில் ஆயுதப்படையினர் பொதுமக்கள் தங்கிநிற்கும் அகதிமுகாம்கள், மற்றும் புகலிடங்கள் என்பன குறித்து எவ்வளவுதூரம் அறிந்து வைத்துள்ளனர் என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

எனவே இன்று இலங்கையில் வடக்கு-கிழக்கு பிரச்னை சம்பந்தமாக காத்திரமான அரசியல் தீர்வும் சாத்தியப்படாத நிலையில், யுத்தமே தொடர்ந்து கொண்டிருக்கையில் வடக்கே வதியும் பொதுமக்களின் பாதுகாப்பை தகுந்த வகையில் வரையறை செய்யவேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

அகதிமுகாம்கள், மற்றும் பொதுமக்கள் தஞ்சமடையும் கோயில்கள், கட்டிடங்கள் என்பனவற்றை யுத்தத்தில் குதித்துள்ளவர்கள் தகுந்தவகையில் இனங்காணும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமானதாகின்றது.

இதன்மூலமே நவாலி, நாகர் கோயில் பிரதேசங்களில் ஏற்பட்ட அனர்த்தங்கள், தொடர்ந்தும் வடக்கின் ஏனைய பகுதிகளில் இடம் பெறுவதையும் கூடியவரையில் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

யுத்தத்தில் ஈடுபடும் இருதரப்பினருமே பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் முன்னுரிமையளிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாகிறார்கள்.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# மனித வெடிகுண்டு

# பாரிசில் கார்லோஸ்



## தருவது — ரசிகன்

4

### பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் (PFLP) தளபதியிடமிருந்து அவசர அழைப்பு.

பெய்ரூட் சென்று கார்லோஸ் அவரைச் சந்திக்க வேண்டும்.

நேரில் வரச் சொன்னதால் காரியம் முக்கியம். ஏதோவொரு புதிய திட்டம் தயாராயிருக்கிறது என்று கார்லோஸுக்கு தெரியும்.

புறப்படத் தயாரானான். இலண்டனில் தொடர்ந்திருக்கவும் கார்லோஸுக்கு பிடிக்கவில்லை.



இலண்டனில் இரண்டு தாக்குதல்கள் நடத்தியாகிவிட்டது. முழு வெற்றியாக முடியாவிட்டாலும் இலண்டனில் உள்ள யூத இன செல்வந்தர்களை அச்சமடையச் செய்வதில் வெற்றிபெற முடிந்திருக்கிறது.

தனிநபராகவே சென்று இரண்டு தாக்குதல்களையும் நடத்தியதால் பலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைப்பீடத்தில் கார்லோஸ் மீது நம்பிக்கையும் ஏற்பட்டிருந்தது.

இனிமேல் முக்கியமான பொறுப்புக்கள் தன்னிடம் ஒப்படைக்கப்படலாம் என்று நினைத்தபோதே கார்லோஸுக்கு உற்சாக மாக இருந்தது.

புறப்பட முன்னர், அஞ்செலாவையும், நதியாவையும் சந்தித்து சொல்லிக்கொண்டு கிளம்பலாம் என்று நினைத்தான்.

அஞ்செலா நம்பவில்லை. ஜோக் விட்டுப் பார்க்கிறான் என்றுதான் முதலில் நினைத் தாள்.

"போயேன், எனக்கென்ன?" என்றாள். வெனிசுலாவுக்குப் போய் கொஞ்ச வாரங்கள் இருந்துவிட்டு வரப்போவதாகத்தான் கார்லோஸ் பொய் சொன்னான்.

திருப்பித் திருப்பிச் சொல்ல அஞ்செலா நம்பினாள். ஜோக் இல்லை. போகப்போகிறான் என்று தெரிய உடைந்துபோனாள்.

அஞ்செலா கார்லோலைக் காதலித்தாள். ஆழமான காதல் என்று சொல்ல முடியாது. கார்லோஸ் அவளோடு இருந்த நாட்கள் களிப்பானவையாக இருந்தன. அவளுக்கு தேவையான களிப்பையெல்லாம் வழங்கக் கூடியவனாக கார்லோஸ் இருந்தது அவளுக்குப் பிடித்திருந்தது.

"எப்போது புறப்படப் போகிறாய்?"

என்று உடைந்து போன குரலில் கேட்டாள். "நாளை மறுநாள். ஆனால் நாளை இங்கே வரமுடியாது. பயண ஏற்பாடுகள் தலைக்கு மேல் இருக்கின்றன."

அஞ்செலா அந்த இரவை வீணாக்க விரும்பவில்லை. கார்லோஸும் இறுதியாக ஒரு தடவை அவளை முழுமையாகப் பார்க்க ஆசைப்பட்டான்.

இருவருக்கும் பிரிவு சோகத்தையும், அதை மிஞ்சிய ஆவேசத்தையும் கொடுத்தது.

எல்லாம் முடிய துவண்டுபோன அஞ்செலா சொன்னாள். "இந்த இரவை இனி எப்போதும் மறக்கமாட்டேன்."

"நானும்தான்" என்று. உண்மையாகவே சொன்னான் கார்லோஸ்.

மறுநாள் நதியாவைச் சந்தித்தும் வெனிசுலா போகப்போவதாகப் பொய் சொன்னான்.

நதியா நடுத்தர வயதில் இருந்தவள். கார்லோஸைவிட பத்துவயது மூத்தவள். எனினும் கார்லோஸை அஞ்செலாவைவிட நேசித்தவள்.

கார்லோஸுக்கு நதியாவைவிட அஞ்செலாவைத்தான் கூடுதலாகப் பிடித்திருந்தது.

நதியாவின் மூலமாக சில தேவைகளை கார்லோஸ் நிறைவேற்றிக் கொண்டான். முக்கியமாக பணம். கார்லோஸ் கேட்ட போதெல்லாம் நதியா பணம் கொடுத்தாள்.

நதியாவுக்கு கார்லோஸ் கொடுக்க முடிந்ததெல்லாம், அவள் கேட்ட போதெல்லாம் சுகத்தை பரிமாறியது மட்டும்தான்.

நதியா கண்ணீரோடு முத்தமிட்டாள். அதுதான் நதியாவின் கடைசி முத்தம்.

இனிக் கார்லோஸ் அவளைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பமே ஏற்படாமல் போகலாம்.

□□

கார்லோஸ் பெய்ரூட் போய்ச் சேர்ந்த போது, பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணித் தளபதி வாடி ஹாட்டாட் அனுப்பிய ஆள் விமான நிலையத்தில் காத்திருந்தான்.

அழைப்புவரும், அதுவரை ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறப்பட்டது. பெய்ரூட்டில் இருந்த இரகசிய தளத்தில் கார்லோஸுக்கு தனியான ஒரு அறை தரப்பட்டது.

தனது பெறுமதி உணரப்பட்டிருக்கிறது என்று கார்லோஸ் பூரித்துப் போனான்.

பெய்ரூட்டில் இருந்த மறைவிடத்தில் பலத்த பாதுகாப்போடு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி பிரதிநிதிகள் கூடினார்கள்.

இஸ்ரேலுக்கு தகவல் தெரிந்தால் போச்சு. போர் விமானத்தையனுப்பி துல்லியமாக றொக்கட் தாக்குதல் நடத்தி முடித்து விடுவார்கள்.

பாலஸ்தீன கெரில்லாக்களிடம் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தாராளமாக இருந்தன.

சோவியத் யூனியனின் தயாரிப்பான 'சாம் 7' ரக ஏவுகணைகள் மற்றும் தரையில் வைத்து இயக்கும் ஏவுகணைகள் என்பவை இருந்தன.

அவற்றையெல்லாம் திசை திருப்பிவிட்டு ஊடுருவித் தாக்கும் வலிமை இஸ்ரேலிய விமானப்படையிடம் இருந்தது.

எனவே-மிக இரகசியமாக பெய்ரூட் கூட்டம் நடத்தப்பட்டது. தளபதி வாடி ஹாட்டாட் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் வெளிநாட்டு புரட்சி அமைப்பொன்றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஜப்பான் செம்படை இயக்கத்தின் பிரதிநிதிகளே அவர்கள்.

சிங்கப்பூரில் 12 எண்ணெய் தாங்கிகளை குறிபிசகாமல் குண்டுவைத்து தகர்த்து வெற்றி கண்டிருந்தது ஜப்பான் செம்படை இயக்கம்.

1972ம் ஆண்டு முதல் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியும் ஜப்பான் செம்படையும் இணைந்து வெளிநாடுகளில் இயங்கத் தொடங்கியிருந்தன.

ஜப்பான் செம்படை, இலங்கை போராளி அமைப்புக்கள் போன்ற பல இயக்கங்களோடு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி உறவுகளை வைத்துக் கொண்டது.

யாசிர் அரபாத் தலைமையிலான அல்பட்டாவுக்கோ, அல்லது வேறு பாலஸ்தீன இயக்கங்களுக்கோ அவ்வாறான பரவலான தொடர்புகள் இருக்கவில்லை.

ஜப்பான் செம்படை நன்றாக ஒத்துழைத்தது.

பெய்ரூட் கூட்டத்திற்கு ஜப்பான் செம்படையை அழைத்தமைக்கு காரணம் இல்லாமல் இல்லை.

தளபதி வாடி ஹாட்டாட் பிரதிநிதிகளுக்கு கார்லோஸை அறிமுகம் செய்து வைத்தார். அது கார்லோஸுக்கு பெருமையாக இருந்தது.

தளபதி வாடி ஹாட்டாட் தனது திட்டத்தை விபரித்தார்.

"பாரிசில் இஸ்ரேலுக்கு ஆதரவான நிறுவனங்கள் பல தங்கு தடையில்லாமல் இயங்கிவருகின்றன. பாரிஸ் அரசும் இஸ்ரேலிய ஆதரவுப் பிரசாரங்களுக்கு கதவை அகலத் திறந்து வைத்திருக்கிறது. பாலஸ்தீனியர்களை சந்தேகக் கண்ணோடு பார்க்கிறது. இஸ்ரேலியர்களுடன் சக நண்பர்களாக உறவு பாராட்டுகிறது"

பேச்சை நிறுத்திவிட்டு பிரதிநிதிகளை கவனித்தார். அவர்களது முகபாவங்களை மனதால் படித்துவிட்டு தொடர்ந்தார்.

"எனவே பாரிஸ் இஸ்ரேலிய பிரசாரத்தின் இதயமாக இருக்கிறது. அந்த இதயத்தில் நாம் தாக்குதல் நடத்தப் போகிறோம். குண்டொன்று குறி இரண்டு. பாரிசுக்கு ஒரு பாடமாகவும் இருக்கும். இஸ்ரேலுக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியமாகவும் இருக்கும். ஆனால் தாக்கப்படும் இலக்குகள் இஸ்ரேலியர்களுக்கு சொந்தமானவையாக இருக்கும்."

கார்லோஸ் உட்பட பிரதிநிதிகள் அனைவரும் இலக்குகளை அறிய ஆவலாக இருந்தனர்.

தளபதி வாடி ஹாட்டாட் இறுதியாக அந்த இலக்குகளை அறிவித்தார்.

"பாரிஸில் இயங்கும் இஸ்ரேலியர்களின் மூன்று பத்திரிகை நிறுவனங்கள்தான் இலக்கு."

சொல்லிவிட்டு அந்த தாக்குதல் நடவடிக்கைக்கு தான் சூட்டியுள்ள பெயரையும் அறிவித்தார் வாடி ஹாட்டாட்.

"ஒப்பரேசன் பௌடியா!"

அதுதான் நடவடிக்கைக்கு சூட்டப்பட்ட பெயர். வெளிநாடுகளில் இஸ்ரேலிய நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்திய பாலஸ்தீன போராளி மொஹமட் பௌடியா. 1973ம் ஆண்டு ஜுன் மாதம் இஸ்ரேலியர்களால் பௌடியா கொல்லப்பட்டார்.

பௌடியாவின் நினைவாகவே பாரிஸ் நடவடிக்கைக்கு அப் பெயர் சூட்டப்பட்டது.

பாரிஸ் தாக்குதல் நடவடிக்கைக்கு கார்லோஸிடம் முக்கிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது.

ஜப்பான் செம்படையின் உதவியும் தரப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

♥♥♥

**1974** மார்ச் மாத இறுதியில் கார்லோஸ் பாரிஸ் நகரில் காலெடுத்து வைத்தான்.

பாரிஸ் நகரின் அமைதியை உடைத்துப் போடப்போகும் ஒரு நபர் என்று தெரியாமல் பாரிஸ் கார்லோஸை வரவேற்றது.

தாக்குதலுக்கு தேவையான வெடி மருந்துகளை பாரிஸ் நகருக்கு கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பு ஜப்பான் செம்படையிடம் வழங்கப்பட்டிருந்தது.

வெடி மருந்துகள் வந்து சேரும்வரை இலக்குகளை நோட்டமிட்டவாறு கார்லோஸ் காத்திருக்க வேண்டியேற்பட்டது.

காத்திருக்கும் நாட்களை களியாட்ட நாட்களாக்கும் எண்ணமும் வந்தது.

(தொடர்ந்து வரும்)

## சின்னம்மையா? எப்படித் தெரியும்?



"வணக்கம் டாக்டர். நேற்று என் நண்பர் வீட்டுக்குப் போயிருந்தேன். அவரது குழந்தைக்கு உடலில் ஓரிரு சிவப்புப் புள்ளிகள் தோன்றியிருக்கின்றன. சின்னம்மையாக இருக்குமோ என்று சந்தேகப் படுகிறார். இருக்கலாமா டாக்டர்?"

"உங்கள் நண்பரின் குழந்தைக்கு எத்தனை வயது?"

"மூன்று வயது, வயதுக்கும் சின்னம்மைக்கும் என்ன தொடர்பு டாக்டர்?"

"பொதுவாக இரண்டு வயதுக்குள் சின்னம்மை வராது. குழந்தைகள் பிறக்கும் போதே உடலில் எதிர்ப்புச் சக்தி இருக்கும். இந்த எதிர்ப்பு சக்தி மூன்று அல்லது நான்கு வயதுவரை இருக்கும். அதனால் வைரஸ் தாக்குதலை அது தடுத்துவிடும். சில குழந்தைகளுக்கு இரண்டு வயதுக்குப் பின் எதிர்ப்புச் சக்தி குறைந்துவிடும். அதனால் சின்னம்மை எளிதில் தாக்கிவிடும். வைரஸ் கிருமிகளின் தாக்குதல்களில் ஒன்றுதான் சின்னம்மை."

"சின்னம்மையின் அறிகுறிகள் என்ன டாக்டர்?

"தலைவலி, சோர்வு, லேசான காய்ச்சல், மேல் தோலில் சில இடங்களில் சிராய்ப்பு காயம். இது கரும்சிவப்பு கொப்புளமாக மாறும். இதிலிருந்து வரும் திரவம் வெள்ளையாக இருக்கும். ஓரிரு சிவப்புப் புள்ளி தோன்றும்போதே கண்டு பிடித்துவிட்டால் பிரச்சனை இல்லை. ஆனால் இது சின்னம்மைதானா என்று அறிவது கடினம். உடலில் சில இடங்களில் புள்ளிகள் அதிகமாகி, கொப்புளங்கள் ஏற்படும்போது எளிதாக கண்டுபிடித்து விடலாம்."

"சின்னம்மைக்கும், பெரியம்மைக்கும் இடையில் என்ன வித்தியாசம்?"

"பெரியம்மை வருவது மோசமான வைரஸ் கிருமிகளால். அதனால் பெரியம்மை மோசமானால் உயிரைக்கூட பறிக்கும் நிலை ஏற்படலாம். சின்னம்மையால் பிரச்சனையில்லை. சின்னம்மை சுலபமாக அடுத்தவரில் தொற்றிவிடும். பெரியம்மை சுலபமாக தொற்றிக்கொள்ளாது."

"சின்னம்மைக்கு வீட்டில் செய்யும் சிகிச்சை முறை என்ன டாக்டர்?"

"சின்னம்மை வந்த குழந்தைக்கு ஓய்வு தேவை. அதற்காக படுக்கையிலேயே படுத்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ரணத்தின் எரிச்சலைப் போக்க டாக்டரிடம் கேட்டு மாத்திரை தரலாம்."

உடலில் கொப்புளம் குறைந்தால் சின்னம்மை தீருவதற்கான அறிகுறி. கொப்புளம் அதிகமானால் டாக்டரிடம் கலந்தாலோசிப்பது நல்லது.

## ஹலோ டாக்டர்

திடஉணவைக் குறைத்து, திரவ உணவை அதிகமாகக் கொடுக்கவேண்டும். சொறியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ரணம் போக ஒருவாரமாகும். அதுவரை தனியறையில் இருப்பது நல்லது. ரணம் குறைந்ததும் டாக்டரின் ஆலோசனையுடன் வெந்நீர் குளியல் அவசியம்.

"சின்னம்மை ஒருவருக்கு பல தடவைகள் வருமா டாக்டர்?"

"சின்னம்மை என்பது ஒருமுறைதான் வரும். சிலவகை ரணங்களை சின்னம்மை என்று தவறாக மதிப்பிடுகிறார்கள். அவை சின்னம்மை போலவே இருக்கும்."

"நல்லது டாக்டர். இது நீரிழிவு நோய் பற்றிய கேள்வி. உடற்பயிற்சிக்கும், நீரிழிவு நோய் குணமாவதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா டாக்டர்?"

"கணையம் வயிற்றுப் பகுதியிலுள்ள ஒரு சுரப்பி. தினமும் காலை மற்றும் இரவுச் சாப்பாட்டுக்கு முன்னர் 2 நிமிடம் ஒரு சில உடற்பயிற்சிகளைச் செய்யலாம். அதாவது நின்ற நிலையில், கால் முட்டிகளை மடக்காமல் குனிந்து கைவிரல்களால் கால் பாதங்களைத் தொட்டு நிமிரலாம். இவ்வாறு குறைந்தது ஆறுதடவைகள் செய்து கொள்ளலாம். இவ்வாறு செய்வதால் கணையம் அமுத்தப்பட்டு மீண்டும் பழைய நிலைக்கு வருகிறது. இது ஓரளவு பயன்தரக் கூடியது."

"நன்றி டாக்டர்"

## தலையில் நட்ட முடி

தலையில் வழுக்கை வருவதும் ஒரு ஸ்டைல்தான் என்று நினைப்பார்கள் சிலர். வயதாகிவிட்டதாக நினைப்பார்களே என்று வருத்தப்படுவார்கள் வேறு சிலர்.

அவ்வாறு வருத்தப்படுபவர்கள் மகிழ்ச்சிப்படத்தக்க ஒரு செய்தி: முடி உதிர்ந்த இடத்தில் அமோகமாக முடி நட்டு அசத்தும் சிகிச்சை வெற்றிகரமாக நடந்து வருகிறது.

### வழுக்கையா? கவலை வேண்டாம்!

அதே சமயம் வருத்தமான மற்றொரு செய்தி யாதெனில், முடி நடுவதற்கு ஆகும் செலவுதான் கட்டுப்படியாகாது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் கிரஹாம் கூச் தனது வழுக்கைத் தலையை மீண்டும் வளப்படுத்தியிருக்கிறார். அதாவது முடி நட்டு வருகிறார். இலங்கையின் பண மதிப்புப்படி 5 இலட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆறு வாரங்களுக்கு ஒருமுறை முடி நட்டு பராமரிக்கும் சலூனுக்கு செல்ல வேண்டும். அது மேலதிகச் செலவு.

"சிகிச்சைக்குப்பின் 10 வயது குறைந்தது போல இருக்கிறது" என்று உற்சாகம் ததும்பப் பேசுகிறார் கிரஹாம் கூச்.



இளைஞனாக தோற்றமளிப்பதால் மறுபடியும் ஆட வருமாறு இங்கிலாந்து கிரிக்கெட் அணி அழைப்பு விடுக்கும் என்றும் நம்புகிறாராம். கிரஹாம் கூச். ஆக, பணம் இருந்தால் வழுக்கையை செழிப்பூட்டலாம். இத்தகவல்களை 'ஸ்ரார் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

## சஞ்சயின் மூன்றாவது காதலி



தடா சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கும் சஞ்சய்தத் தீவிரமாகக் காதலித்துக் கொண்டிருப்பது ரியாப்பிள்ளையை. சிறை மீண்டதும் ரியாப்பிள்ளையைக் கைபிடிப்பார் சஞ்சய்தத்.

இதற்கு முன்னர் சஞ்சய்தத் ரிச்சா சர்மா என்னும் நடிகையை மணந்திருந்தார். அவரோடு அமெரிக்கா சென்று சிலகாலம் இருந்தார் சஞ்சய்தத். ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. இப்போது ஏழு வயது. ரிச்சா சர்மா மூளைப் புற்றுநோயால் நோயாளியாகிவிட்டதால் அவரைவிட்டுப் பிரிந்தார் சஞ்சய்தத்.

பின்னர் மாதுரி டிக்ஷித்தை சீரியசாகக் காதலித்தார். மீனாட்சி டிக்ஷித்தும் காதலித்தார். சஞ்சய்தத் சிறைக்குப் போனதும் மாதுரி டிக்ஷித் தனது காதலை போட்டு மூடிவிட்டார். அதனால் மனமுடைந்திருந்த சஞ்சய்தத்துக்கு இப்போது ஆறுதல் கொடுப்பது ரியாப்பிள்ளையின் தரிசனம் மட்டுமே.

## அகாசியின் லவ்வு

டென்னிஸ் வீரர் அகாசி சமீபத்தில் நடந்த அமெரிக்க ஓபன் டென்னிசில் பீட் சாம்ராசிடம் தோற்றுப்போனது தெரிந்த சங்கதி.

தோல்வியடைந்தாலும் இளைஞர்களையும், இளைஞிகளையும் கவரும் ஆட்டக்காரர் அவர்தான்.

அகாசியின் தோல்விக்கு மருந்து அவரது காதலி சீல்டுதான். பயிற்சி எடுக்கும்போதும் அகாசியோடு ஒட்டியபடியே இருக்கிறார் சீல்டு. இடைக்கிடையே போனஸாக முத்தங்கள். ஏனைய பயிற்ச்சியாளர்கள் விரும்பினால் வெட்கப்பட்டுக் கொள்ளலாம். குறுக்கிட முடியாது.

அகாசிக்கு 24 வயது. காதலி சீல்டுக்கு 30 வயது. வயசு பற்றி பேச்செடுத்தாராம் ஒரு நிருபர். சீல்டுக்கு பொத்திக்கொண்டு வந்தது போபம்.

"எங்களுக்கு எத்தனை வயதானால் உங்களுக்கென்ன?" கேட்டுவிட்டு, நிருபர் முன்னிலையே அகாசியை வளைத்து ஒரு முத்தம். அகாசியும் ஈடுபாட்டோடு இறங்கி விட பொறுக்கமுடியாமல் இடத்தைக் காலி செய்துவிட்டார் நிருபர்.



அகாசி — சீல்டு



படிப்பகம்


www.padippakam.com

# கொக்கக் கொக்கக் கேக்கக் கெக்கக்



கோழி குப்பையைக் கிளறும். தமிழ்நாட்டில் கழுகுமலை வின்சென்ட் நகரில் உள்ள கோழி காண்பவர் களிடமெல்லாம் வியப்பைக் கிளறிக் கொண்டிருக்கிறது. காரணம், மூன்று கால்கள். மூன்று கால்கள் இருப்பதால் குப்பையை கிளற மேலும் வசதி. ஆனால், இக் கோழியின் உரிமையாளர் சே.கனகராஜா குப்பையின் பக்கமே இதனைச் செல்ல அனுமதிப்பதில்லை. தனது அதிசயக் கோழியை வேடிக்கை காட்டியே கைநிறையச் சம்பாதிக்கிறார். தூரச்சந்தை கூடும் நாட்களில் கண்காட்சி நடத்தி சமார்த்தியமாக சம்பாதிக்கிறார். சந்தைக்கு கோழி கொண்டு வரப்படுவது இறைச்சிக்காக. இந்த அபூர்வ கோழி வருவது கலெக்ஷனுக் காக.





## கட்டிக்கோ அன்பையெல்லாம் கொட்டிக்கோ

ஒஸ்ரியாவில் உள்ள சாஸ்பேர்க் மிருகக்காட்சிச் சாலையில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. இதற்குள் ஒரு கதை இருக்கிறது. ஒட்டகத்தோடு ஒட்டியிருப்பவர் மிருகக்காட்சிச் சாலைப்பொறுப்பாளர். சிலநாட்கள் சுகவீனம் காரணமாக லீவில் இருந்தாராம். அவரைக் காணாமல் தவித்துப் போன ஒட்டகத்தார் அவர் திரும்பி வந்தபோது ஆனந்தக் கண்ணீரோடு முகத்தோடு முகம் சேர்த்துக் கொண்டது. பிரிவின் வேதனை ஒட்டகத்திற்கு மட்டுமில்லையா என்ன!



## அப்படியா சங்கதி!

**தகவல் பெட்டி**

நாயின் பெயர் ஃபிராங்கி. ஜோடியை இழந்த லவ்பேட் பறவை யொன்று தன் சோகக் கதையை காதோடு சொல்ல, வாஞ்சையுடன் கேட்டுக்கிறார் ஃபிராங்கி.. நினைத்தவுடன் 'லபக்' கென்று தின்றுவிடலாம் சிறுபறவையை. அப்படிச் செய்யாமல் பறவையின் வார்த்தைகளைக் கேட்டு சோகப்படுகிறது ஃபிராங்கி.

வித்தியாசமான நட்பு.

## நாயானது வீதியின் மேலே



முயற்சியோடு பயிற்சியும் சேர திருவிளை சிறப்பாகும். சைக்கிள்ஓட கற்றுக் கொண்ட சர்க்கஸ் நாயார். திடீரென்று வீதியில் ஒரு உலா. வாயில் சுங்கான். கண்ணுக்கு குளிர்ச்சியாக கறுப்புக் கண்ணாடி.. ஜோரு தான்.

## குறியும் தவறாது குண்டும் பாயாது

குறிபார்த்து விசையை தட்டிவிட்டால் டுமீல் என்று சத்தம் கேட்காது. துப்பாக்கிக் குண்டும் பறந்து வராது. ஆனால் நீங்கள் மாட்டிக் கொள்வீர்கள். சிரித்துக் கொண்டிருந்தால் சிரித்தபடியே மாட்டிக் கொள்ளுவீர்கள். அழுது கொண்டிருந்தாலும் அழுத படியே மாட்டிக் கொள்ளுவீர்கள். ஆனால் உயிருக்கு சேதம் ஏற்படாது. உடலுக்கு காயமும் ஏற்படாது.

அட... வித்தியாசமான துப்பாக்கியாக இருக்கிறதே என்று யோசிக்கிறீர்கள் அல்லவா?! அது துப்பாக்கி என்று யாருங்க சொன்னாங்க. அசல் கமெராவுங்க! கமெரா!

உலகிலேயே துப்பாக்கி வடிவில் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்ட கமெரா இது தான். இலண்டனில் இதனை ஏலம் விட்டார்கள். வாங்குவதற்கு பலத்த போட்டி. இறுதியில் 'எம்மா பிலேய்டன்' என்னும் பணக்காரப் பெண் தட்டிக்கொண்டார். 35 ஆயிரம் ஸ்ரேர்லிங் பணம் கொடுத்து இந்த புதுமையான கமெராவை கவர்ந்து கொண்டார்.

இப்போது கமெராவை வைத்து தனது தோழிகளை மிரட்டிக் கொண்டிருக்கிறார். 'அய்யயோ சுட்டுவிடாதேயடி' என்று அவர்கள் மிரளும்போது தத்ருபமாக ஒரு கிளிக்.



வீட்டுக்குள் திருடன் வருகிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள், இந்தக் கமெராவை கையில் எடுத்தால் போதும் மிரண்டு ஓடித்தப்பிவிடுவான். ஓடட்டும் என்று விட்டுவிட்டு கமெராவில் சிக்கிய திருடனின் படத்தை பொலிசில் ஒப்படைத்து விடலாம். கமெரா ஒன்று, லாபம் இரண்டு.

www.padippakam.com

## முத்து–முத்து–முத்து

தீபாவளி வெளியீடான ரஜினியின் 'முத்து' படத்தின் சிறப்பு அம்சங்கள் என்ன? இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் சொன்ன தகவல் இவை:

* ரஜினியின் இதுவரை வந்த படங்களைவிட 'முத்து' வில் அரசியல் வசனங்கள் அதிகம்.
* பட வசூலை அடிப்படையாக வைத்து சம்பளத்தை பின்னர் வாங்கிக் கொள்கிறேன் என்று ரஜினி அறிவித்துள்ள படம்.
* பல வருடங்களுக்குப் பின்னர் ஜோதிலட்சுமி இதில் கலக்கல் நடனம் ஆடியுள்ளார்.
* ரஜினியின் படத்தை கே.எஸ்.ரவிக்குமார் இயக்குவது இதுதான் முதற்தடவை.
* ரஜினியுடன் பொன்னம்பலம் மோதும் சண்டைக்காட்சி இதுவரை தமிழ் சினிமாக்களில் வந்திராத முற்றிலும் புதுமையான விதத்தில் எடுக்கப்பட்டுள்ளது.
* முதல் முறையாக ரஜினி படத்துக்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.
* பாடல்கள் வைரமுத்து. 'முத்து' படத்திற்காக வைரமுத்து எழுதியுள்ள பாடலில் சில வரிகள்;

**"மண்ணின்மீது மனிதனுக்காசை**
**மனிதன் மீது மண்ணுக்காசை**
**மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது."**

* ரஜினிபட வரலாற்றிலேயே இரண்டுவிதமான கிளைமாக்ஸ் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. சூழ்நிலையைப் பொறுத்து தேவையான கிளைமாக்ஸ் பொருத்தப்படும்.

## பட்டிக்காடா–பட்டணமா

சிவாஜிகணேசன், ஜெயலலிதா இணைந்து நடித்த படம் 'பட்டிக்காடா, பட்டணமா' அந்தக் காலத்தில் வசூலில் சக்கை போட்ட படம். 'அடி என்னடி ராக்கம்மா' பாடல் இன்னும்வரை காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

தற்போது 'பட்டிக்காடா-பட்டணமா' படத்தை தெலுங்கில் தயாரிக்கிறார்கள். சிவாஜி நடித்த பாத்திரத்தில் கன்னட நடிகர் ரவிச்சந்திரன் நடிக்கிறார். ஜெயலலிதா நடித்த பாத்திரத்தில் இந்தி நடிகை ஜுகி சாவ்லா நடிக்கிறார்.

# சினிவிசிட்

## மேக்–அப் இல்லாத ரோஜா

மேக்-அப் இல்லாமல் நடிப்பதற்கு நடிகைகள் சம்மதிப்பதே அபூர்வம். அதுவும் முன்னணி நடிகைகள் என்றால் கேட்கவே வேண்டாம். ஆனால் ரோஜா சம்மதித்து விட்டார். காரணம், மேக்-அப் இல்லாமல் நடிக்கச் சொன்னவர் பாரதிராஜா. பாரதிராஜாவின் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் படத்தில்தான் மேக்-அப் இல்லாமல் நடிக்கிறார் ரோஜா.

## சரத் மூன்று வேடங்களில்

'அரவிந்தன்' படத்தில் மூன்று வேடங்களில் சரத்குமார் நடிக்கிறார். இரண்டு வேடங்களில் நடிப்பதாக முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 'நாட்டாமை'யில் இரு வேடங்களில் நடித்து விட்டதால், அரவிந்தனில் மூன்று வேடங்களில் நடிக்க விரும்பினார் சரத்குமார். அதற்கேற்ப கதை தயாராகிவிட்டது. படப்பிடிப்பு ஆரம்பமாகிவிட்டது.

## அம்மன் கோவில் வாசலிலே

'தேடிவந்த ராசா' படத்தின் வசூல் சுமாராக இருந்தாலும், தயாரிப்பாளருக்கு கையைக் கடிக்கவில்லை. தயாரிப்பாளர் ராமராஜன்தான். அதனால் இப்போது புதிய படம் ஒன்றுக்கு பூஜை போட்டுவிட்டார். ராமராஜனோடு ஜோடியாக நடிப்பவர் சங்கீதா.

கிராமத்து பள்ளிக்கூட ஆசிரியராக நடிக்கிறார் ராமராஜன். சங்கீதாவோடு இன்னொரு கதாநாயகியும் நடிக்கிறார். தேர்வு நடைபெற்று வருகிறது.

## மிஸ்டர்...

'மிஸ்டர் தேவ... புதிய படம் ஒ... பட்டுள்ளது. இர... பதிவு செய்யப்ப...

ஜெயராம் ... கிறார். கதாநாய... கவுண்டமணி, ... நடிக்கின்றனர்.

இசை தேவா, இயக்கம் ராசி அ... மோகன்.

## பிரியமானவ...

பார்த்திபன் நடிக்க 'பிரியமா... படம் தயாரிக்க... இப்போது திட்ட... போட்டு விட்டு ... போகிறார்.

அநேகமாக மசாலாவாக பு... போகிறார் என்று... தால் அதிக மசா... என்பதால் புதிய... விட்டு 'பிரியமா... என்று நினைக்கி...

## கவர்ச்சி...

'மீண்டும் சாவி... காணாத ரேவதியை... கிறார் இயக்குநர் ... காபரே டான்சராக ... தோன்றுகிறாராம் ... ஹோட்டலில் ரேவதி... படமாக்கப்பட்டுள்ள...



ஊர்வசி
படம்: ஆயுத பூஜை

## ரகுமான் சாதனை

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் ஒரு படத்திற்கு இசையமைத்து முடிக்க பல மாதங்கள் எடுத்துக் கொள்வது தெரிந்த விஷயம். ஆனால், முத்து படத்திற்கு பதினைந்து நாளில் அனைத்து பாடல்களுக்கும் இசையமைத்து முடித்தாராம் ஏ.ஆர்.ரகுமான்.



ரஞ்சிதா
படம் முஸ்தபா

## அவளுக்குத் தான் கெட்ட பெயர்

இந்தி நடிகை சங்கீதா பிஜ்லனி தாராளமானவர். அவர் யாரோடு இணைந்து நடித்தாலும் உடனே கிசு-கிசு கிளம்பி விடுகிறது. சல்மான்கானோடும் சங்கீதாவுக்கு ஒரு 'இது' என்று பரவலான கிசு-கிசு. இந்தி கிரிக்கெட் கப்டன் அசாருதீனோடு சங்கீதா சுற்றுகிறார் என்று அறிந்தவுடன் சல்மான்கான் மெல்ல கழன்று கொண்டார். அசாருதீனை சங்கீதா கல்யாணம் செய்து கொள்ளப் போவதாக பம்பாயில் பரவலான கதை. வம்புகளுக்கு பதில் சொல்லமாட்டேன் என்று அசாருதீன் பிடிவாதமாகச் சொல்லுகிறார். சங்கீதா பிஜ்லனி சமீபத்தில் பம்பாய் சஞ்சிகை ஒன்றுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்.

"நான் அசாருதீனின் பரம ... அவரை அடிக்கடி சந்திப்பதும் ... ஆனால், நீங்கள் நினைப்ப... ஒன்றுமில்லை. நான் அவ... செய்து கொள்ள போவ... சத்தப்பிதற்றல். ... கொன்றும் இல்ல... தான் கெட்... ஜென்டில்... இரு...



## 18 வயதில் புதுமுகம் தேவை

பிரபல படத் தயாரிப்பாளர் நாகிரெட்டியாருக்காக டி.ராஜேந்தர் இயக்கும் படம் 'இளம் காதலர்கள்'. இப்படத்தில் நடிப்பதற்காக பம்பாயிலிருந்து 18 வயதுள்ள கதாநாயகியை இறக்குமதி செய்யப்போகிறார் நாகிரெட்டியார். பம்பாயில் சினிமா உலகில் 18 வயதில் யாரும் இல்லாவிட்டால் புதுமுகமாக இறக்குமதி செய்யப்போகிறாராம். கதை-திரைக்கதை வசனம், பாடல்கள், இசை, ஒளிப்பதிவு என்று பல பொறுப்புக்களை வாங்கி தனது தலைமையில் போட்டிருக்கிறார் டி.ராஜேந்தர். முரட்டுச் சுபாவமுள்ள பத்திரிகையாளராகவும் நடிக்கிறார் டி. ராஜேந்தர். டி.ராஜேந்தரின் மகன் சிலம்பரசனும் நடிக்கிறார். காதலுக்கு தூது செல்லும் பாத்திரம் சிலம்பரசனுக்கு. கதாநாயகன் யார் என்பதும் இன்னும் முடிவாகவில்லை.

கார்த்திக்–கனகா
படம்–கட்டப் பஞ்சாயத்து

முகப்பில்



அர்ஜுன் -ரோஜா
படம் ஆயுத பூஜை

## என்ன பண்ணணும் மாமா?
### ஒரு காட்சியின் கதை–வசனம்

'மாமன் மகள்' படத்தில் சத்யராஜின் மாமாவாக நடிக்கிறார் மணிவண்ணன். சத்யராஜ், கவுண்டமணி, மணிவண்ணன் சம்பந்தப்பட்ட காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. அக்காட்சியின் கதை-வசனம் கேட்க ஆசையா? இதோ கேளுங்கள்.

சத்யராஜும், கவுண்டமணியும் ஒரு மாளிகையில் அமர்ந்திருக்கின்றனர். மணிவண்ணன் அங்கு பதட்டத்தோடு வருகிறார். அவரைப் பார்த்ததும் சத்யராஜ் எழுந்து:

**சத்யராஜ்:** என்ன மாமா திடீர்னு...?

**மணிவண்ணன்:** மாப்ளே, என் மனைவி ஒரு அடங்காப்பிடாரி. என்னை ஒரு ஆளாவே நினைப்பதேயில்லை. வெட்கத்தைவிட்டு சொல்றேன் மாப்ளே, அவளை நான் தொட்டு இருபது வருசமாகிறது. கிட்ட நெருங்க விடமாட்டாள். அவள்கூட சேர்ந்து என் பொண்ணும்அப்படியாகிவிடக் கூடாது. என் குடும்ப கௌரவம் உன்கையில் தான் இருக்கு மாப்ளே."

**சத்யராஜ்:** நான் என்ன பண்ணணும் மாமா?

**மணிவண்ணன்:** நீ நேரா ஊருக்கு வர்றே. என் மகளை சைட் அடிக்கிறே. காதலிச்ச கல்யாணம் பண்ணிக்கிறே.."

**கவுண்டமணி:** "அதைத்தான் பார்ட்டைமா இவர் இங்கேயே செய்யறாரே, சைட் அடிக்கிறதுன்னா இவருக்கு அல்வா சாப்பிடுறமாதிரி."

ஒரு காட்சி இத்தோடு முடிந்தது.

முதல் பார்வையே விதையானது
மறு பார்வையே மழையானது
விதை எழுந்த...
நிலம் பி...
து...



படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

* பாரதிராஜாவின் 'பசும்பொன்' படத்திற்கு கதை, வசனம் எழுதியுள்ள சீமான் தற்போது பிரபு-மதுபாலா நடிக்கும் 'பாஞ்சாலங்குறிச்சி' என்ற படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தை சின்னத்தம்பி படத்தை தயாரித்த கே.பாலு தயாரிக்கிறார்.

* கமல் நடித்த 'சுபசங்கல்பம்' (பாசவலை) தெலுங்கில் வெற்றிகரமாக ஓடியதை அடுத்து, அவர் தமிழில் நடித்த 'நம்மவர்' படத்தை 'புரபொஸர் விஸ்வம்' என்ற பெயரில் தெலுங்கில் மொழிமாற்றி வெளியிட்டார்கள். இப்போது 'புரபொஸர் விஸ்வம்' தெலுங்கில் வெற்றிகரமாகப் போகின்றது.

* வி.சேகர் தற்போது இயக்கிவரும் புதிய படத்தின் பெயர் 'காலம் மாறிப் போச்சு' இந்தத் தலைப்பு மறைந்த நட்சத்திர இயக்குநரான ராஜசேகர் சில வருடங்களுக்கு முன்னர் ரஜினியை வைத்து எடுத்த 'தர்மதுரை' படத்திற்கு முதலில் வைக்கப்பட்டதாகும்.

* 'உதயம்' படத்தை இயக்கியுள்ள ராம்கோபால் வர்மா இந்தியில் இயக்கிய 'ரங்கீலா' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. இதைத் தொடர்ந்து இவர் தெலுங்கில் 'குலாபி' என்ற படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் 'கருத்தம்மா' மகேஸ்வரி கதாநாயகியாக நடிக்கிறார்.

* மம்முட்டி- அரவிந்தசாமி இணைந்து நடிக்க கோவை செழியன் தயாரிக்கும் படத்திற்கு 'புதையல்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. 'கர்ணா' படத்திற்குப் பின்னர் செல்வா இப்படத்தை இயக்குகிறார்.

* மலையாளப் படவுலகில் தற்போது முன்னணியில் இருக்கும் ஆனி, கமலுடன் 'கண்டேன் சீதையை' படத்திலும், கார்த்திக், சரத்குமார் ஆகியோருடன் தலா ஒவ்வொரு படங்களிலும் நடிக்கவிருக்கிறார்.

* அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க, பாக்கியராஜின் சிஷ்யர் சிவகுமார் இயக்கும் 'அயுதபூஜை' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடித்து வருகிறார். இப்படத்தின் ஒளிப்பதிவாளார் பன்னீர்செல்வம்.

* பிரபு-மோகன்லால் நடிக்கும் மலையாளப்படமான 'காலாபாணியை' தமிழில் 'சிறைச்சாலை' என்ற பெயரில் எஸ்.தாணு வெளியிட உரிமை பெற்றுள்ளார். இந்தப்படத்தை இந்தியில் வெளியிடும் உரிமையை அமிதாப்பச்சனும் கன்னடத்தில் வெளியிடும் உரிமையை நடன இயக்குநர் சுந்தரமும் (பிரபுதேவாவின் தந்தை) வாங்கியுள்ளனர்.

* 'புதுப்பாட்டு' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகி 'பெரும்புள்ளி' 'மாநகரகாவல்' போன்ற படங்களில் நடித்துள்ள சுமாரங்கநாத், பிரபல இந்தி இயக்குநர் மகேஷ் பட்டின் சகோதரர் விக்ரம் பட் இயக்கும் இந்திப் படமொன்றில் நடித்து வருகிறார்.

## ஆகாஷவாணி

தமிழிலும், தெலுங்கிலும் ஒரே நேரத்தில் தயாராகிவரும் படம் ஆகாஷவாணி. அருண்பாண்டியன் கதாநாயகனாக நடிக்கிறார். படத்தை இயக்குவது அருண்பாண்டியனின் சகோதரர் துரை பாண்டியன்.

அருண்பாண்டியன் -ஷோபனா நடத்துள்ள 'துறைமுகம்' படம் விரைவில் திரைக்கு வருகிறது.

## ஆங்கில நடிகை

அர்ஜுன்-ரம்பா-மீனா ஆகியோர் நடித்துவரும் படம் செங்கோட்டை. அதில் ஆங்கில நடிகை ஒருவரும் நடிக்கிறார். அவரது பெயர் பிராங்கா.

## ஓடிவந்த பெண்கள்

இயக்குநரும் நடிகருமான ஆர்.பார்த்திபன் வீட்டுக்கு நடிப்பு ஆசையில் ஓடிவந்தார்கள் மூன்று பெண்கள். அட்வைஸ் பண்ணி அவர்களை சொந்த வீடுகளுக்கு திருப்பி அனுப்பி வைத்தாராம் பார்த்திபன்.

## முதலிடத்தில் மீனா

'முத்து' படம் வெளியானவுடன் தமிழ்ப் படவுலகில் முதலிடத்தைப் பிடித்துவிடுவார் மீனா. ரோஜாவோடு போட்டியிட்ட மீனா இப்போது ரோஜாவை பின்னே தள்ளிவிட்டார். ரோஜா நடித்த பல படங்கள் அடி வாங்கியதால் மீனாவுக்கு வெற்றி வாய்ப்பு பலாப்பழம் போல கிடைத்து விட்டது.

புதுமுக நடிகர்கள் தவிர யாருடனும் ஜோடி சேரத் தயார் என்று அறிவித்துள்ளார் மீனா. புதுமுக நடிகர்களோடு ஜோடி சேருவதில் என்ன தயக்கம்? மார்க்கெட் இல்லாத நடிகை என்று நினைத்துவிடுவார்களாம்.


மீனா
படம்: முத்து

## மலையாளத்தில் 'எம்பரர்'

பிரபலமானவர்களின் கதைகள் வசதியாக அகப்பட்டால் உடனே படமாக்கிவிடுவதில் பலத்த போட்டி இருப்பது தெரிந்த சமாச்சாரம்தானே. சிங்கப்பூரில் மோசடி செய்துவிட்டு இந்தியாவில் பிடிபட்டு சிறையில் மாரடைப்பால் இறந்துபோனவர் ராஜன்பிள்ளை. அவர் பிரபல தங்கக் கடத்தல் மன்னன். அவரது மரணம் பெரும் சர்ச்சையாகியது. இப்போது மலையாளத்தில் 'எம்பரர்' என்ற பெயரில் படமாகிறது. ராஜன்பிள்ளையாக நடிப்பவர் மோகன்லால்.

## கார்த்திக்கின் வாரிசு

நடிகர்களின் குட்டி வாரிசுகள் நடிக்க வருவது ஒன்றும் புதுமையல்ல. கார்த்திக் தனது மகனை நடிக்கவைக்கப் போகிறார். தற்போது தனது மார்க்கெட் டல்லாகி இருப்பதால், மீண்டும் பிஸியாகிய பின்னர் மகனை நடிக்க வைக்கலாம் என்று நினைக்கிறார் கார்த்திக். தற்போது நடிக்க வைத்தால் மகனை வைத்து பிழைக்கப் பார்க்கிறார் என்று தப்பாகப் பேசுவார்களாம்.

## தினசரி காயம்

சமீபகாலமாக வில்லன் நடிகர்களில் தனியிடம் பிடித்திருப்பவர் பொன்னம்பலம். அவர் நடிக்கும் ஒவ்வொரு படத்திலும் அவருக்கு காயம் இல்லாமல் போனால் ஆச்சரியம்தான். படப்பிடிப்பு முடிந்து காயமில்லாமல் அவர் வீட்டுக்குச் சென்றால் பெரிய விஷயமாக நினைத்து சந்தோஷப்படுவார்களாம்.


ரஜினி-மீனா
படம்: முத்து

## அம்மாவுக்கு டாட்டா

'டூயட்' படத்தில் நடித்து தமிழ்பட ரசிகர்கள் மத்தியிலும் ரொம்ப பிரபலமானவர் மீனாட்சி சேஷாத்திரி. அதற்கு முன்னர் 'என் ரத்தத்தின் ரத்தமே' படத்திலும் நடித்திருக்கிறார்.

இந்திப்பட உலகில் கொடிகட்டிப் பறந்தவர். கொடிகட்டிப் பறந்தபோது இயக்குநர் ராஜ்குமார் சந்தோஷியை 'லவ்' பண்ணினார். மீனாட்சியின் அம்மா வில்லியாக மாறினார். நடிகைகள் திருமணம் செய்வதை அவர்களது அம்மாக்கள் லேசில் விடமாட்டார்கள். பணமும் சேர்ந்து போய்விடுமல்லவா. மீனாட்சிக்கும் அதுதான் நடந்தது. அதனால் உஷாரான மீனாட்சி அமெரிக்க தொழிலதிபர் ஒருவரை காதும் காதும் வைத்த மாதிரி காதலித்தார். அம்மாவுக்கு அல்வா கொடுத்து விட்டு அமெரிக்காவுக்கு பறந்து திருமணமும் முடித்து, மணமகன் சகிதம் திரும்பினார். அம்மாவால் மெள்ளவும் முடியவில்லை. விழுங்கவும் முடியவில்லை.

## மாமனிதர் தயார்

நெப்போலியன் -வினிதா நடித்துள்ள 'மாமனிதன்' படப்பிடிப்புக்கள் முடிவடைந்து விட்டன. திரைக்கு வர தயாராகிவிட்டது.

ரகுமான்-நிரோசா ஜோடி நடித்துள்ள 'வசந்தம்' படமும் முடிவடைந்து விட்டது. தீபாவளிக்கு வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். 'வசந்தம்' திகில் படம். 7 வயது சிறுவன். துப்பறியும் காட்சிகள் அசத்தலாகப் படமாக்கப்பட்டுள்ளது.

## யார் அந்த இளைஞன்?

மடிப்பு அம்சாவாக அறிமுகமாகி கவர்ச்சி காட்டிவரும் விசித்ரா ஒரு இளைஞரோடு சென்னையில் உள்ள ஸ்டார் ஹோட்டலில் தங்கியிருக்கிறார். செம்பட்டை முடியோடு காணப்படும் அந்த இளைஞர் யார் என்று மட்டும் சொல்ல மறுக்கிறார் விசித்ரா. படப்பிடிப்பு முடிந்தவுடன் நேராக ஸ்டார் ஹோட்டலுக்கு பறந்துவிடுகிறாராம் விசித்ரா. விசித்ராவின் பிரத்தியேக கவனிப்பை எதிர்பார்க்கும் தயாரிப்பாளர்கள் அதனால் வெறுத்துப் போயிருக்கிறார்களாம்.


மாதுரி டிக்ஷித்


சங்கீதா பிஜ்லானி

## காதோடு சொல்லுகிறோம்

இராமராஜனும் அவரது நளின மாஜி நட்சத்திர மனைவியும் பிரிந்து விட்டனர். இருவருமே உண்மையான காரணத்தை கூற மறுப்பதாக சினிமா நிருபர்கள் வட்டாரம் கூறுகிறது. சிங்கப்பூரில் உள்ள ஒருவரோடு சம்பந்தப்பட்ட பிரச்சனை வெடித்தது என்று தகவல். சிங்கப்பூரில் இருப்பவர் பிரபல தொழிலதிபராம்.

வைரமான கவிஞரை தமிழக முதல்வர் வட்டாரம் வளைத்துவிட்டதாம். அவர்களது டி.வி நிறுவனத்தில் ஒரு தொடரை இயக்க வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறதாம். இதனால் 'தமிழ்ழத் தலைவரை' புகழ் பாடுவதை நிறுத்திவிருக்கிறாராம் கவிஞர். இது எத்தனை நாளைக்கு என்கிறார்களாம்.

கஸ்தூரமான நடிகைக்கு வாய்ப்புக்கள் அதிகமில்லை. அதனால் வீட்டை படப்பிடிப்பு நடத்த வாடகைக்கு விட்டிருக்கிறார். படப்பிடிப்பு நடக்கும் போது வீட்டில் இருந்தால் கௌரவக் குறைச்சல் என்று வெளியே போய் விடுகிறாராம்.

'விசித்ர' நடிகை தனது தங்கையையும் சினிமாவில் இறக்க முடிவு செய்துவிட்டாராம். இயக்குநர் ஒருவரிடம் அழைத்துச் சென்று உரிய முறையில் அறிமுகம் செய்து வைத்துள்ளாராம். அந்த இயக்குநர் வேறு யாருமல்ல, 'பூ' நடிகையோடு சமீபத்தில் கிசு-கிசுக்கப்பட்டவர். தங்கைக்கு 'சான்ஸ்' நிச்சயம்.

'வளி' என்பதோடு முன்னால் ஒரு எழுத்தைச் சேர்த்தால் அந்த நடிகையின் பெயர் வரும். 'மிஸ்டர் மூர்த்தி' படத்தில் காந்த நடிகரோடு நடித்தவர். ஏற்கனவே அந்த நடிகை நடித்த மலையாளப்படங்கள் சிலவற்றை சென்னையில் திரையிட்டுள்ளதாம். அதனால் மூட் அவுட்டாகிவிட்டாராம் நடிகை. படங்கள் ...ந்தமாதிரி.

www.padippakam.com

சுய பரிசோதனை

# தடித்தோல் ஆசாமியா நீங்கள்?

எதற்கெடுத்தாலும் கண்ணைக் கசக்கு வர் சிலர். பெண் என்றால் கிளிசரின் போடாமலேயே கண்ணீர் வந்துவிடும். ஆணாக இருந்தால், மனதிற்குள் புழுங்கு வார்கள். இதுபோல மெல்லிய இதயம் கொண்ட மனிதர்கள் இருக்கத்தான் செய்கின்றனர்.

வாழ்க்கையில் எல்லா கஷ்டங்களும் இருக்கத்தான் செய்யும்: ஏற்றத்தாழ்வு வரும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்ப வர் வெகுசிலரே!

இந்த சுயபரிசோதனை சற்று வித்தியாசமானது. ஆண்களாக இருந்தா லும், பெண்களாக இருந்தாலும் மூன்று வகையானவர்கள் உள்ளனர்.

முதல் வகையினர் வெங்காயத் தோலினர். இரண்டாவது, உருளைக் கிழங்கு தோலினர். மூன்றாவது ஆரஞ்சு தோலினர்!

நீங்கள் எப்படிப்பட்டவர் என்பதை பார்த்து விடுவோமா, பார்த்து விடுவோம். ஒ.கே. ஸ்டார்ட்....'ஆமாம்', 'இல்லை' போட்டுக் கொள்ளுங்கள்!

1. பல ஆண்டுகள் முன்பு நடந்த விஷயமாக இருந்தாலும் தெளிவாக என் நினைவில் இன்றும் இருக்கும். உரை யாடல்களைக் கூட துல்லியமாக நினைவில் வைத்திருப்பேன். விரிவாக இப்போதுகூட அவற்றைச் சொல்ல முடியும்.

2. எந்தவொரு விஷயத்தையும் பார்த்த மாத்திரத்தில் ஏற்றுக் கொள்ளமாட்டேன். சிறிதளவாவது விளக்கம் தெரிந்து கொள்ள முயற்சிப்பேன்.

3. எதற்கெடுத்தாலும் வெட்கப்படுவது எனது குணம்.

4. என் சம்பந்தப்பட்ட விஷயத்தில், என்னைமீறி கட்டுப்பாடின்றி நிலைமை போய்விட்டால், கொஞ்சம்கூட தயங்காமல் மன்னிப்புக் கேட்டுவிடுவேன்.

5. யாருடனாவது பேசிக்கொண்டிருந் தால் எனது உரையாடலில் அடிக்கடி 'அப்படீன்னா என்ன அர்த்தம்?' என்று கேட்பேன்.

6. நண்பன் யாராவது என்னை அவன் நடத்திய விருந்துக்கு அழைக்க வில்லை யென்றால், என் சம்பந்தப்பட்ட விழா, பண்டிகைகளுக்கு அவனுக்கு அழைப்புத்தர மாட்டேன்!

7. என்னை யாராவது பார்த்து, 'என்ன! இப்படி குண்டாகி விட்டீர்கள்?' என்று கேட்டு விட்டால் அவ்வளவுதான், என்மனதை அந்த வார்த்தைகள் குடைய ஆரம்பித்துவிடும். உணவு முறையை மாற்றி, உடல் மெலியத் துவங்கி விடுவேன்.

8. ஒரு விஷயத்துக்குக் கூட உதட்டைப் பிதுக்காமல் இருக்க மாட்டேன்.

9. உங்களது நரைமுடி நன்றாக இருக்கிறது என்று யாராவது சொன்னால், உண்மையில் உங்களுக்கு வயதாகி விட்டதாக அவர்கள் சொல்ல முயற்சிக்கின்றனர் என்றே அர்த்தம் எடுத்துக் கொள்வீர்கள்!

10. நான் பேசும் போது யாராவது உச்சரிப்பை சரி செய்தார்களானால் அந்த விஷயம் சிலமணிநேரம் வரை மனதை அலைக்கழிக்கும்.

11. ஒரு வேலை செய்துமுடித்ததும், 'ஆஹா... பிரமாதம்...' என்று என் 'பாஸ்' சொல்வதையே விரும்புவேன்! 'ஓ.கே.நைஸ்' என்று சொன்னால் அது என் மனதை அரிக்கும்!



12. தன் குழந்தை பற்றி என்னிடம் பெருமையாக எந்த பெற்றோராவது கூறினால், அது என் குழந்தையை மட்டம் தட்டி பேசுவதாகவே நினைப்புவரும்!

**எத்தனை 'ஆமாம்' சொல்லிக் கொண்டீர்கள். விடையைப் பாருங்கள்.**

**மதிப்பெண்**

▫ 9-12 'ஆமாம்': இவர்கள் வெங்காய தோல் போன்ற மெல்லிய இதயம் உடைய வர்கள். யாராவது ஏதாவது சொன்னால் அவ்வளவுதான் கண்களைக் கசக்கத் துவங்கி விடுவர். ஆண்களை எடுத்துக் கொண்டால் மனதிலுள் புழுங்குவார்கள்; இது தவறு!

இவர்கள் இப்படி எதற்கெடுத்தாலும் கண்களைக் கசக்கக்கூடாது. இப்படி இருந்தால் எந்த விஷயத்திலும் 'ஷைன்' பண்ண முடியாது.

'ஏன் மற்றவர் நம்மீது குறை கூறு கிறார்கள்?' என்பதை எப்போதும் எண்ணு வதை விட்டு, உங்கள் விஷயத்தில் தைரிய மாக செயல்பட முயற்சிக்க வேண்டும்.

எதற்கெடுத்தாலும் தன்னைத்தானே நொந்து கொள்பவர்கள், அடுத்தவரை அனாயாசமாக பேச தூண்டுகிறார்கள் என்பது தான் அர்த்தம். நாம் திடமாக இருந்தால் அடுத்தவர் ஏன் பேசப்போகிறார்கள்.

5-8 'ஆமாம்' இவர்கள் உருளைக்கிழங்கு தோல் போன்ற மனம் கொண்டவர்கள். அடுத்தவர் என்ன கருத்துச் சொன்னாலும் உடனடியாக வருந்த மாட்டார்கள். மனதை ஓரளவு பாதித்தாலும் உடனடியாக கவலைப் பட மாட்டார்கள். 'என்ன இப்படி செய்து விட்டீர்கள்?' என்று யாராவது கூறினாலும், அதற்காக சோர்ந்து விடுபவர் அல்ல.

உங்களைப்பற்றி ஒரு கணிப்பு உங்களுக்கு உண்டு. அதனால் மற்றவர் சொல்வதை உடனே ஏற்க மாட்டீர்கள். எனினும் உதாசீனப் படுத்தவும் மாட்டீர்கள்.

நண்பர்கள், உறவினர் கருத்துக்கு மதிப்பு கொடுத்து செல்வதாக கூறுவீர்கள். எனினும் மனதில் லேசான கவலை இருக்கும். வெளிக்காட்ட மாட்டீர்கள்.

உண்மையில் தவறு இருந்தால் திருத்திக் கொள்வீர்கள்.

0-4 'ஆமாம்': இவர்கள் ஆரஞ்சு தோலைப் போன்ற தடித்த மனம் உடையவர்கள். யார் என்ன சொன்னாலும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள். 'இவர்கள் ஏன் இப்படி கருத்துச் சொல்கிறார்கள்?' என்ன காரணம் என்று ஆராய்வார்கள்.

ஆனால் சிலரோ, 'இவர் மாதிரிதான் இருக்க வேண்டும். எந்த பெரிய விஷயமானாலும் அடக்கமாக பொறுமையுடன் கையாள்கிறார்,' என்று பாராட்டுவார்கள்.

# லேடீஸ் ஸ்பெஷல்

## ஆராரோ ஆரிரரோ



★ குழந்தைகளுக்கு பால் ஊட்டுவதற்கு முன்பு தாய்மார்கள் சத்துள்ள நீர் ஆகாரங்கள், பழரசங்கள் போன்றவற்றை அருந்தினால் பால் உற்பத்தி அதிகமாகும். பாலூட்டும் தாய்மார்கள் ஊட்டமுள்ள உணவு வகைகளைச் சாப்பிட வேண்டும். அவர்கள் சாப்பிடக்கூடாத உணவு என்று எதுவுமில்லை.

★ குழந்தை நன்றாகத் தூங்கினால், அதன் எடை எதிர்பார்த்தபடி அதிகரித்தால், அடிக்கடி சிறுநீர் கழித்தால் உங்கள் பால் போதிய அளவு உள்ளது என்று அறிந்து கொள்ளுங்கள்.

★ தாய்ப்பால் மிக எளிதில் ஜீரணமாகக் கூடியது. குழந்தைகளுக்கு ஜீரணத்திற்காக கிரைப்வோட்டர், வசம்பு போன்றவற்றைக் கொடுப்பது ஆபத்தானது. பால்மட்டும் குடிக்கும் குழந்தைகளுக்குத் தண்ணீர் கூடத் தேவையில்லை.

★ முதல் சில வாரங்களில் குழந்தைகள் ஒவ்வொரு முறை பால் குடித்தவுடனும் மலம் கழிப்பார்கள். இதை அறியாமல் விளக்கெண்ணை கொடுப்பதோ அல்லது சோப்புத்துண்டு வைப்பதோ ஆபத்தானது.

★ ஒவ்வொரு முறை பால் கொடுத்தவுடனும் குழந்தையைத் தோளில் போட்டு மெதுவாக முதுகைத்தட்டி, ஏப்பம் எடுக்கச் செய்ய வேண்டும். இந்தச் சமயத்தில் சிறிது பால் கக்குவதால் எந்தத் தீங்கும் இல்லை. பால் கக்குவது இயற்கையான செயல், இது ஜீரணக் குறைவினால் அல்ல.

★ பணிபுரியும் தாய்மார்களும் தொடர்ந்து குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். வேலைக்குச் செல்லும் முன்பும், திரும்பி வந்த பின்னரும் பால் கொடுக்கலாம். கட்டுப்பால் என நினைத்துப் பாலை வீணாக்க வேண்டாம். வேலைக்கு சென்றிருக்கும் நேரங்களில் மட்டும் புட்டிப்பால் கொடுக்கலாம்.

# இது சமைப்பதற்கு முன்

காய்கறிகளைத் தண்ணீரில் போட்டுப் பிறகு தண்ணீரைக் கொதிக்க வைக்கக்கூடாது. இதைவிடத் தண்ணீரைக் கொதிக்க வைத்துப் பிறகு காய்கறிகளை வேகவைப்பது நல்லது. தக்காளி போன்றவற்றை அதிகநேரம் வேகவைக்கக்கூடாது. முடிந்தால் வேகவைக் காமல் அப்படியே சமையலுக்குப் பயன் படுத்துவது நல்லது.



காய்கறிகள் வெந்த தண்ணீரைச் சிலர் கீழே கொட்டி விடுகிறார்கள். இதுவும் தவறான முறை. காய்கறிகள் வேகும்போது சில உப்புச்சத்துக்கள் வெளிப்பட்டுத் தண்ணீருடன் கலக்கின்றன. அந்நீரை வடிகட்டும் போது சத்து வெளியேறிச் சக்கை தான் மிஞ்சுகிறது. எனவே குறைந்தளவு நீரை வேகவைப்பதற்குப் பயன்படுத்தி, அந்நீரை சமையலுடன் சேர்த்துச் சமைத்துவிட வேண்டும்.

பருப்புப் போன்ற சில பொருட்கள் விரைவில் வேகவில்லை என்பதற்காக சிலர் சோடா உப்பைப் போட்டு அதை வேக வைக்கிறார்கள். இதுவும் தவறு. இவ்வாறு செய்வதால் பருப்பு வெந்து குழைந்தாலும் அதன் உயிர்சத்து நாசமடைகிறது. எனவே இம்முறையைக் கைவிட்டு விடுவது நல்லது.

வேகவைக்கும் பொருட்களை அதிக நேரமும் வேக வைக்கக் கூடாது ஏனெனில் அதிக நேரம் வேகும் போது காய்களின் உயிர்சத்து அழிந்துவிடுகிறது.

வேகவைக்கும் முறையில் மேற்கூறிய கருத்துக்களை மனதிற் கொண்டு சமையல் செய்வது நலம் பயப்பதாகும்.

அசைவ உணவுப் பொருட்களை வேகவைக்கும்போது தனிக்கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

ஆட்டு இறைச்சியை குக்கரில் வேகவைத்தால் சுமார் 5 நிமிடங்களுக்கு மேல் வேகவைக்கக் கூடாது. கறி சிறிது அழுத்தமானதாக இருக்கும் பட்சத்தில் 7 நிமிடம் வரை வேக வைக்கலாம். குக்கர் இல்லாதவர்கள் வாய் அகன்ற பாத்திரத்தில் இறைச்சி மூழ்குமளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்க வேண்டும். சுமார் 15 நிமிடங்கள் வரை வேகவைக்கலாம். இறைச்சி வெந்திருக் கிறதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள நினைப்பவர்கள் கரண்டியினால் வெந்த இறைச்சித்துண்டுகளில் ஒன்றிரண்டை எடுத்துக் கைவிரலினால் அழுத்திப் பார்க்க லாம். இறைச்சி நன்றாக வெந்திருந்தால் அழுத்திய உடன் பிரியும். இல்லையானால் அழுத்தமாகவே இருக்கும். வெந்த இறைச் சியை குழம்பில் போடும் போதும் கவனமாக இருக்க வேண்டும். முதலில் கரைத்த குழம்பை அடுப்பில் வைத்து நன்றாக கொதித்து வந்தவுடன், அதாவது அடுப்பிலிருந்து இறக்குவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னதாக வேகவைக் கப்பட்ட இறைச்சியை கொதித்த குழம்பில் கொட்டி நன்றாக கிளறிவிட வேண்டும். அதிக நேரம் குழம்புடன் இறைச்சி வேகவைக்கப்பட்டால் இறைச்சி கரைந்து விடும். அத்துடன் முன்பே வேகவைக் கப்பட்ட இறைச்சியை மீண்டும் அதிக நேரம் வேகவைத்தால் சுவை குன்றி விடும்.

முட்டையை வேகவைக்கும் போதும் கவனமாக இருக்க வேண்டும். சுமார் 7இல் இருந்து 10 நிமிடங்கள் வரையில் வேகவைக்கலாம். முட்டையை அதிக நேரம் வேகவைத்தால் அதனுடைய மென்மை கெட்டு கெட்டியாகிவிடும்.

மீன் குழம்பு வைக்கும்போது அநேகம் பேர் குறைபட்டுக் கொள்வது, மீன் கரைந்துவிடுகிறது என்பதுதான். இதற்குக் காரணம் அவர்கள் மீனை அதிக நேரம் வேகவைப்பதுதான். மீனைச் சுத்தமாகக் கழுவி, ஒரு பாத்திரத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும். மீன் குழம்புக்குத் தேவையானவைகளை கரைத்து அடுப்பில் வைத்து நன்றாக கொதிக்கவிடவேண்டும். குழம்பை அடுப்பிலிருந்து இறக்குவதற்கு முன்னதாக சுமார் 5 நிமிடங்கள் இருக்கும் போது கழுவிய மீனைக் குழம்பில் சேர்க்க வேண்டும். பிறகு குறிப்பிட்ட நேரம் கழித்து இறக்கிவிட வேண்டும். அடுப்பில் உள்ள கொதித்த குழம்பில் மீனைப் போட்டு ஒருமுறை நன்றாக கிளறி விட்டால் போதுமானது. அடிக்கடி கரண்டியைப் போட்டுக் கிளறக்கூடாது. இப்படி அடிக்கடி செய்வதால்தான் மீன் உடைந்து கரைந்து விடுகிறது. ●

## மகளிர் கவனிக்க

முரசு 115 இல் முடிவடைந்த மகளிர் மட்டும் பரிசுப் போட்டி முடிவுகள் வரும் வார முரசில் வெளியிடப்படும். அதிஷ்டசாலிகள் யார் என்பதை அடுத்த வாரம் அறிந்து கொள்ளுங்கள்.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 07

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# அசாருக்கு சவால்

இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற் கொள்ளும் நியூசிலாந்து கிரிக்கெட் அணிக் கெதிராக விளையாடவுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தலைவராக முகமட் அசாருதீன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த ஐந்து வருடமாக இந்திய அணியின் தலைவராக விளங்கும் அவருக்கு இது பரீட்சை நேரம். ஆம்! இந்த சீசனில் நடக்கவுள்ள உலகக் கோப்பையை இந்தியாவுக்கு அசாருதீன் பெற்றுத்தராவிட்டால் அவரது தலை உருளும் என்பது பரவலான பேச்சு.

நியூசிலாந்து நாட்டிற்கெதிராக விளை யாடவுள்ள வீரர்கள் கடந்த மாதம் 15ம் திகதி முதல் சென்னையில் முகாமிட்டு பயிற்சி மேற்கொண்டுள்ளனர். நியூசிலாந்து அணியை எளிதாக இந்தியா வென்றுவிடும் என்பது பலரது அபிப்பிராயம். ஆக கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்ப்பது எல்லாம் உலகக் கோப்பையில் இந்தியாவின் வெற்றி யைத்தான்.

நியூசிலாந்து அணியை பொறுத்தவரை அந்த அணியின் தலைவராக ஜப்சன் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதில் வேடிக்கை என்னவென்றால் இவர் இது நாள்வரை நியூசிலாந்து அணிக்காக எந்த வொரு டெஸ்ட் போட்டியிலும் ஆடிய தில்லை. இவர் ஆடப்போகும் முதல் டெஸ்ட்டிலேயே கப்டன் பதவியைப் பெற்றிருப்பது அசுரசாதனை.

ஜப்சன் அவ்வளவு திறமைசாலியா? அப்படியொன்றும் இல்லை. நியூசிலாந்து அணியின் கோஷ்டி பூசல் காரணமாகத்தான் நியூசிலாந்து கிரிக்கெட் சபை ஒரு புதியவரை கப்டனாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

நியூசிலாந்து அணியின் நட்சத்திர வீரராகத் திகழ்பவர் மார்ட்டின் குரோ. இவர்தான் இந்தியாவின் வெற்றியைத் தடுக்கக்கூடிய தடைக்கல். இந்தத் தடைக் கல்லைத் தகர்த்தெறிவார்களா இந்திய அணியினர்? பொறுத்திருந்து பார்ப் போம்.



ஸ்போர்ட்ஸ்

# அதிரடி ஆட்டம்



வீட்டிலிருந்தே ஜாலியாக விளையாடக் கூடிய விளையாட்டுக்களில் ஒன்று 'கேரம்'. கேரம் விளையாட்டில் இந்தியாவில் ஒரு கலக்குக் கலக்குபவர் யுவராணி. அவருக்கு 20 வயதுதான்.

1994இல் இலங்கைக்கு எதிராக விளையாடி இந்தியாவுக்கு வெற்றி பெற்றுக் கொடுத்தார்.

கேரம் போட்டியென்றால் சாதாரணமாக நினைத்துவிடக்கூடாது. அதிலும் அதிரடித் தாக்குதல், தற்காப்பு ஆட்டம் என்று 2 முறை இருக்கிறது. யுவராணிக்கு அதிரடி ஆட்டம்தான் பிடிக்கும். அதுதான் அவரது ஸ்டைல்.

வீட்டில் காலையிலும், மாலையிலும் கேரம் போட்டியில் பயிற்சி எடுத்துக் கொள்கிறார். அப்பாவோடும், தம்பியோடும் விளையாடிப் பார்க்கிறார்.

யுவராணியின் திறமையால் இந்தியன் வங்கியில் வேலை கிடைத்திருக்கிறது.

உலக சாம்பியனாகிவிட வேண்டும் என்பதே யுவராணியின் இன்றைய தேதிக் கனவு.

விரைவில் கொழும்பில் நடைபெற உள்ள 'கேரம்' போட்டியில் யுவராணியும் பங்கு கொள்ள வருகிறார்.

இந்தியாவில் தேசிய ரீதியில் கேரம் விளையாட்டில் பெண்களில் முதலிடம் யுவராணிக்குத்தான்.



# தோல்வியிலும் வெற்றி

அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் மோனிகா செலஸ் ஸ்டெபி கிராஃபிடம் தோற்றுப்போனார் அல்லவா. தோல்வி மோனிகாவின் இமேஜை பாதிக்கவேயில்லை யாம்.

டென்னிஸ் வீராங்கனைகள் மத்தியில் அதிக வரவேற்பு யாருக்கு என்று அமெரிக்க சஞ்சிகை ஒன்று கருத்துக் கணிப்பு நடத்தியது. கருத்துக்கணிப்பில் அமெரிக்கர்களின் அமோகவரவேற்பு மோனிகாவுக்குத்தான். அந்த விடயத்தில் ஸ்டெபி மோனிகாவை எட்ட முடியாத தூரத்தில் இருக்கிறாராம்.

மோனிகா ஜுரம் ஆண் ரசிகர்களுக்கே அதிகம் என்பது மற்றொரு கவனிக்கப்பட வேண்டிய தகவல். ●



படிப்பகம்

www.padippakam.com

## நான் எப்படி சீவிப்பது?

ஒவ்வாத
இரண்டு இலத்திரன்களைப்-
போலத்தான்...
அவளும்
எனது காதலும்!
•••••
'காதல்' ஒருமைப்பாட்டை
ஒருதலைப்பட்சமாய் மீறி
ஒரங்கட்டி
ஓரமாகிப்போனவள் அவள்!
•••••
சிந்திக்க முடியாத
முடிவுரையைக்கூட
சந்திக்க முடியாத
சமாந்தரக் கோட்டின்
முடிவிலியில்தான்
எழுதிவிட்டுப் போயிருக்கிறாள்!
•••••
மட்டந்தட்ட முடியாத-மௌனப்
பூச்சியங்களால்
பூச்சாண்டி காட்டியே...
மட்டுப்படுத்திவிட்டாள்-என்
மட்டற்ற கனவுகளை!
•••••
இனியும்
மீள-மீட்டமுடியாத
என் இதயத்தை
இழந்துவிட்டு
"இலந்தை" முள்ளுமேல்
முல்லைப் பூவுக்காய்...
நான் எப்படி சீவிப்பது...?
•••••

பாணகமுவ-எஸ்.முஸ்தாக்,
குருநாகல்.

## வசந்தங்கள் உனக்கு-24

குட்டி முயலாய்
குதிக்கிறதென் நெஞ்சம்
•••••
நட்சத்திரங்களால்
இருபத்திநான்கு
ரதம் செய்தாயிற்று
நீ பவனி வர....!
•••••
வயல் வெளிக் காற்றிலோர்
வாழ்த்துக் கவிதையும்
எழுதியாயிற்று
உன் பிறந்த நாளுக்காய்...!
•••••
கறுத்த இரவினில்
உன் ஞாபகப் பேய்களைத்துரத்தி
வசியம் செய்தாயிற்று!
•••••
என் காதலை அறுத்து
கதறக்கதற
கடலுக்குள் எறிந்தேன்...!
•••••
ஒற்றைக் குயிலொன்றின்
கேவல்மட்டும்
உள்ளுக்குள் சுட்டது!
•••••
வசந்த காலத்தின்
நடுநிசிப் பொழுதிலோர்
பிரார்த்தனை செய்தேன்....!
•••••
கடவுளே!
நிலாவில் இனி
என்யாத்திரை வேண்டாம்!
அது வானை மட்டும்
வலம் வரட்டும்....!
•••••
ஏற்றுக்கொள்!
இது இறுதியானதோர்
ஞாபகக் கவிதை...
செப்டம்பரில்
உன் பிறந்தநாளைப் போல்

கன்ஸியா

## எதார்த்தங்களின் தரிசனம்

அசையவில்லையா
அந்த
ஆராய்ச்சி மணி?
•••
குறைந்து விட்டனவா
தேசத்தில்
குற்றங்கள்?
•••
சமாதானமானதா
எங்களது
இனவாதம்?
•••
பெருகிவிட்டதா
எங்களுக்குள்
பிரச்சனைகள்?
•••
வளர்ந்துவிட்டதா
வாழும் மக்களின்
வன்முறை வாழ்க்கை?
•••
அமைதியைக் குலைத்துவிட்டதா
ஆதிக்கம் செய்கின்ற
ஆயுத கலாசாரம்?
•••
அச்சுறுத்தலோ
அமுலில் இருக்கின்ற
அவசரகாலச் சட்டம்?
•••
பலப்படுத்தப்பட்டதா
பாதுகாப்பு...
பந்தோபஸ்து?
•••
அடங்கி விட்டதா
அப்பாவி மக்களின்
மரண ஓலம்?
•••
ஓ...
களவாடப்பட்டு விட்டது
கட்டப்பட்டிருந்த
ஆராய்ச்சி மணி!

எம்.ஏ.இசார்தீன், மக்கா-சவுதிஅரேபியா.

## வாழ்வும் சுயமும்



அராஜகக் காற்று வீசும்
வாழ்க்கை வெளி...
பாதுகாக்க வேண்டிய பலவற்றை
பறக்கவிட்ட
எத்தனை அஃறிணை மனிதர்கள்
என்னைப்போல...
•••
நமது சுயங்களை
மரவள்ளிக் கிழங்காட்டம்
அவித்துப் போடுகிறோமே
இந்த உயிர் ஆசையில்?
•••
மர்மநாவலொன்றில்
காணாமல் போகும்
இளைய வாசகனாய்...
இங்கு
மனித சுயங்களும்...!
•••
அர்த்தம் தெரியாமலே
அதிகமான பக்தர்களால்
உச்சரிக்கப்படும்
மந்திரங்கள் மாதிரி...
இங்கு-
சாந்தி, சமாதானம்
என்ற வார்த்தைகளும்...!
•••
எனது சுயமும்
எனது வாழ்வும்
உயிருக்காய் பாய்ந்தோடும்
முயலும்
இறைச்சிக்காய் விரையும்
வேட்டை நாயும் போல
என் தேசக்காட்டுக்குள்..!.



எஸ். புஸ்பானந்தன்

## தேன் கிண்ணம்



## வடிகால்!



கவலைகளின் தோற்றுவிப்புக்களாய்
இந்த
கனவுகளும்
கதறிக் கொள்கின்றன...
•••
உன் ஞாபகங்களின்
உரசல்களினால்
என் வார்த்தைகளும்
தீப்பற்றிக் கொண்டன...
•••
உன்
சூரியப்பார்வை
சுட்டெரித்த
வார்த்தைகளைத்தான்
இப்போது
வருடிக் கொண்டிருக்கிறேன்!
•••
ஷகி...
இந்த
நீல வானத்தில்
நீளமான கறுப்புமேகம்
நிரந்தரமாகி விட்டதா...?
இந்த
வாடகை வாழ்க்கையில்
வழக்கமான சோகம்
வாடிக்கையாகி விட்டதா...?
•••
என்
மனப்பரப்புக்களில்
சோக-
மகரந்தத்தைத்
தூவிச் சென்றவளே...!
ஒரு
வார்த்தை
சொல்லி விட்டுப் போ...
வரும் ஜென்மமாவது
எனக்கு வாழ்க்கை வருமா...?

அ.சுதாசேகர், பொத்துவில்-03.

## இன்றிரவு....!



வானம் கிழிந்து
புதுப்புது
அர்த்தங்களோடு
பூமி எங்கும்
குருதிமழை கொட்டும்...!
•••
இனிமையான
வாழ்வின் மீது
இலக்குகள் ஏதுமின்றி
இரத்த ஓட்டைகள் விழும்...!
•••
சின்னச் சின்ன
கனவுகள் பொறுக்கி
கட்டி வைத்த காதல்,
'ஷெல்' விழுந்து
சேதப்படும்...!
•••
சற்றுலாச் சென்று
ஊர்வந்த தென்றல்
மனிதக் குரூரம் கண்டு
இலைகளுக்குள்
ஓடி ஒளிந்து கொள்ளும்
•••
அவளினதும்
அவனினதும்
காற்றுப் புகமுடியாத
கட்டிலறை அணைப்பை
துப்பாக்கி
தூரப்படுத்தும்...!
•••
'மனிதம்' கழற்றப்பட்ட
முகமூடி மனிதர்கள்
உயிரற்ற ஜடங்களை
தோள்களில் போட்டுக் கொண்டு
வந்து, வந்து போவார்கள்...!
•••
அமைதி குலைந்துபோய்
தேசம் முழுதும்
சிவப்பேறிக் கிடக்க
பொழுது புலரும்
இன்றிரவு...!



அக்கரையூர்-எம்.உவைஸ் ஹஜா

## யாவும் கற்பனையே!

என் ஆக்கங்களை
ரசிக்கும் ஒரு
முகம் தெரியாத
ரசிகை
என் கவிதைகளை
வாசித்துவிட்டு
"எல்லாம் நிதர்சனமா?"
என்றாள்;
அதற்கு நான்
"வாழ்க்கை உண்மை
கவிதை பொய்!
என் கவிதைகள்
உண்மையாயின்
நான் இறந்து போனதும்
உண்மை" என்றேன்
அவளுக்குப்
புரிந்ததோ என்னமோ!!!

- எம்.சுரேஷ் -

## ஒரு கலைஞனின் புலம்பல்

வானம் இருள் கவ்வ
நிலவு பொலிவிழந்து...
தென்றல் சுடுகிறது
புயலின் வேகம் தீவிரமாகி...
தென்றலின் பொய்முகம் தெரிகிறது!

என் விழிகளுள் பதிவான
கலைப்பெண்...
அவள் விழித்தணலில் வெந்தவிந்து
உருமாறிப்போனாள்!

இயற்கையின் அதீத வியப்புகள்
அவள் உஷ்ண சுவாசத்தில்
பஸ்மமாகிப் போயின!

ஏகாந்தத்தில் நான் தரிசித்த
இந்திரலோகம்
பசுமை வெளியிலும்...
விழியுள் சுடுகாடாய் பிரதியாகிறது!

மழைத்தூறலிலும்
மின்னல் கீறலிலும் மினுங்கிய
இயற்கை ஆச்சர்யங்கள்
ஒப்பாரியாய்... ஓலமாய்
யுகப்பிரளயமாய் புலனாகிறது!

சிறிய அலைக்கும்...
உணர்திறன் காட்டிய கலையுள்ளம்
வாழ்க்கையின் சுவாரஸ்யங்களை
வழக்குத் தரையில் விதைத்து...
அறுவடைப் பூஜ்ஜியத்தை சேமித்தது!


வாழ்வின் பரிணாமங்களை மறந்து
வசந்தமென ஒரு பூகம்பத்தை
புதையலென ஒரு புழுக்கூட்டை
வரிந்து... தரிசித்துக் கொண்டவன்!

இயற்கை... அந்நிய கிரகத்தில் விகாரமாகி
அணுவில் கலந்த கலைச்சாறு
புழுவால் உறிஞ்சப்பட்ட பிணமாய் -
வாழ்க்கை!

கலைப்பழுவோடு...
கவலைப் புழுவரித்த வேரின் விருட்சமாய்
சாயும் தறுவாயில்...நான்!

என் ஆன்மா மட்டும்...
ஏகாந்தத்திலும் சுகபோகமாய்;
வேலிக்கட்டையில் தனித்திருக்கும்
ஒரு சிறுகுருவி போல...
காத்துக் கொண்டேயிருக்கிறது
ஒரு மானசீக நேயத்திற்காக...!

-ஆத்மராஜா றூத் சந்திரிக்கா,
கோட்டைக்கல்லாறு







### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்-வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- தொழில் பிரச்சினை, மனக்கலக்கம். | காலை 6 மணி |
| புதன்- வீண் சந்தேகம், பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| சனி- இனசன விரோதம், முயற்சி தடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் பிரச்சினை, மனக்கலக்கம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்-வெளியிடப்பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | காலை 8 மணி |
| வெள்ளி- பயனற்ற செயல், வீண்மனஸ்தாபம். | பகல் 11 மணி |
| சனி- தொழில்விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| திங்கள்- மனக்குறை அதிகம், குடும்பப் பிரச்சினை. | காலை 6 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- வீண்விவாதம், மனத்தைரியம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவு. | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழிலில் உயர்ச்சி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- பணவரவு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- இனசன நன்மை, பலவித பேறு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, குடும்ப சுகம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், பெரியோர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- மனக்குறை நீங்கும், வீண் முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் சகாயம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்-புதிய முயற்சி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, பணலாபம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.10.95 முதல் 14.10.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| கன்னி | - | சூரியன்,புதன் |
| துலாம் | - | வெள்ளி, இராகு, செவ்வாய் |
| விருட்சிகம் | - | வியாழன் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

சந்திரன்-மீனம், மேடம், இடபம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | மு.ப. 9 மணி |
| திங்கள்- பலவித பேறு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| புதன்- தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- காரிய சித்தி, கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனமகிழ்ச்சி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| சனி- தொழில் சிறப்பு, மனக்கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரியசித்தி. | காலை 7 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் செலவு, பணத்தட்டுப்பாடு. | காலை 7 மணி |
| புதன் - அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, கௌரவம். | மு.ப. 9 மணி |
| வெள்ளி- காரியானுகூலம், பயனுள்ள செயல். | பி.ப. 2 மணி |
| சனி- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள்வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய நட்பு, அந்நியர் உதவி. | காலை 8 மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 12 மணி |
| சனி- உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-8

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, வீண் கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பணவரவு. | மு.ப. 9 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | காலை 6 மணி |
| சனி- வீண்மனஸ்தாபம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | கால்ல 8 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- பயனுள்ள செயல், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் விருத்தி, அந்நியர் பகை. | காலை 6 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| திங்கள்- புதிய நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிடவாழ்க்கை, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- மனக்கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, பயனுள்ள செயல். | காலை 7 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7


படிப்பகம்

www.padippakam.com





# என் அம்மா

அன்பை நெஞ்சில் சூட்டிடுவாள்
கண்ணாய்க்காக்க மனம் கொள்வாள்
இன்பமாக வாழ வைப்பாள்
என்றும் புகழே சேரவைப்பாள்

பள்ளி சென்று படித்துவர
பலப்பல உதவிகள் செய்திடுவாள்
கள்ளத்தனமாய் ஏதும் செய்யின்
கண்டிப்பாய் மதியூட்டிடுவாள்.

துன்பம் வந்தால் துவண்டிடுவாள்
துடித்து பதைத்து உதவிடுவாள்
நன்றாய் வாழச் செய்திடுவாள்
நன்றே செய் என்றோதிடுவாள்

தெய்வம் என்றொரு பெயர் கொண்டாள்
தினமும் உறவாய் எனை வென்றாள்
மெய்யாய் வாழ வழி சமைத்தாள்
மேன்மையுடன் தினம் விளங்குகிறாள்.

-பசறையூர் மல்லிகா பத்மநாதன்-

"மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை:
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"
- சுப்பிரமணிய பாரதியார்.

# சேவை மனப்பான்மை

## பாப்பா முரசு சிறுகதை



கோவளம் நாட்டை மன்னன் குணசீலன், மக்களுக்கு எந்தக் குறையும் இல்லாமல் ஆட்சி செய்து வந்தான்.

ஒருநாள் மன்னன் குணசீலன் தன் அமைச்சரை அழைத்து,

"அமைச்சரே! நான் நம் மக்களில் ஒருவருக்கு புதையல் ஒன்றைப் பரிசாகக் கொடுத்து, இதன் மூலம் அவர்கள் சேவை மனப்பான்மையை அறியப் போகிறேன்.

அரசன் சொன்னது அமைச்சருக்குப் புரியவில்லை. இருப்பினும் அரசனது திட்டத்தை பொறுத்திருந்து பார்க்க முடிவு செய்தார் அமைச்சர்.

சில தினங்களில் நாட்டின் தலைநகர் முழுவதும் முரசு முழங்கியது.

"நாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி! நமது நகரத்தின் எல்லைக்குள் ஒரு மாபெரும் புதையல் இருக்கிறது. அதைத் தேடி எடுப்பவர் புதையலை வைத்துக் கொள்ளலாம்!" என்ற செய்தி நகரத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் ஒலித்தது.

நகர மக்கள் அப்புதையலைத் தேடத் தொடங்கினார்கள்.

தலை நகரத்தில் பிரதான தெரு ஒன்று இருந்தது. அந்தத் தெருவின் நடுவில் பெரிய கல் ஒன்று பல நாட்களாகக் கிடந்தது. சன நெரிசல் மிக்க அந்தத் தெருவில் போக்குவரத்திற்கு அது இடையூறாக இருந்தது. புதையலை தேடிச் செல்லும் மக்கள் அந்தக் கல்லைக் கண்டு ஒதுங்கித்தான் போனார்களே தவிர, ஒருவருக்குக்கூட அதை அப்புறப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை.

அப்பொழுது அந்த வழியே ஒரு சிறுவன் வந்தான். அவன் பெயர் பாலன். தெருவில் கிடக்கும் கல்லை அப்புறப்படுத்தாது செல்லும் மக்களை வெறுப்புடன் பார்த்துவிட்டு தானே அப்புறப் படுத்த முன்வந்தான்.

அந்தக் கல் சற்றுப் பெரியது. இருப்பினும் பாலன் மிகவும்கஷ்டப் பட்டுத் தள்ளிக் கொண்டிருந்தான். புதையலை தேடிச் சென்று கொண்டிருந்த மக்கள் இதைப்பார்த்தார்களே தவிர, அவனுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை.

பாலன் தன் பலம் கொண்டமட்டும் அந்தக் கல்லைத் தள்ளினான். கல் இருந்த இடத்தைவிட்டு உருண்டது. அதன் பிறகு அந்தக் கல்லை உருட்டுவது அவனுக்கு மிகவும் சுலபமாக இருந்தது. கல்லை தெருவின் ஓரத்தில் தள்ளிவிட்டுத் திரும்பிய பாலன், முதலில் கல் இருந்த இடத்தில் துணிப்பை போன்ற பொருள் ஒன்று மண்ணால் மூடப்பட்டுக் கிடப்பது தெரிந்தது.

உடனே ஓடிச் சென்று அதை எடுத்து விரித்துப் பார்த்தான். உள்ளே பொற்காசுகள் நிறைந்திருந்தன. அதனுடன் ஒரு ஓலைச் சுவடியும் இருந்தது. அதை எடுத்துப் பார்த்தான் பாலன்.

'சேவை மனப்பான்மை கொண்ட கரங்களுக்கே இந்தப் பொற்காசுகள் சொந்தம்' என்று அதில் எழுதி இருந்தது. அத்தோடு அரசு முத்திரையும் அதில் இருந்தது.

பாலனுக்கு முதலில் எதுவுமே விளங்கவில்லை. பிறகு அந்தப் பொற்காசுகள் அடங்கிய அந்தப் பையை எடுத்துக் கொண்டு மன்னன் குணசீலனிடம் வந்தான்.

"அரசே! இந்நகர முக்கிய தெரு ஒன்றின் நடுவில் ஒரு பெரிய கல் கிடந்தது. போக்கு வரத்திற்கு அது இடையூறாக இருக்கிறதே என்று நினைத்து அந்தக் கல்லை நான் அப்புறப்படுத்தினேன். அந்தக் கல் கிடந்த இடத்தில் இந்தப் பை கிடந்தது. இதைத் தங்களிடம் ஒப்படைக்கவே வந்தேன்!" என்று, பணிவுடன் சொன்னான் பாலன்.

அதைக் கேட்டுப் புன்னகை புரிந்த மன்னன் அவனை முதுகில் தட்டிக் கொடுத்தான்.

"சிறுவனே!" நான் அறிவித்த புதையல் இதுதான். நாட்டு மக்களில் சேவை மனப்பான்மை யாருக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவே தெருவின் நடுவில் கிடந்த இந்தக் கல்லின் அருகே இந்தப் பொற்காசுகள் அடங்கிய பையை யார் கண்ணிலும் படாதவாறு வைக்க ஏற்பாடு செய்தேன். இந்நகர மக்கள் அனைவரும் புதையலை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருந்தார்களே தவிர ஒருவருக்குக்கூட போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்த கல்லை அப்புறப்படுத்தும் எண்ணம் வரவில்லை. ஆகவே அவர்களுக்குச் சேவை மனப்பான்மையே இல்லை என்பது தெளிவாகி விட்டது. அதே சமயம் சிறுவனான உனக்கு அந்த சேவை மனப்பான்மை இருக்கிறது. அதனால் இந்தப் பரிசு உனக்குத்தான் சொந்தம்" என்றான்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட அந்நகர மக்கள் அனைவரும் வெட்கப்பட்டனர்.

## கடிப்புதிர்கள்

1. சாப்பிட முடியாத பழம் என்ன பழம்?
2. T.Vக்கு நடுவில் இருப்பது என்ன?
3. இரண்டு இலக்கங்கள் கொண்ட பழம் எது?
4. ஒருவன் ஓடோடி வந்து கடைக்கு முன்னால் நின்று என்ன வாங்குவான்?
5. பெண் தெய்வமுள்ள பழம் என்ன பழம்?

விடைகள்

1. ஞானப்பழம் 2. "U" 3. ஆரஞ்சு 4. மூச்சுவாங்குவான் 5. தக்காளி'.

இராஜதுரை பிரதாப்
கண்டி.

# வாரம் ஒரு நாடு

## ஹொங்கொங்



தலைநகர் - விக்டோரியா
பரப்பளவு - 1,071 சதுரகிலோமீற்றர்
மக்கள் தொகை - 58,00,000
மொழி - ஆங்கிலம், கன்ரோனீஸ்
எழுத்தறிவு - 75%
சமயம் - கொன்வ்பியூசியானிசம்,புத்தம்
நாணயம் - ஹொங் கொங் டொலர்
தனிநபர் வருமானம் - 13,4000 டொலர்
வரலாறு,

ஆங்கிலோ - சீனப் போருக்குப் பின் ஏற்பட்ட 1842 இன் நாங்கிங் ஒப்பந்தம் மற்றும் 1860 இல் நடைபெற்ற கன்வென்ஷன் ஒவ் பீகிங் இவற்றின்படி அப்போதிருந்த சீன மன்னரிடமிருந்து 1898 முதல் 99 வருடங்களுக்கு ஹொங்கொங் பிரிட்டனுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. 1994 இல் பிரிட்டனுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 1997 ஜூலையில் ஹொங் கொங்கை பிரிட்டன் சீனாவிற்கு வழங்கும். தற்போதைய அமைப்பைத் தான் மாற்றப்போவதில்லை என சீனா அறிவித்துள்ளது. கவர்னர் ஜெனரலே அதிகாரங்கள் நிறைந்தவர். பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியே கவர்னர் ஜெனரல்.

பொருளாதாரம்.

உலகின் மிகப் பெரும் துறைமுகங்களுள் ஒன்று. தொழில் துறையில் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. மொத்தப் பரப்பளவில் சுமார் ஒன்பது சதவீகிதமே விவாசயத்திற்குப் பயன்படுத்தப் படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.10.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 111
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 108

பரிசுக்குரியவர்:
சு. ஜெயலீலா நல்லிளை பாற்றிய கன்னியர் பாடசாலை நுவரெலியா

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ஏ.ஏ. சித்தி சியாமா, மன்னார் வீதி, புத்தளம் | எ.எச்எம். ஹாபிலீன் சாஹிரா தேசிய கல்லூரி புத்தளம். |
| இ. இலட்சுமன் மட்/களுதாவளை மாகாவித்தியாலயம் | க. ராஜீவ் குமார் சிங்கள மகா வித்தியாலயம். |
| மு.ஹா. றுஸைனா, ஆமிஷா பாளிகா மக வித்தியாலயம், அக்கரைப்பற்று.03 | பிரதீபராஜ் உப்புவெளி, திருகோணமலை. |
| நசீர் அஸ்ஹர், அல் ஹிலால் மகா வித்தியாலயம். | நஸ்ரீன் மஹ்ரூப் சென், மேரிஸ் கல்லூரி, நாவலப்பிட்டி |
| செ. சதீஸ்குமார், துறைநீலாவணை, ம.வ. துறைநீலாவணை. | பொ. சிறிதரன் நானுஓயா தமிழ் வித்தியாலயம் நானுஓயா. |

## விஞ்ஞான விளக்கங்கள்

1. **குளிரூட்டியினுள் உணவை நீண்ட காலமாக பழுதடையாமல் வைத்துக் கொள்ளலாம்.**

உணவைப் பழுதடையச் செய்யும் பற்றீரியாக்கள், பூஞ்சணங்கள் போன்றன வெப்பநிலை குறையும் போது செயலற்றுப் போகின்றன. இதனால் குளிரூட்டியில் வைக்கும் உணவு பழுதடைவதில்லை.

2. **ஒருவர் ஒரு மூட்டை அரிசியை தலையில் தூக்குவதை விட முதுகில் சுமத்தல் இலகுவானது.**

பரப்பு குறைந்தால் அமுக்கம் கூடும். தலையின் பரப்பு முதுகின் பரப்பைவிட குறைவு. முதுகின் பரப்பு அதிகமானதால் முதுகில் அமுக்கம் குறைவு. இதனால் முதுகில் சுமத்தல் இலகுவானது.

3. **புகையில் இருக்கும் போது சுவாசிக்க முடியவில்லை.**

புகையில் $CO_2$ (காபனீரொட்சைட்டு)வே அதிகமாக காணப்படுவதால் சுவாசிக்க முடிவதில்லை.

4. **இரவில் படுக்கையறையில் தாவரங்களை வைத்தல் நல்லதல்ல.**

இரவில் தாவரங்கள் சுவாசம் நடத்தி காபனீரொட்சைட் வெளிவிடும். இதனால் மனிதர்களுக்கு சுவாசத்தை நடத்த முடிவதில்லை.

தொகுப்பு: செல்வி.செ.கலாவேணி,
இறக்குவானை.

## சுதந்திர தினங்கள்

1. அவுஸ்திரெலியா - ஜனவரி 04ம் திகதி
2. பர்மா - ஜனவரி 04ம் திகதி
3. இலங்கை - பெப்ரவரி 04ம் திகதி
4. கிரீஸ் - மார்ச் 25ம் திகதி
5. இத்தாலி - மார்ச் 26ம் திகதி
6. இஸ்ரேல் - ஏப்ரல் 3ம் திகதி
7. ஜப்பான் - ஏப்ரல் 29ம் திகதி
8. ஸ்பெயின் - ஏப்ரல் 10ம் திகதி
9. நோர்வே - மே 17ம் திகதி
10. போலந்து - மே 3ம் திகதி
11. தாய்லாந்து - ஜூன் 24ம் திகதி
12. ஆப்கானிஸ்தான் - ஜூலை 4ம் திகதி
13. கனடா - ஜூலை 1ம் திகதி
14. பாகிஸ்தான் - ஆகஸ்ட் 14ம் திகதி
15. இந்தியா - ஆகஸ்ட் 15ம் திகதி
16. மெக்ஸிகோ - செப்டம்பர் 16ம் திகதி
17. சீனா - ஒக்டோபர் 10ம் திகதி
18. போர்த்துக்கல் - ஒக்டோபர் 5ம் திகதி
19. துருக்கி - நவம்பர் 1ம் திகதி
20. ஃபின்லாந்து - டிசம்பர் 6ம் திகதி

தொகுப்பு: ஏ.எஸ்.எம். ரிஸ்வி, மதவாச்சி.

## வார்த்தை விளையாட்டு

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'சிலப்பதிகாரத்தில்' சில எழுத்துக்களை நீக்கி வேடிக்கை பாருங்கள்.

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| சி | ல | ப் | ப | தி | கா | ர | ம் |

- ★ 1. 4,5 : உயிர்களின் தலைவன்.
- ★ 2. 4,1 : உணவு கிடைக்காமல் வருத்துதல்.
- ★ 3. 6,1 : பிரபல ஊர்ப் பெயர்.
- ★ 4. 7,5 : காமன்கூத்தில் வரும் பாத்திரம்.
- ★ 5. 6,7,8 : ஒரு வகைச் சுவை.
- ★ 6. 4,2,8 : திறமைசாலி அல்லது பலசாலியிடம் இருப்பது.
- ★ 7. 4,7,8 : இகம் என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல்.
- ★ 8. 4,2,6,7,8 : ருசியாக உண்ணலாம்

விடைகள்.

1. பதி 2. பசி 3. காசி 4. ரதி 5. காரம் 6. பலம் 7. பரம் 8. பலகாரம்

தொகுப்பு: ஆர்.பாண்டியன்
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்

## விடுகதைகள்

1. அச்சுண்டு குழலுண்டு துவக்குமல்ல, உச்சியிலே பூச்சூடும் ஆதிசிவனும் அல்ல, மச்சத்தின் பெயருமுண்டு மீனுமல்ல-அது என்ன?
2. கட்டையன் கறுவல் காவலுக்குக் கெட்டிக்காரன்-அது என்ன?
3. செத்த மாடு பற்றையைப் போட்டு இழுக்குதாம் - அது என்ன?
4. சிவத்தப் பொண்ணுக்கு கறுப்பு மூக்குத்தி - அது என்ன?
5. பேசும் வீட்டுக்குள்ளே பேசாத ராஜாக்கள் - அது என்ன?
6. வாயால் தின்று வயிற்றால் கொட்டுவான் - அது என்ன?

விடைகள்

1. புகைபிடிக்கும் சுங்கான், துவக்கு, 3. சீப்பு, 4. குண்டு மணி, 5. பற்கள், 6. திருகை

செல்வி: எஸ்.தனுஜா,
மட்/குருக்கள்மடம்

## School என்றால் என்ன?

School என்ற 6 எழுத்துக்கள் கொண்ட ஆங்கிலச் சொல்லின் விளக்கம் தெரியுமா?

S - Sincere - உண்மையுள்ள,
C - Character - நடத்தை,
H - Health - ஆரோக்கியம்
O - Obedient - கீழ்படிவு,
O - Order - ஒழுங்கு ,
L - Learn - அறிவு

என்டனி டெக்ஸ்டர் பர்ணாந்து
புனித பெனடிக் கல்லூரி
கொழும்பு-13

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-


பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இ. 1772
கொழும்பு



படிப்பகம்

www.padippakam.com

# விலை உயர்ந்த குற்றம்




## பட்டுக் கோட்டை பிரபாகர்

"சரவணகுமார், எனக்குப் புரியுது. உங்கப்பாவுக்காக உன்னை ரொடீன் செக்கப் செஞ்சிடறேனே... இப்படிவா."

எழுந்து அவர் அருகில் இருந்த ஸ்டூலுக்கு வந்து அமர்ந்து கொண்ட சரவணகுமார், "தேவையில்லை டாக்டர். போன வாரம்தான் ஒரு ஜெனரல் செக்கப் செஞ்சிக் கிட்டேன். யூரின், ப்ளட் எல்லாம் பார்த்தாச்சு. எல்லாம் நார்மல். செக் பண்ணனும்னு அவசியம் இல்லை. வரிசையா சொல்றேன். நார்மல் தானான்னு பாருங்க போதும். பல்ஸ்-நைன்ட்டி-எய்ட்டி, டெம்ப்பரேச்சர்-நைன்ட்டி எய்ட் பாய்ண்ட் ஃபைவ் டிகிரி-ப்ளட் பிரஷர்- சிஸ்டாலிக்-101, டயஸ் டாலிக்-70, ப்ளட் யூரியா-27 கிராம்ஸ், யூரிக் ஆசிட்-0.6 கிராம், கிரெட்டி நைன்-1 கிராம். ரத்தத்தில் பாலி மார்ப்-64%, லிம்ஃப்-26%, மோனோ சைட்ஸ்-6%, ஈஸ்னோஃபில்ஸ்-4% அப்புறம் என்ன சார் வேணும்? வெய்ட் என் ஏஜ்க்கு கரெக்டா இருக்கேன். பார்வை நல்லா இருக்கு. காது நல்லா கேக்குது. பசி, ஜீரணம் எல்லாம் நல்லா இருக்கு. தூக்கம் நல்லா இருக்கு. இன்னும் எதை, எதை வச்சி என் உடம்பு நார்மலா இருக்குன்னு சொல்றது டாக்டர்?" என்றான்.

ராமகிருஷ்ணன் கையில் எடுத்த ஸ்டெத்தாஸ்கோப்பை மேஜையில் பொத் தென்று போட்டுவிட்டு, நாற்காலியைப் பின்னால் தள்ளி எழுந்தார்.

"ஜீவா சார், உங்க பையனை நீங்க அழைச்சிட்டுப் போங்க. அவன் பிரமாதமா இருக்கான். இப்படி ஒரு பிள்ளையைப் பெத்ததுக்காக பெருமைப்படுங்க. காலை சாப்பிட்டதே நமக்கு மறந்து போய்டுது. பையன் கம்ப்யூட்டரை முழுங்கினமாதிரி டான், டான்னு அடிக்கிறான். சந்தோஷப்படுங்க சார்."

ஜீவானந்தம் எழுந்து கொண்டார்.

"உங்ககிட்டே கூட்டிக்கிட்டு வந்தத்துக்கு இங்கிலிஷ்ல ஒரே ஒரு அறிவுரையாவது சொல்லுங்க சார்."

"என்ன சொல்லணும்?"

"உளர்றதை வீட்டுக்குள்ளேயே வச்சிக்கச் சொல்லுங்க. மேடை மேடையா நிகழ்ச்சி நடத்தணுமா? எனக்குப் பிடிக்கலை."

"அப்பாவுக்குப் பிடிக்காததை ஏன் தம்பி செய்றே?"

"கடைசியா ஒத்துக்கிட்ட நிகழ்ச்சில மட்டும் கலந்துக்கிறேன் டாக்டர். இனிமே நிகழ்ச்சி எதுவும் செய் யலை. தசாவதானத்தைத் தவிர... வேற ஒரு விஷயத்தையும் நான் பயிற்சி பண்ணிக்கிட்டிருக்கேன். போன நிகழ்ச்சில ஐம்பது பக்கம் புத்தகம் எடுத்து அந்த விசேஷ நிகழ்ச்சி செஞ்சேன். அடுத்த நிகழ்ச்சில ஐநூறுபக்க புத்தகத்தில செஞ்சி காமிக்கிறதா பேட்டி எல்லாம் கொடுத்து இந்தியன் எக்ஸ்பிரஸ்லகூட வந்துடுச்சி டாக்டர்."

"அதென்ன விசேஷ நிகழ்ச்சி?"

"பேஜ் ரீடிங் டாக்டர். அதாவது சாதாரணமா ஒரு புத்தகத்தை எப்படி படிப்போம்? வார்த்தை வார்த்தையா படிப்போமில்லையா?"

'ராமு இங்கே வந்தான்'னு இருக்கு. இதை நம் பார்வை எப்படி தடவும். முதல்ல ராமு, அப்புறம் இங்கே, அப்புறம் வந்தான். ராமுங்கிற வார்த்தையில ரா, முன்னு தனித்தனியா படிக்கிற தில்லை. ஒரே பார்வையில 'ராமு' மனசில விழுந்துடும். நான் இதை என் மெமரி பவர்னால இம்ப்ருவ் பண்ணி வரிவரியா படிக்க ஆரம்பிச்சேன். 'ராமு இங்கே வந்தான்'னு இருக்கிற மூன் றெழுத்து வாக்கியத்தை ஒரே பார்வையில படிச்சேன். வரிவரியா படிச்சி அப்புறம் பாரா, பாராவா படிச்சேன். ஒரே பார்வை யில ஒரு பாராவை படிச்சேன். அதையும் இம்ப்ருவ் செஞ்சி ஒரு பார்வையில ஒரு பக்கத்தில பிரிண்ட் ஆகியிருக்கிற அத்தனை மேட்டரும் என் மனசில பதிவாக ஆரம் பிச்சிடுச்சி."

"மை காட்!" என்ற டாக்டரின் மயிர் கால்கள் சல்யூட் அடித்தன.

"வாரபுஸ்த்தகம் எல்லாம் எடுத் தேன்னா எழுபது பக்கம்ன்னா, எழுபது பக்கத்தைப் புரட்ட எவ்வளவு நேர மாகுமோ அவ்வளவு நேரத்தில எழுபது பக்கத்தையும் படிச்சி முடிச்சிடுவேன்."

"ரியலி? இரு" என்ற டாக்டர் தன் பாண்ட் பாக்கெட்டில் இருந்த இன்லண்ட் லெட்டரை எடுத்து, "ஊருக்குப் போயிருக்கிற என் வைஃப் எழுதின லெட்டர் இது. எங்கே ஒரே பார்வையில ஒரு பக்கத்து விஷயங்களையும் படி பார்க்கலாம்" என்று பிரித்து அவன் கண்ணுக்கு முன்னால் இரண்டு வினாடிகள் காட்டிவிட்டு மடக்கினார்.

"படிச்சிட்டியா?"

"ஓ!"

"நிஜமாவா? என்னைக்கு வர்றதா எழுதியிருக்கா சொல்லு பார்க்கலாம்."

"கோயமுத்தூர்ல இருக்கிற அவங்க சித்திப் பொண்ணு கல்யாணத்தில கலந்துகிட்டு, அப்படியே பாலக்காடு, திருச்சூர், குருவாயூர் எல்லாம் போய்ட்டு இருபத்திரெண்டாம் தேதி வர்றதா எழுதியிருக்காங்க. மேலேர்ந்து எட்டாவது வரியில உங்களை ஹோட்டல்ல சாப்பிட வேணாம்னு சொல்லியிருக்காங்க. பதினாலா வது வரியில நான் இல்லைங்கிற தைரியத்தில வனிதா வீட்டுக்கு போகவேண்டாம்னு..."

"போதும்ப்பா. போதும், நிறுத்துப்பா. ஜீவா சார் உங்க பையனுக்கு நான் அறிவுரை சொல்ல முடியாது. அவன் தான் எனக்கு சொல்லணும். சரவணகுமார் எதாச்சும் அட்வைஸ் சொல்லுப்பா எனக்கு."

"சீரியஸா சொல்லட்டுமா? உங்க ஃபிரெண்டு லேபரட்ரிலேர்ந்தும், எக்ஸ்ரே யூனிட்லேர்ந்தும் கமிஷன் வருதுங்கற காரணத்தால ஒண்ணுமில்லாதத்துக்கெல்லாம் ப்ளட் டெஸ்டும், எக்ஸ்ரேயும் எடுக்கச் சொல்லாதீங்க. பேஷண்ட்சை ரொம்ப நேரம் காக்க வைக்காதிங்க. வள்ளுனு விழாம பொறுமையா பேசுங்க. நீங்க கேட்டதாலே தான் சொன்னேன். கோவிச்சுக்காதிங்க. எங்கயோ படிச்சது நினைவுக்கு வருது".

"என்ன அது?"

"நாம் உண்ணும் உணவில் மூன்றில் ஒரு பங்கு நாம் உயிர் வாழப் போதுமானது. மீதி இரண்டு பங்கு டாக்டர்கள் உயிர் வாழப் போதுமானது."

"சரிதான் வாடா" என்று அவனை இழுத்துக்கொண்டு வெளியேறினார் ஜீவானந்தம்.

காரில் அமர்ந்ததும், "ஒத்துக்கிட்ட அந்த நிகழ்ச்சி மட்டும் நடத்திடறேன்ப்பா" என்றான் சரவணகுமார்.

கொஞ்சம் யோசித்து, "சரி, அதான் கடைசி நிகழ்ச்சி சரியா?"

"சரி" என்றான், அல்லல் படப்போகிற சின்னப் பையன்.

நியூயார்க்கில் ஜே. எஃப் கென்னடி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட லுஃப்தான்ஸாவின் விமானப் பறவை மெட்ரிட்,ரோம் தெஹ்ரான், கராச்சி வழியாக பம்பாய் சாகர் விமான நிலையத்தில் தன் நீண்ட பயணத்தை முடித்துக் கொண்ட போது இந்திய நேரம்-2.ஏ.எம்.

பார்க்கர் ஸ்மித்தும், ஆனியும் தடித்த ஸ்வெட்டர்கள் அணிந்து, ஆளுக்கொரு சூட்கேஸ்களுடன் படிகளில் இறங்கினார்கள்.

ரன்வேக்களின் ஓரங்களில் புதைக்கப் பட்டிருந்த விளக்குகளின் வெளிச்சங்கள் கோலம் வரைய வரிசையாக வைத்த புள்ளிகளாக நீண்டிருக்க... ஏர் போர்ட் கட்டிடங்கள் இரவைப் பகலாக மாற்றிக் கொண்டிருக்க....

இமிகிரேஷன் செக்கிங்கிற்குப் பிறகு... எக்ஸ்சேஞ்ச் கவுண்ட்டரில் கொஞ்சம் இந்திய ரூபாயாக மாற்றிக் கொண்டு வெளியே வந்தார்கள்.

இரண்டு கமிஷன் ஏஜண்ட்டுகள் வந்து, "எங்கள் ஹோட்டலில் தங்கினால் சுற்றுலா வசதி எல்லாம் செய்து தரப்படும்." என்று சிபாரிசு செய்ய...

"ஸாரி. ஏற்கெனவே ஒபராய் டவர்ஸில் அறை பதிவு செய்தாகி விட்டது." என்ற பார்க்கர் ஸ்மித் ஒரு டாக்ஸியை அணுகி "நரிமேன் பாய்ண்ட்" என்று சொல்லி ஏறிக்கொள்ள, ஆனி அருகில் அமர்ந்தாள்.

டாக்ஸி புறப்பட்டதும் டிரைவர், "க்யா ஸாப், கஹாங் ஸே? லண்டன்?" என்றான்.

"எனக்கு இந்தி தெரியாது. நாங்கள் நியுயார்க்கிலிருந்து வருகிறோம்" என்றார் பார்க்கர் ஸ்மித் ஆங்கிலத்தில்.

டிரைவருக்கு நியுயார்க் என்பது மட்டும் புரிய... ஒபராய் டவர்சின் டாக்ஸி எல்லையில் நிறுத்தி இறங்கினதும் மீட்டருக்கு மேல் இருபது ரூபாய் வாங்கிக் கொண்டு, தலையைச் சொறிந்து,"ஒன் சிகரெட் பாக்கெட் ப்ளீஸ்" என்று கேட்டு வாங்கிக் கொண்டான்.

பதிவு செய்யப்பட்டிருந்த தங்கள் அறைக்கு வந்ததும்...

"இந்தியாவுக்கு இது நன்றாக குறட்டை விடும் நேரம். எனக்கு பயணக் களைப்பு கூட இல்லை. மதியம் ஒன்றரை மணிக்குத் தான் சென்னைக்கான விமானம். அது வரையில் என்ன செய்யலாம்? உனக்கு களைப்பாக இருக்கிறதா ஆனி?" என்றார் பார்க்கர் ஸ்மித்.

"இல்லை. ஆனால் வெதுவெதுப்பாக குளித்தால் பரவாயில்லை என்று தோன்று கிறது."

"செய். வந்ததும் போனில் தொடர்பு கொள்வதாக என் நண்பனுக்குச் சொல்லி இருந்தேன். பேசி விடுகிறேன்."

ஆனி தன் நெற்றியில் கூந்தல் பறக்காமல் இருக்கக் கட்டியிருந்த வர்ண எலாஸ்டிக் கயிற்றைக் கழற்றி விட்டு... சூட்கேஸ் திறந்து டாய்லெட் பாக்ஸ் எடுத்து கொண்டு இணைந்த குளியலறைக்குள் சென்றாள்.

பார்க்கர் ஸ்மித் போன் எடுத்து, "சென்னைக்கு ஒரு எஸ்.டி.டி. கால் தொடர்பு வேண்டும். நம்பர் 431906. லைனில் இருக்கட்டுமா? நல்லது இருக்கிறேன்."

சில வினாடிகளில் குறப்பிட்ட அந்த எண்ணில் ரிங் போய்க் கொண்டிருப்பதை இவரே கேட்டார். அதன் பிடிவாதமான பனிரெண்டாவது ரிங்கில் எடுக்கப்பட்டு....

"யார்யா இது நேரங்காலம் தெரியாம!" என்று பெண்குரல்.

"எக்ஸ்கியுஸ் மி. மிஸ்டர் கண்ணபிரா னுடன் நான் பேச வேண்டும்."

எனக்கு இங்கிலீஷ் வராதுங்களே... கண்ணபிரான் மட்டும் புரியுது."

"யெஸ். யெஸ். கண்ணபிரான் ப்ளீஸ்."

"மிஸ்டர் இங்கிலீஷ்மேன், கண்ணபிரான் களைச்சிப் போயி தூங்கிங். தொந்தரவு நோ. நோ. நீ காலையில.... அட என்ன எழவுடா இது. அ. நீ குட் மார்னிங்குல போன் பண்ணு."

"மேடம். மிக அர்ஜெண்டாக நான் பேச வேண்டும்."

அப்படி என்ன அர்ஜெண்ட்டு? நல்லா அரை பாட்லு ஏத்திக்கிட்டு கவுந்து படுத்து தூங்கறார்யா வேட்டி கூட இல்லாமன்னா கேக்க மாட்டேங்கறியே... இரு. உசுப்பி பார்க்கறேன். சார், சாரு, சாரே... யாரோ அர்ஜெண்ட்டா பேசணுமாம். தமிழ் தெரியாது போலிருக்கு. குட் மார்னிங்குல பேசுடான்னா கேக்க மாட்டேங்கிறான்."

சில வினாடிகள் கழித்து...

"ஹலோ.... யாரது?" என்று ஆண் குரல்.

"கண்ணபிரானா? நான் பார்க்கர் ஸ்மித்."

"அலோ. நீ தானா? வெல் கம்?"

ஒபராய் டவர்ஸ் ஹோட்டலுக்கு வந்து ஐந்து நிமிடம்தான் ஆகிறது."

"சந்தோஷம். வெரி ஹாப்பி, மெட்ராஸ் ஃப்ளைட் டிக்கெட்ஸ் ரிசப்ஷன்ல பத்து மணிக்குக் கொடுப்பாங்க. டென் ஓ கிளாக் கிவ்வு. ஒன் ஃபார்ட்டி ஃபைவுக்கு பாம்பேல ஸ்டார்ட்டு. இங்கே மெட்ராசுக்கு த்ரீ ட்வென்ட்டி ஃபைவுக்கு கமிங். ஏர் போர்ட்டுக்கு கார் அனுப்பறேன். அம் பாஸ்டர். நம்பர் டி.டி.ஓ. 1688. வந்து சேர். நேர்ல பேசலாம். கூட யார் வந்திருக்கா?

"வாட்?"

உன்னோட அலாங் வித் ஹூ கம்மிம்?"

"என் உதவியாளர் மிஸ் ஆனி."

"குட்டி ஷோக்கா இருப்பாளா,"

"வாட்?"

நீ வேற நடு ராத்திரில வாட், வாட்ன்னு ஞாபகப் படுத்தாதேய்யா...."

"வாட்?"

"ஒண்ணுமில்லை. நத்திங். குட் நைட்."

"தாங்க் யு" என்று வைத்தார் பார்க்கர் ஸ்மித்.

தன் பயண உடையைக் கழற்றி லூசான பாண்ட்ஸ் அணிந்து கொண்டார். சாய்வு நாற்காலியில் அமர்ந்து சிகரெட் புகைத்தார்.

சற்று நேரத்தில் வேறு உடையில் குளியலறையில் இருந்து வெளிப்பட்டாள் ஆனி. டிரெஸ்சிங் மேஜை முன்பு நின்று முகத்திற்கு வெண்ணெய் போன்ற ஒரு லோஷன் தடவிக் கொண்டு, கர்லிங் சீப்பால் தலையை வாரி விட்டுக் கொண்டு, தனது பிராண்ட் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு வந்து கட்டிலில் அமர்ந்தாள்.

"லேசாகப் பசிக்கிறது. உங்களுக்கு?"

"எனக்கும் தான் என்று மெனு கார்ட் எடுத்து இந்த நேரத்தில் ஹோட்டலில் இருக்கும் அயிட்டங்களைப் பார்த்து இரண்டை முடிவு செய்து, போனில் ஆர்டர் சொன்னார்.

"இப்போது நம் திட்டத்தைக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்."

"இந்தியாவில் ப்ராஜெக்ட் என்றதும் நான் தயக்கமில்லாமல் ஒப்புக் கொண்டதற்குக் காரணம் இருக்கிறது. நம் திட்டத்தை செயலாக்க இங்கே, குறிப்பாக சென்னையில் வலுவான கரங்களின் உதவி உண்டு."

"உங்கள் நண்பர் கண்ணபிரானைச் சொல்கிறீர்களா?"

"ஆமாம். அவரை உனக்கு விரிவாகச் சொல்லவில்லை. அவன் தொழில் வெளிப்பார்வைக்கு சினிமா விநியோகம் செய்தல். ஆனால் உண்மையான தொழில் வேறு. க்விக் மணி மேல் நாட்டம் கொண்டவன். கடத்தல், கொள்ளை என்று எதற்கும் தயாரானவன். அனைத்தையும் தொட்டுப் பார்த்தவன். அகில உலக ரீதியில் தொடர்புகள் வைத்திருப்பவன். பெங்களூரில் இருந்து சென்னைக்கு வந்து ஏழு மாதம் ஆகிறது. அவனிடம் ஒரு படையே உண்டு. சில மாதங்கள் முன்பு உலகப் புகழ் பெற்ற இந்திய சுல்தானின் வைரங்கள் பதித்த செருப்பை மிகத் திறமையாக கொள்ளை அடித்தான். ஆனால் போலீசையே ஏமாற்றிவிட்ட அவனை தனியார் துப்பறியும் ஸ்தாபனம் ஒன்றைச் சேர்ந்த பரத், சுசிலா என்ற இருவர் மாட்ட வைத்து விட்டனர்."

"பிறகு?"

"இவன் செல்வாக்கு காரணமாக நழுவி வந்து விட்டான். இப்போது நம் கடத்தல் திட்டத்தில் இவன் உதவிகள் நமக்குத் தேவை."

"அவசியம் தேவை. மொழிதான் பிரச்னை. தமிழ் தெரிந்த, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தெரிந்த ஒருவர் தேவை."

தேவைதான். ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த காரணத்தால் பொதுவாகவே இந்தியர்களுக்கு ஆங்கிலத் தின்மேல் தீராக் காதல் உண்டு. இப்போ தெல்லாம் தமிழ் மொழியில் ஆங்கிலம் வெகுவாகக் கலந்திருக்கிறது. ஆகவே நம்மால் சுலபமாகப் புரிந்து கொள்ள முடியும். ஆங்கிலம் பேசத் தெரிந்தவர் களும் நிறைய உண்டு." அப்போது கதவு தட்டப்பட்டது.

(தொடர்ந்து வரும்)

> அவன் தொழில் வெளிப்பார்வைக்கு சினிமா விநியோகம் செய்தல். ஆனால் உண்மையான தொழில் வேறு. க்விக் மணி மேல் நாட்டம் கொண்டவன். அகில உலக ரீதியில் தொடர்புகள் வைத்திருப்பவன். உலகப் புகழ் பெற்ற இந்திய சுல்தானின் வைரங்கள் பதித்த செருப்பை மிகத் திறமையாக கொள்ளை அடித்தான்.



## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: அரசரங்கேஸ்வரன்
வயது: 24
முகவரி:75, லோறன்ஸ் றோட், கொழும்பு-04.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, சினிமா.



பெயர்: எம். அலவி
வயது: 25
முகவரி: 236/2, ஹில் வீதி, தெஹிவளை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.



பெயர்: வி. அந்தனிஸ்
வயது: 25
முகவரி: 4ம் பிரிவு, நாவளவத்தை, ஸ்பிரிங்வெளி.
பொழுதுபோக்கு: புத்தகம் படிப்பது.



பெயர்: எம். முனீரா
வயது: 24
முகவரி: P.O. BOX-18907, FARWANIYAH, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.



பெயர்: ரி. நான்
வயது: 21
முகவரி: C/O S. RAVINDRA, WEDER MUHLE-32, 5432. MEUENHOF, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்: எம். மஸாஹின்
வயது: 27
முகவரி: P.O.BOX-25809, SAFAT. 13119, KUWAIT.
பொழுதுபோக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: கே. ஜெயக்குமார்
வயது: 23
முகவரி: 24/17, முதலிந்து ஜோன் ரெட்ரிக்கோ மாவத்தை, கொழும்பு-15.
பொ.போ: கிரிக்கெட், புத்தகம்.

பெயர்: எம். இப்றாஹிம் நாஸர்
வயது: 19
முகவரி: 588-டி. உபதபாலக வீதி, 3ம் குறுக்குத் தெரு, அக்கரைப்பற்று-01.
பொ.போ: பேனா நட்பு, வானொலி, பத்திரிகை.

பெயர்: எஸ். முரளி
வயது: 26
முகவரி: VIA. S. ILARIO, NO.42, GENOVA, ITALY...
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: எம். கைசல்
வயது: 21
முகவரி: P.O.BOX-25032, AL. RIYADH-11466. K.S.A.
பொ.போ: வழமையானவை.

பெயர்: சுப்பரமணியம்
வயது: 27
முகவரி: 78, என்.ஆர்.பி., பிரதான வீதி, மாத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, டி.வி.

பெயர்: ஏ. ஹாறூன்
வயது: 17
முகவரி: 101, முஸ்லிம் கொலனி, கதுறுவெல, பொலன்னறுவை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, விளையாட்டு.


படிப்பகம்

www.padippakam.com

**45**

# தாய்

**சி**லர் மனதில், அவர்களது உள்ளத்தினுள்ளே நெடுங்காலமாகப் புழுங்கித் தவித்த கோப உணர்ச்சியையெல்லாம் மடை திறந்த வெள்ளமாகத் திறந்துவிட்டுக் கொண்டிருந்தது.

காற்றிலே அசைந்தாடும் அந்தச் செங்கொடியையே எல்லோரும் ஏறிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அதோ அவர்கள் போகிறார்கள்!" என்று யாரோ தன்னை மறந்த வெறிக் குரலில் கத்தினான். "தம்பிகளா! நீங்கள் அழகாயிருக்கிறீர்களடா!"

அந்த மனிதனின் உள்ளத்தில் வார்த்தைகளின் சக்திக்கு மீறி வாய்விட்டுச் சொல்ல முடியாத ஏதோ ஒரு உணர்ச்சி மேலிட்டுப் பொங்கியது; எனவே அந்த உணர்ச்சியை வெளியிடுவதற்காக அவன் ஏதோ வஞ்சினமாகச் சபதம் சொல்லிக் கொண்டான். ஆனால் சூரிய உஷ்ணத்தால் கலைக்கப்பட்ட நாகபாம்பைப்போல், இருண்டு போன குருட்டுத்தனமான அடிமைத்தனம் நிறைந்த குரோத உணர்ச்சி புஸ்ஸென்று சீறி விஷ வார்த்தைகளைக் கக்கிற்று.

"மதத் துரோகிகள்!" என்று ஒரு வீட்டு ஜன்னலில் இருந்தவாறு தனது முஷ்டியை ஆட்டிக்கொண்டே ஒருவன் சத்தமிட்டான்.

"சக்கரவர்த்திக்கு எதிராக, ஜார் மகாராஜனுக்கு எதிராகக் கிளம்புவதா? கலகம் செய்வதா?" என்ற கூரிய குரல் தாயின் காதில் மாறி மாறி ஒலித்தது.

ஆணும் பெண்ணுமாக ஜனக்கூட்டம் தாயைக் கடந்து செல்லும் போது, அவள் கலவரமடைந்த பல முகங்களைக் கண்டாள். அந்த ஜனத்திரள் உருகிவழியும் எரிமலைக் குழம்பு போல மேலும் மேலும் பொங்கி வந்தது; அந்தப் பாட்டினால் தனக்கு முன்னேயுள்ள சகல தடைகளையும் துடைத்துத் தூர்த்து, தனது மகத்தான சக்தியினால், தான் செல்லும் பாதையை தங்கு தடையற்றதாகச் செய்யும் அந்தப் பாட்டினால்-ஜனங்கள் கவாந்திழுக்கப்பட்டுச் சென்று கொண்டிருந்தார்கள். தூரத்திலே தலைக்கு மேலாக நிமிர்ந்து தோன்றும் அந்தச் செங்கொடியை அவள் பார்த்தபோது, தன் மனக்கண்முன்னால் தன மகனது முகத்தையும்- அவனது தாமிர நிறமான நெற்றியும், நம்பிக்கையின் ஒளியால் பிரகாசமுற்ற அவனது கண்களும்- அவளது மனக்கண்ணில் தோன்றின.

கூட்டம் முழுவதும் அவளைக்கடந்து முன்னேறிச் சென்றபின், அவள் அந்தக் கூட்டத்தின் பின்னால் வந்த ஜனங்களைப் பார்த்தாள்: அவர்கள் அவசரம் எதுவுமின்றி சாவதானமாக நடந்து வந்தார்கள்; அந்த அணிவகுப்பினால் நேரவிருக்கும் அபாயத்தைப் பற்றித் தெதரிந்து கொண்டவர்கள் மாதிரி அதை எதிர்நோக்கி, விருப்பற்றுத் திருகத் திருக அங்குமிங்கும் பார்த்தவாறு அவர்கள் சென்று கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள் ஏதேதோ விஷயங்கள் ஏற்கனவே தெரிந்திருந்த பாவனையில் தீர்மானமாகப் பேசிக் கொண்டார்கள்:

"பள்ளிக்கூடத்திலே ஒரு பட்டாளம் தங்கியிருக்கிறது. இன்னொரு பட்டாளம் தொழிற்சாலையிலே தயாராய்க் காத்திருக்கிறது!"

"கவர்னர் வந்துவிட்டார்." .

"அப்படியா?"

"அவரை என் கண்ணாலேயே பார்த்தேன். இப்போது தான் வந்தார்."

"அவர்கள் நம்மைக் கண்டு பயப்படத்தான் செய்கிறார்கள். யோசித்துப்பார். இல்லையென்றால், கவர்னரும் சிப்பாய்களும் எதற்கு?" என்று ஒருவன் சொன்னான். சொல்லி விட்டு உற்சாகத்தோடு ஏதோ வன்மம் கூறிக்கொண்டான்.

"அருமைப் பிள்ளைகளா!" என்று நினைத்துக் கொண்டாள் தாய்.

ஆனால் அவள் கேட்ட அந்த வார்த்தைகள் உயிரற்று உணர்வற்று ஒலிப்பவைபோல் இருந்தன. எனவே அவள் அந்தக் கூட்டத்தினரிடமிருந்து விலகிப்போவதற்காக நடையை எட்டிப் போட்டாள். அவர்கள் மிகவும் மெதுவாக ஆடியசைந்து நடந்து வந்ததால், அவள் அவர்களை முந்தி முன்னேறிச் செல்வதில் சிரமம் எதுவும் ஏற்படவில்லை.

திடீரென்று அந்த ஊர்வலம் எதனோடோ அதிவேகமாக மோதிக் கொண்டது போலத் தோன்றியது. அந்த அணி வகுப்பு முழுவதுமே திடுக்கிட்டுப் பின்னடித்தது; பய பீதி நிறைந்த கசமுசப்புக் குரல்லேசாக எழுந்து பார்த்தது. அந்தப் பாட்டும்கூட நடுநடுங்கி ஒலித்தது; இருந்தாலும் அந்த நடுக்கத்தைப் போக்குவதற்காக, சிலர் மிகவும் உரத்த குரலிலும், துரித கதியான சப்தத்திலும் அதைப்பாடத் தொடங்கினார்கள். ஆனால், மீண்டும் அந்தப்



பாட்டு உள்வாங்கி மங்கியது. ஒருவர் பின் ஒருவராக அந்த மக்கள் பாடுவதை நிறுத்தத் தொடங்கினார்கள். அந்தப் பாட்டைப் பழைய உச்ச நிலைக்குக் கொண்டுவருவதற்காக, சிலர் மட்டும் உத்வேகம் நிறைந்தவாறு பாடும் குரல்மட்டும் கேட்டது:

**பட்டினியும் பசியுமாகப்**
**பாடுபடும் தோழர்காள்-**
**துயில் கலைந்து அணியில் சேர**
**விரைந்து வாரும் தோழர்காள்!**

ஆனால், இந்தப் பொது முழக்கத்தில் ஒத்துழைப்பும் இல்லை; உறுதி பெற்ற நம்பிக்கையும் இல்லை. ஏற்கெனவே அவர்களது குரல்களில் பயபீதி புரையோடி விட்டது.

முன்புறத்தை தாயினால் பார்க்க முடியாததாலும், என்ன நேர்ந்துவிட்டது என்பதை அறிய முடியாததாலும் அவள் அந்தக் கூட்டத்தினரை முட்டித் தள்ளிக் கொண்டு, கூட்டத்தினூடே புகுந்து முன்னே செல்ல முனைந்தாள். அவள் முன்னேற முன்னேற ஜனக்கூட்டம் அவளைப் பின்னடித்துத் தள்ளியது; அவர்களில் சிலர் முகத்தைச் சுழித்தார்கள்; சிலர் தங்கள் தலைகளைத் தொங்கவிட்டுக் கொண்டார்கள். சிலர் அசட்டுத்தனமாய்ப் புன்னகை செய்தார்கள்; இன்னும் சிலர் கேலியாக சீட்டியடித்துக் கொண்டிருந்தார்கள். அவள் அவர்களது முகங்களைப் பார்த்தாள். அவளது கண்கள், வினாத் தொடுத்தன, வேண்டுதல் செய்தன, அழைப்பு விடுத்தன.

"தோழர்களே!" பாவெலின் குரல் கேட்டது. "ராணுவ வீரர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தான்! அவர்கள் நம்மைத் தொட மாட்டார்கள்! அவர்கள் எதற்காக நம்மைத் தொடவேண்டும்? எல்லோருக்கும் பயன் பெறக்கூடிய உண்மையை நாம் எடுத்துக் கூறுவதற்காகவா? அந்த உண்மை நமக்கு எவ்வளவு தேவையோ, அவ்வளவு அவர்களுக்கும் தேவை. அந்தத் தேவையை அவர்கள் இன்னும் உணராமல் இருக்கலாம். ஆனால், கொள்ளையும் கொலையும் நடத்தும் கொடியின் நிழலிலே நின்று அவர்கள் நம்மை எதிர்ப்பதைக் கைவிட்டு, சுதந்திரக் கொடியான நமது கொடியின்கீழ் வந்து, நம்முடன் கையோடு கைகோத்து, அணி வகுத்து நிற்க, அவர்களும் வந்து சேருவதற்கு இன்னும் அதிக நாள் இல்லை. அவர்கள் இந்த உண்மையை உணரும் காலத்தைத் துரிதப்படுத்துவதற்காக, நாம் நமது முன்னணியைவிடாது முன்னேறிச் செல்ல வேண்டும். முன்னேற வேண்டும். தோழர்களே! முன்னேற வேண்டும்!"

பாவெலின் குரல் உறுதி நிறைந்து ஒலித்தது. அவனது சொற்கள் தெளிவாகவும் கூர்மையாகவும் ஒலித்தன. எனினும் கூட்டம் கலைந்துவிட்டது. ஒருவர்பின் ஒருவராக அணி வகுப்பிலிருந்து வெளியே வந்து, வீடுகளை நோக்கி வேலிப்புறமாக ஒதுங்கி நழுவிச் செல்லத் தொடங்கினார்கள். இப்போது அந்த ஊர்வலம் கூரிய மூக்குடனும் அகன்ற உடலுடனும் இருப்பது போலத் தோன்றியது. அதன் தலைப்புறத்தில் பாவெல் நின்றுகொண்டிருந்தான்; அவனுக்கு மேலாக, தொழிலாளி மக்களின் செங்கொடி பிரகாசமாக ஒளிசிதறிப் படபடத்துக் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தின் நிலையைப்பற்றி வேறொரு உவமைகூடச் சொல்லலாம். ஏதோ ஒரு கரிய பறவை தனது அகன்ற சிறகுகளை விரித்து உயர்த்திப் பறப்பதற்குத் தயாராக நிற்பது போலிருந்தது, அந்தக் கூட்டம். அந்தப் பறவையின் அலகைப் போல் நின்றிருந்தான் பாவெல்...

▫ ▫

தெருக் கோடிக்கு அப்பாலுள்ள மைதானத்துக்குச் செல்ல முடியாதபடி, உணர்ச்சிபேதமே இல்லாத, முகங்களே இல்லையென்று சொல்லத்தகுந்த ஒரு சாம்பல் நிற மனிதச் சுவர் வழியை அடைத்து மறித்துக் கொண்டு நின்றது. அந்த மனிதர்கள் ஒவ்வொருவரது தோளிலும் பளபளவென்று மின்னும் துப்பாக்கிச் சனியன்கள் தெரிந்தன. அசைவற்ற மோன சமாதியில் ஆழ்ந்து நின்ற அந்த மனிதச் சுவரிலிருந்து ஒரு குளிர்ச்சி கனகனத்தது. தாயின் இதயமும் குளிர்ந்து விறைத்தது.

அவள் அந்தக் கூட்டத்தை பிளந்து கொண்டு, கொடியின் பக்கமாக, அதன் அருகே நிற்கும் தனக்குத் தெரிந்த ஆட்களின் பக்கமாகச் சேர்ந்து நிற்பதற்காக, விறுவிறுவென்று முன்னேறினாள். அங்கு நிற்கும் தனக்குத் தெரிந்த நபர்கள், தமக்குத் தெரியாத

## மக்சீம் கார்க்கி

பிற நபர்களோடு கலந்து அவர்களிடம் ஏதோ உதவியை நாடித் தவிப்பது போல நின்றார்கள். திடீரென்று அவள் ஒரு நெட்டையான மழுங்கச் சவரம் செய்த ஒற்றைக் கண் மனிதன்மீது பலமாக மோதிக் கொண்டாள். அவளைப் பார்ப்பதற்காக விருட்டென்று தலையைத் திருப்பி அவளைக் கேட்டான்:

"யார் நீ?"

"நான் பாவெல் விலாசவின் தாய்" என்று சொன்னாள். இப்படிச் சொல்கையில் தனது கால்கள் குழவாடி நடுநடுங்குவதையும், வாயின் கீழுதடு நடுங்குவதையும் அவள் உணர்ந்தாள்.

"ஆஹா!" என்றான் அந்த ஒற்றைக் கண்ணன்.

"தோழர்களே! நமது வாழ்க்கை முழுவதிலுமே நாம் முன்னேறிக் கொண்டேதான் இருக்கவேண்டும்! 'முன்னேறிச் செல்வதைத் தவிர நமக்கு வேறு வழியே கிடையாது!" என்றான் பாவெல்.

அங்கு நிலவிய சூழ்நிலை அமைதியும் ஆர்வமும் நிறைந்ததாக இருந்தது. கொடி மேலே உயர்ந்து ஒரு கணம் அசைந்தது; பிறகு மக்கள் கூட்டத்தின் தலைகளுக்கு மேலாக, எதிராகத் தோன்றிய மனிதச் சுவரை நோக்கி நிதானமாக முன்னேறிச் செல்லச் செல்ல, காற்றில் மிதந்து வீசிப் பறந்தது. தாய் நடுநடுங்கிப் போய் மூச்சு முட்டித் திணறிக் கண்களை மூடிக் கொண்டாள்-நாலு பேர்கள், கூட்டத்தை விட்டுப் பிரிந்து தனியே முன்னே சென்றார்கள். அவர்கள் பாவெல், அந்திரேய், சமோய்லவ், மாசின்-ஆகியோரும் முன்னே சென்றார்கள்.

பியோதர் மாசினின் கணீரென்ற குரல் காற்றில் ஒலித்தது:

**இணையும் ஈடும் இல்லாத**
**இந்தப் போரில் நீங்களெல்லாம்....**

ஆழ்ந்த பெரு மூச்சைப்போல் தணிந்த குரல்களில் அடுத்த அடி ஒலித்தது:

**பணயம் வைத்தே உம்முயிரைப்**
**பலியாய்க் கொடுத்தீர் தியாகிகளே!**

அவர்கள் நால்வரும் பாட்டுக்குத் தகுந்தவாறு நடைபோட்டு முன்னேறினர்.

பியோதர் மாசினுடைய குரல் பளபளப்பான பட்டு நாடாவைப் போல் சுருண்டு நெளிந்து ஒலித்தது; அந்தப் பாட்டில் தீர்மானமும் வைராக்கியமும் தொனித்தது:

**வெற்றி பெறுமோர் லட்சியமாம்**
**விடுதலைக்காக நீங்களெல்லாம்...**

அவனது தோழர்கள் அவனோடு சேர்ந்து அடுத்த அடிகளைப் பாடினார்கள்:

**உற்ற செல்வம் அனைத்தோடும்!**
**உயிரும் கொடுத்தீர்! கொடுத்தீரே!**

"ஆஹா-ஹா" என்று யாரோ ஒருவன் கரகரத்தான். "ஒப்பாரி பாடுகிறார்களடா! நாய்க்குப் பிறந்த பயல்கள்!"

"கொடு ஒரு அறை!" என்று ஒரு கோபக் குரல் கத்தியது.

தாய் தன் கைகளால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு, சுற்றுமுற்றும் பார்த்தாள். சிறிது நேரத்துக்கு முன்பு அந்தத் தெரு முழுதும் நிரம்பித் ததும்பிய ஜனங்கள், இப்போது அந்த நால்வர் மட்டுமே கொடியைத் தாங்கிக் கொண்டு முன்னே செல்வதைக் கண்டதும், உள்ளம் கலங்கித் தடுமாறிப்போய் நின்றாள். சிலர் அந்த நால்வரையும் பின்பற்றிச் செல்லத் தொடங்கினார்கள். எனினும், அவர்கள் ஒவ்வொரு அடி முன்னேறும்போதும், ஒவ்வொருவனும் அந்தத் தெரு தனது உள்ளங்காலைச் சுட்டுப் பொசுக்குவது மாதிரி உணர்ந்து பயந்து துள்ளி, பின்வாங்கி நின்றுவிட்டனர்.

**முடிவில் ஒரு நாள் கொடுங்**
**கோன்மை**
**மூட்டோடற்றுப் போகுமடா!**

பியோதர் மாசின் உபதேசம் செய்வதுபோல் பாடினான், அவனது குரலுக்குப் பல உரத்த குரல்கள் தீர்மானமாகவும், கடுமையாகவும் பதிலளித்தன.

**அடிமை மக்கள் விழித்தெழுவர்**

**அந்நாள், அந்நாள், அந்நாளே!**

என்றாலும் அந்தப் பாட்டுக்கு மத்தியில் கசமுசப்புக் குரல்களும் கேட்டன:

"அவர்கள் இதோ உத்தரவு கொடுக்கப் போகிறார்கள்!"

அதே சமயம் முன் புறத்திலிருந்து ஒரு கூரிய குரல் திடீரென்று ஒலித்தது:

"துப்பாக்கிகளை நீட்டுங்கள்!"

உடனே துப்பாக்கிச் சனியன்கள் முன்னோக்கித் தாழ்ந்து நின்றன; தம்மை நோக்கி வந்துகொண்டிருக்கும் அந்தக் கொடியை ஒரு வஞ்சகப் புன்னகையோடு வரவேற்றன.

"முன்னேறு!"

"இதோ வந்துவிட்டார்கள்!" என்று அந்த ஒற்றைக்கண் மனிதன் கூறிக் கொண்டே, தனது கைகளைப் பைக்குள் விட்டுக்கொண்டு ஒரு பக்கமாக நழுவிப் போக ஆரம்பித்தான்.

(தொடர்ந்து வரும்)

# இப்படியும் ஒரு யுத்தம்

அ.தமயந்தி-பதுளை



**நே**ரம் இரவு 11 மணியிருக்கும். மெதுவாக சத்தங்கள் கேட்க ஆரம்பித்து விட்டன. சிறிது சிறிதாக ஆரம்பித்த சத்தம் காதருகில் நன்கு கேட்கின்றது. பாழாய்ப்போன யுத்தம் இன்றும் ஆரம்பமாகிவிட்டது. கடவுளே! தினம் இதே தொல்லைதான். என்றுதான் இந்த யுத்தம் முடிவுறுமோ தெரியவில்லை. இரவில்தான் இந்தப் பயம். இரவே இல்லாவிட்டால் பிரச்சனை இருக்காதோ?

நகரத்தில் இருப்பவர்கள் தான் இந்த யுத்தத்தில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். நகரத்தில் தொழில் கிடைத்து வாடகை அறை எடுத்து என்னைப் போல் தங்கியிருக்கும் பலர் இரவில் இப்படித்தான் பயப்பட்டுக் கொண்டிருப்பார்களோ? ஊரில் இருக்கும் நாட்களில் நான் இப்படி துன்பப்பட்டதில்லை. இருந்திருந்து சிறிய சிறிய தாக்குதல்கள் ஏற்பட்டாலும் இப்படி விடிய விடிய பாரிய தாக்குதல்களை நான் அனுபவித்ததேயில்லை.

மற்ற நாட்களில் ரகுவும், சுதனும் அருகில் இருக்கும்போது எனக்கும் தைரியமாக இருக்கும். 'தடியன்கள் காலையில் தான் ஊருக்குச் சென்றார்கள். கத்தி, கம்பி, முள்களுடன் தினமும் 50 அல்லது 60 பேர் வருகிறார்கள். உடம்பை நன்கு பதம் பார்த்துவிட்டுப் போகிறார்கள். காலையில் ஆபீஸுல் 'நன்கு வீங்கியிருக்கிறான்'. என்று நண்பர்களின் கேலிப் பேச்சுக்களை வேறு சகித்தாச வேண்டும். இவ்வளவிற்கும் எம்மை பதம்பார்க்க வருபவர்கள் பெண்கள். ஏன் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? அது தான் எனக்கும் புரியாத புதிராக இருக்கிறது. ஒருவேளை ஆணினத்தை அழிக்கவந்த 'பெண்படை' இதுவோ?

நான் ஒரு அப்பாவி. பெண்களைத் தெய்வமாகப் போற்றுபவன். பக்கத்து சீட்டுல பெண் உட்கார்ந்தால் ஏன் வீண் வம்பு என்று எழும்பி விடுபவன் நான். என்னை ஏன் இவர்கள் பழிவாங்க வேண்டும்? இப்போதெல்லாம் இப்படித் தானே அதிகமாக நடக்கின்றது! யார் யாருக்கோ யுத்தம் தோன்றும். என்னைப் போன்ற அப்பாவிகளைத் தானே இருபக்கமும் குத்துவிகிறார்கள். ஆ.....ஆ... குத்துகிறார்கள். வலிக்கிறதே ஆணாய்ப் பிறந்த பாவத்திற்காக அழவும் முடியவில்லை.

இனியும் பொறுக்க முடியாது. இவர்களிடம் நேர்மையாக பேசித்தான் பார்ப்போமே. "வீராங்கனைகளே, நீங்கள் யுத்த விதிமுறைகளை தெரிந்தவர்களானால் ஒருவனை 50 பேர் தாக்குவது முறையல்லவே. மகாபாரதத்தில் கூட ஒருவனுடன் ஒருவன் சண்டையிடுவார்கள். என் வீரத்தையும் காட்ட சந்தர்ப்பத்தை தாருங்கள். என்றது தான் தாமதம் "போடா....ங்" என்று முதுகில் ஈட்டிகள் சரமாரியாகப் பாய்ந்தன. "சீ பெண்களா? பேய்களா? கல்மன ராட்சசிகள்" என்மனம் துடிக்கின்றது.

"ஏய் பெண்கள் என்று பார்த்தால் என்னைக் கோழை என்று நினைத்து விட்டீர்களா? தைரியம் இருந்தால் ஒவ்வொருத்தியாய் என் முன்னால் வாருங்கள். நிராயுதபாணியான என்னை புறமுதுகில் குத்த வெட்கமாயில்லை?" கத்தினேன். பின்னே என்ன நானும் ஒரு ஆண்மகன்தானே!

ஹும் யாரும் கேட்பதாய் இல்லை. அறையில் வெளிச்சம் இல்லை. நிலவொளி கூட இல்லை. என் கெட்ட நேரம் இன்று அமாவாசை. கண்ணிற்கு படாமல் இல்லையா தாக்குதல் நடத்துகிறார்கள். லைட்டைப் போட எழும்பிச் செல்லவும் பயமாக உள்ளது. என்ன இப்படி கத்துகிறார்கள்- "என்ன தின்பான் இவன். எழும்பன்." என்று திட்டுகிறார்களோ.

பக்கத்து வீட்டு டி.வி 'நமோ நமோ மாதா' பாடி ஓய்ந்து நின்று விட்டது. நான் இன்னும் ஓயவில்லை. போர்வையை உதறி உதறிக் கொண்டிருக்கின்றேன். நாளை வேலைக்கு வேறு செல்ல வேண்டும். ஒப்பந்தங்கள் எமக்கு இனி ஒத்துவராத். குட்டக் குட்டக் குனிந்தாலும் மடையன் தானே! இவ்வளவு நேரம் பாவம் பெண்கள். என்று 'பொறுத்தது போதும். (ஒரு ஆறுதல்தான்) வருவது வரட்டும்' என்ற முடிவோடு போர்வையை விலக்கிவிட்டு தட்டுத்தடுமாறி லைட் சுவிட்சைத் தட்டினேன்.

கட்டில் மேல் தேடுகிறார்கள் என்னை. ஒரு சில்வர் தட்டை எடுத்து இருபுறமும் தேங்காயெண்ணையை நன்கு பூசி, கோபம் எல்லாம் தீரும் மட்டும் அறை முழுவதும் நன்கு விசிக்கினேன். ஒருத்தி பாக்கியில்லை- எல்லோரும் எண்ணெய் தட்டில் ஒட்டிக் கொண்டார்கள். இப்போதுதான் நிம்மதி எனக்கு. என் கோபம் தீரும்வரை நசுக்கினேன்- நுளம்புகள் ஒவ் வொன்றையும்- 'வெற்றி என் பக்கம்' என்ற இறுமாப்போடு.



படிப்பகம்

www.padippakam.com

# உன் நினைவுகள் நிரந்தரம்

மாலை மயக்கும் நேரம்:

நாள் முழுவதும் உழைத்துக் களைத்த இந்த தோட்டத்து மக்களைப் போல் சூரியனும் சோர்ந்து போய் மேற்கு திசையில் மெல்ல ஓய்வெடுத்துக் கொள்ள ஆரம்பித்திருந்தான்.

இதமான தென்றலொன்று பதமாக என் மேனியைத் தழுவிச் செல்ல எனக்கு புதியதோர் உற்சாகம் பிறந்தது. நகரத்திலிருந்தே மலையேறி இந்த தோட்டத்துக்கு கால் நடையாகவே வந்ததால் எனக்கு சற்று இளைப்பாயிருந்தது.

மெல்ல தூரத்தில் தெரிந்த 'ஊத்துப் பீலி' ஒன்றை நோட்டமிட்டபடி நடக்க, தாகம் எனக்குள் இரட்டிப்பாயிருந்தது.

"சின்ன சின்ன ஆசை... கொழுந்தெடுக்க ஆசை... முத்து முத்து ஆசை. முழு காம்புபிக்க ஆசை..." பாடிக்கொண்டு வந்த பெண்கள் பட்டாளமொன்று என்னைக் கண்டு திடுக்கிட்டு நிற்க நான் இரசித்தபடி, பாடியவளை நோட்டம் விட்டு ஒரு கணம் அப்படியே சிலையாய்போய் நின்றேன்.

பொன்னால் செதுக்கப்பட்ட சிலையாய் இருந்தாள் பாடியவள். நெற்றியில் ஒரு 'ஸ்டிக்கர்' பொட்டு. முதுகில் அழகியதோர் சின்னக் கூடை. என்னைக் கண்டு வெட்கித்தவள் தலை குனிந்து நகம் கடித்தாள்.

"ஏய் பொண்ணு ஒம் பேரென்னா.....?" அவள் பேசுவதாயில்லை. மௌனித்து நின்றாள்.

"பேரு கேக்கிறேனில்ல?" மற்றப் பெண்களோ, அவளையும் என்னையும் மாறி மாறி அதிசயித்துப் பார்க்கிறார்கள்.

"ஏய் புள்ள..... ஒம் பேரென்னா சொல்லுவே......?"

"பேரக்கா...." கூறிவிட்டு நகைக்க எனக்கும் சிரிப்பு வந்தது.

"சரி, எங்க இருக்கிற?"

"இங்கதான்..." பக்கத்தில் நின்றவள் பட்டென பதிலளிக்க அவள் சொன்னவளை முறைத்துப் பார்க்க அவள் மௌனிக்கிறாள்.

"திரும்ப ஒரு தடவ பாடுவே?"

"ம்.... பாருவேடி மச்சானுக்கு ஆசைய?" கூறிவிட்டு அவள் சிரிக்க மற்றப் பெண்களும் சேர, நானும் கூடி சிரிக்கிறேன்.

"தொர... நீங்க யாருங்க?" அவளுக்குப் பக்கத்திலிருந்தவள் தான் கேட்டாள். ஏன் அவள் கேட்டிருக்கக்கூடாதா? மனம் வேதனைப்பட்டது.

"நான் தான் இந்த தோட்டத்து ஸ்கூலுக்கு புதுசா வந்திருக்கிற மாஸ்டர்" நான் கூறி முடித்தது தான் தாமதம். எல்லோர் முகத்திலும் திடீரெனவோர் மாற்றம். எனக்கு பார்ப்பதற்கே வியப்பாக இருந்தது.

"வாங்க இவரு நம்ப தோட்டத்து ஸ்கூல் வாத்தியாருடி....." கூறிவிட்டு மற்றப் பெண்களோடு மானாய் துள்ளி ஓடிப்போனவளை மறையும்வரை பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

புதிய இடம் அதுவும் குளிரான பிரதேசம் என்பதால் உறக்கம் வர மறுத்தது. நினைவெல்லாம் மலை உச்சியில் கண்ட



அந்த மங்கையைப் பற்றியே சுற்றி சுற்றி வந்தது.

அவளது அழகு, நடை, பேச்சு, குறும்புத்தனம் எல்லாமே எனக்கு பிடித்துப் போய் விட்டது.

அடுத்தநாள் காலையிலேயே எழுந்து ஆயத்தமாகி பாடசாலை செல்லப் புறப்பட்டிருந்தேன். ஆனால் நேற்றைய நினைவு எனக்குள் இன்றும் பசுமையாகத்தான் இருந்தது.

பாடசாலைக்குக்கூட நேற்றுவந்த பாதை வழியே தான் செல்ல வேண்டும். சில நேரம் அவள் இந்தவழியே வரலாம். எனவே காத்திருந்தேன். எனது எண்ணம் வீணாகவில்லை. வந்தாள் அதுவும் தனியாக.

நேற்றையவிட இன்றும் அவள் அழகாகத்தானிருந்தாள்.... என்னருகில் வந்து மௌனமாய் நின்றவளை பார்த்து லேசாய் சிரிக்கிறேன்.

"தொர நேத்து உங்களை யாருனு தெரியாம எதையெதையோ பேசி விட்டோம். எங்கள மன்னிச்சிடுங்க..." வார்த்தைகள் துண்டு துண்டாக வந்தாலும் இனிமையான குரல்.

நான் சிரித்தேன்.

"இங்க பாரு பொண்ணு..." பட்டென அவள் என் பேச்சை இடைமறித்தாள்.

"என் பேரு பொண்ணுல்ல...... தேவி...." பெயருக்கு பொருத்தமானவள்தான் இது என் ஊகம்!

"நாளைக்கும் இந்த ரோட்டுல வருவியா?"

"இல்ல நாளைக்கு 19ம் மல பணிய ரோட்டுல தான் போவேன்...."

"அப்ப நான் அங்க உனக்காக காத்திருப்பேன்" கேட்டவள் பட்டென முகம் மாறினாள்.

"எதுக்கு?"

உதடு கடித்தேன் "தெரியாது"

கூறிவிட்டு பதிலுக்கு கூட காத்திராமல் நான் மலையிறங்கினேன். ஆனால் அவள் இறங்கவில்லை. அவ்விடத்திலேயே நின்றபடி நான் போவதையே பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. இந்த ஊர்! இங்கு வாழும் மக்கள்! எல்லோரையும் எனக்கு நன்றாக பழக்கப்பட்டு விட்டது. அதுவும் தினந்தோறும் காலை வேளைகளில் தேவியை காணாமல் நான் பாடசாலைக்கு காலடி வைத்ததில்லை. அவளை நான் காதலித்தேன். இதயபூர்வமாக காதலித்தேன்.

அவளது ஒவ்வொரு நடவடிக்கையும் எனக்குப் பிடித்திருந்தது. ஆனால் என் காதலை அவளிடம் சொல்ல சந்தர்ப்பம் வரும் வரை காத்திருந்தேன். அந்த வேளையும் வந்தது.

"தொர நீங்க என்ன சொல்லுறீங்க?"

"ஆமா தேவி.... நான் பொய் சொல்லல உன்ன நான் மனப்பூர்வமா காதலிக்கிறேன். நான் உன்ன ஏமாத்திடுவேனு நினைக்காத.... நான் படிச்சவன் ஒரு பொண்ண ஏமாத்திறது எவ்வளவு பாவமுனு எனக்கு நல்லாவே தெரியும்."

அவள் பேசவில்லை. லேசாக அவளது விழிகளில் கண்ணீர் அரும்பியிருந்தது.

"தேவி.... ஏன் அழுவுற....? என் மேல விருப்பமில்லையா?" அவள் பேசவில்லை. மௌனித்தாள்.

பின்னர் பேசாமலேயே நடந்து போனாள். நான் பலமாக அவள் செவிகளுக்கு கேட்கும்படி சொன்னேன்.

"தேவி இங்கபாரு.... நீ தான் என் மனைவின்னு நான் தீர்மானிச்சிட்டேன். நாளைக்கு ஸ்கூல் லீவு. நான் ஊருக்குப் போறேன். லீவு முடிஞ்சி வாரப்ப அம்மா அப்பாவுட்டு சம்மதத்தோட உன்ன தேடி வருவேன்."

ஓடியவள் நான் சொன்னதை நின்று கேட்டாள். பின் சொல்லி முடித்ததும் ஓடிப்போனாள்.

ஒரு மாத கால லீவில் ஊருக்குப் போயிருந்தது திரும்பவும் மலையகத்து மண்ணில் காலடி வைத்ததில் மனதுக்கு பெரும் மகிழ்ச்சியாயிருந்தது.

அதைவிட மகிழ்ச்சி.... இன்று தேவியை காணப் போவதுதான். வீட்டில் அவளை நான் மணப்பதற்கு வெறுப்பு தெரிவித்திருந்தார்கள். ஆனாலும் நான் முடிவாய்ச் சொல்லியிருந்தேன்.

"தேவிதான் என் மனைவி..." என்று

தோட்டத்துக்கு வந்து ஐந்து நாட்கள் ஆகிவிட்டது. ஆனாலும் தேவியை சந்திக்க முடியாமலிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை! ஆற்றுநீரில் குளிக்கச் சென்ற நான் கண்ட காட்சி தலையில் ஆயிரம் சம்மட்டிகளால் ஓங்கி அடிப்பதைப் போன்றிருந்தது.

"தா....தா...தா.....தாலி...!" எனக்கு லேசாக தலைசுற்ற ஆரம்பித்தது. அதற்கிடையில் அவள் என்னையும் [illegible]விட்டாள். அவள் கண்களும் குளமாகியது.

"தேவி......நீ.....நீ....கல்யா " என்னால பேச முடியவில்லை அழுதேன், பலமாய் அழுதேன்.

"தொர என்ன மன்னிச்சிடுங்க....." அவளும் அழுதாள்.

"தேவி....நீ....என்ன" வார்த்தைகள் வரவில்லை. ஆனால் அவள் பேசினாள்.

"தொர என்ன.... மன்னிச்சிடுங்க நீங்க எவ்வளவோ படிச்சவரு. நான் மழைக்கு கூட பள்ளிக் கூடத்து பக்கம் ஒதுங்கினதில்ல.

ஒங்களுக்கு பட்டணமெல்லாம் தெரியும். நான் இந்த தோட்டத்த விட்டு வெளியிலேயே போனதில்ல. அப்படிப்பட்ட என்ன நீங்க கல்யாணம் பண்ணி என்னா காணப் போறீங்க தொர?"

அதுதான் உங்க வாழ்க்கைய வீணாக்கக் கூடாதுனு, இந்த தோட்டத்துலேயே சம்சாரம் செத்துப் போன ஒருத்தருக்கு மனைவியாகி விட்டேன். நீங்க நான் உங்கள ஏமாத்திட்டதா நினைக்காதீங்க! தொரவுட்டு நல்ல மனசுக்கு நல்ல ஒரு சம்சாரம் கெடப்பாங்க....." கூறிவிட்டு விம்மி அழுதவளைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. நான் அழுவதை நிறுத்தி கண்களை அழுத்தி துடைத்துக் கொண்டேன்.

"பொண்ணே நீ என் வாழ்க்கையை வளமாக்க இப்படியொரு தியாகத்தை செய்துள்ளாயே"

மனம் லேசாக வலித்தது. தெளிந்ததோர் தீர்மானத்தோடு வந்த வழியே நடந்தேன். அதுவும் கடந்த கால நினைவுகளோடு.....

ஆனாலும் மனதுக்குள் இப்படிச் சொல்லிக் கொண்டேன்.

"பெண்ணே உன் நினைவுகள்தான் இனியெனக்கு நிரந்தரம்" என்று.

**-ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்-**

# விஷ நாகங்கள் / நாவுகள்

கதவைப் பூட்டிவிட்டு படியிறங்கிய போது 'சில்' லென காலைப்பனியை காவிவந்த காற்று முகத்தில் முட்டியது. "ஆ... ச்சு" விளைவாக சடுதியான தும்மல் புறப்பட தொடர்ந்து தும்மலாய் வெளிப்பட்டது.

"புறப்பட்டியாம்மா..... பத்திரமாய் போய் வா." போர்டிங் வீட்டு ஆண்ட்டி பரிவோடு வழியனுப்ப, கைக்குட்டையால் மூக்கை மூடியவாறு வெளியிறங்கினாள். "வர்றேன் ஆண்ட்டி." புன்னகையோடு புறப்பட்டாள் சவிதா.

சம்பந்தா சம்பந்தமில்லாது அம்மாவின் நினைவு எழ, நெஞ்சுக்குள் 'பக்' கென எதுவோ அடைத்தது. சிறுவயதில் பாடசாலைக்குபோன பருவம் ஆகட்டும் வளர்ந்து தொழிலுக்கு போகும் வரையாகட்டும் அத்தனை கருமங்களையும் அவளுக்கென பார்த்துப் பார்த்துச் செய்த அம்மா. ஆண்டவனுக்குப் பொறுக்கவில்லை போலும். கூடவே அப்பாவையும் சேர்த்து அம்மாவோடு விபத்து எனும் பெயரில் தன்னிடம் அழைத்துக் கொள்ள சவிதா தனித்துப் போனாள்.

வழக்கம் போல எதிலும் பட்டுக் கொள்ளாமல், தொட்டுக் கொள்ளாமல் நழுவும் உறவுகள் இவளை சுமையென எடை போட்டு விலகிக் கொள்ள இவள் மனதுக்குள் சிரித்துக் கொண்டாள்.

போர்டிங் வீடு தேடியவளுக்கு ஆண்டவன் மனம் வைத்து நல்லதோர் இதயங் கொண்ட பெண்ணை அறிமுகமாக்க அங்கேயே தங்கிக் கொண்டு தொழில் பார்க்கிறாள்.

**ஷர்மினா இஸ்மாயில்-கண்டி**

அவ்வப்போது பாசங்களை யெண்ணி மனம் ஏங்கும். சமாதானப்பட்டுக் கொள்வாள். இரத்த உறவுகள் தாம் சொந்தமா? இல்லை நெஞ்சுக்குள் உண்மை நேசம் கொண்ட அந்நியர் கூட பந்தமே என மனதை அடக்குவாள்.

"ஒரு பெண்ணால் தனித்து வாழ முடியாது சவிதா. தனக்கு என துணையொன்று தேவைம்மா..... நீயா பார்த்து தேர்ந்தெடு. இல்ல நாங்க பார்த்து செய்து வைக்கட்டுமா? அங்கிளும் இதைத்தான் சொல்றாரு." ஆண்ட்டி பரிவோடு இதமாக சொன்னார்.

"போங்கம்மா. நீங்க இன்னும் பழைய காலத்தில இருக்கீங்க...தனியா வாழணும்னு நினைச்சா வாழலாம். நெஞ்சில் திடமும் தைரியமும் இருந்தா சரி. அத்தோடு எங்களுக்குன்னு நாங்களா ஒரு கட்டுப்பாட்டை விதிச்சுட்டா ஒழுங்கா வாழலாம். மனம்தான் முக்கியம் ஆண்ட்டி. தனியா சுதந்திரமா வாழற பெண் ஒழுங்கா வாழலாம். சிலசமயம் அடக்கியொடுக்கி பாதுகாப்போடு வள்ர்ற பெண் ஒழுக்கம் தவறலாம்....." சவிதா சொல்லவே ஆண்ட்டி புன்னகைத்தார். ஆமோதித்தார்.

"அதோ போறாளே பொண்ணு..... அப்பா, அம்மா யாரும் இல்லாத அநாதை. பார்த்தா சொல்லுவியா? உடையென்ன, நடையென்ன? எங்கெங்க போய் எப்படியெப்படி அலையறாளோ?...... கிக்கிக்கீ......" ஏளனமாக ஒலித்த குரலுக்குரிய நபரை வெறித்தாள். கலைந்த தலையும், செருப்பில்லாத பாதங்களும், சுருங்கிய சேர்ட்டும் கையில் புகையும் பீடியுமாக ஒருவன் பக்கத்தில் வெற்றிலைக் காவி படிந்த உதடுகளோடு இன்னொருவன்.

பெட்டிக்கடை படியில் விடிந்தால் இருளும்வரை உட்கார்ந்து வெட்டிப் பொழுது போக்கும் ஈனப்பிறவிகள். கண்டு கொள்ளாமல் போனாலும் மனது கொஞ்சமாய் நசுங்கிய உணர்வு அவளுக்குள். "காறி உமிழச் சொன்னானே பாரதி! முடியுதா உன்னால்?" மனசாட்சி ஆங்காரமாய் கத்திற்று.

யோசித்தவாறே போனவளை எதிர்வந்த வண்டி முட்டித்தள்ளும் மட்டும்தான் நினைவு அவள் சுயமாய் இருந்தது.

காயங்களுக்கான கட்டோடு ஆஸ்பத்திரியில் கிடந்தவள் விழித்த போது ஆண்ட்டியின் அன்பு முகம் அருகே ஆவலாய்ப்பார்த்தது. "அம்மா" கண்ணீர் விட்டவாறே கையைப் பற்றினாள். "உஷ் அழக்கூடாது. தைரியம் துணிவு பற்றிப் பேசிய பெண்ணா இது? என்ன கண்ணம்மா..... யாரு வந்திருக்காங்க பாரு."

கண்களுக்கு தென்பட்டது எதிர்வீட்டு அங்கிளின் மகன் ரகு. உன்னை இங்கே சேர்த்தது மட்டுமல்ல.... வேண்டிய அத்தனை காரியங்களும் செய்த பிள்ளை." ரகுவைப் பற்றி ஆண்ட்டி விபரித்தாள். கண்களில் நன்றியைத் தேக்கி நாவை அசைத்தாள் சவிதா. அவன் புன்னகைத்தான்.

"ஆஹா....அழகு ரதி போறாங்க போர்த்திகிட்டு. அவவின் ஆட்டம் எங்களுக்கு தெரியாதுன்னு நெனப்பு. ரகுப் பையன் கொஞ்சம் வாட்ட சாட்டமா கையில பசையுள்ள பையன். அவன மடக்கிட்டாளே புடிச்சாலும் புளியங் கொம்பா புடிக்கணும்பா." திரும்பிப் பார்க்காது நடந்தாலும் மனது 'கிடுகிடு' வென நடுங்கியது. வியர்த்தது. கண்ணுக்குள் அருவி வருவேன் என பயங்காட்டியது. 'கெக்கே பிக்கே' வென சிரித்து கைதட்டி கும்மாளமிட்டது. அந்தக் கூட்டம் விஷம் தடவிய சொற்கள் விஷ நாவுகள்.




"அம்மா..." அழுகை 'பட்' டென வர அடக்க முடியாது விம்மிவிம்மியழுதாள் சவிதா. "ஆண்டவனே... நான் மனதாலும் நினைத்துப் பார்க்காத ஒன்று ஏன் இவர்கள் இப்படியெல்லாம் பேசுகிறார்கள்..... அம்மா அப்பா நீங்கள் என்னையும் சேர்த்துக் கொண்டு போயிருக்கக்கூடாதா...." மனப்பாரம் தீருமட்டும் கதறினாள். ஆண்ட்டியும் பொங்கி வந்த கண்ணீரை அடக்கியவாறு சவிதாவைத் தாங்கினார். "அழாதேம்மா.....அழாதே.... நரம்பில்லாத நாக்கு. கண்டதையும் பேசத்தான் செய்யும்.... லட்சியம் பண்ணாதேம்மா...."

சவிதா சோர்ந்து போனாள். எதிலும் நம்பிக்கையற்றுப் போனது போல் உணர்வுகள் தொய்ந்தன. ரகுவையும் அவளையும் இணைத்து பேசிப்பேசியே கதை வளர்த்தார்கள் சிலர். ஊர் வாயை மூட யாரால்தான் இயலும்?

"சவிதா...." யாரோ கூப்பிட திடுக்கிட்டு நிமிர்ந்தாள். ரகுதான் படபடவென நெஞ்சமடித்துக்கொள்ள எழுந்து கொண்டான். வார்த்தைகள் வரமறுத்தன. உணர்ந்தவன் போலப் பதறாதீங்க. எனக்கும் எல்லாம் தெரியும். உங்க வேதனையும் புரியுது எதுக்காக இவங்க இப்படிக் கட்டுக்கதையெல்லாம் சொல்றாங்களோ தெரியல. இனி இதை இப்படியே வளரவிடக்கூடாது. அவங்க வாயை அடக்கணும்னா எ.....எனக்கு எனக்கு வேறு எதுவுமே தோணலை. உங்களை நான் கல்யாணம் பண்ணிக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டேன்.

கண்ணீரோடு புன்னகைத்தாள் சவிதா.

# புரியவில்லை



**சுகந்தி**

இன்று ஊரிலும் நிறைய திருமணவீடு. எல்லோரும் ஒவ்வொரு வீட்டுக்கும் போய்விட, வீட்டில் நான் மட்டும் தனியானேன். தினமுரசின் பக்கங்கள் எல்லாம் அத்துப்படி, அலுப்போடு காலை நீட்டி கதிரைக்குள் சாய்ந்தேன். யன்னலூடே வெள்ளிச் சரிகை மின்னலடிக்க, வீதியை நோக்கினேன். ஓ....... மாமியா? என் கதிரைச் சலசலப்பு கேட்டு திரும்பிப் பார்த்தவர், பார்த்தும் பார்க்காதவர் போல் 'வெடுக்' கென முகத்தை திருப்பிக் கொண்டார். என் அப்பாவின் தங்கைதான். நீண்ட நாட்களாய் அரித்தெடுத்த அந்தக் கேள்வி மீண்டும் தலை நீட்டியது. கதிரையில் அமர்ந்து கொண்டேன். கேள்விக்குப் பதில்தேடி. ஏன்..... எனக்குப் புரியவில்லை.

ஐந்து வருடங்களாகத்தான் இப்படி. இதற்கு முன் மாமா, மாமி, சிற்றப்பா, சித்தி என்று உறவு கொண்டாடி, ஒன்றாகவே உண்டு, இன்பதுன்பங்களைப் பகிர்ந்து அன்போடு வாழ்ந்த காலங்களை எண்ணிப் பார்க்கிறேன். ஏன் இப்படி மாறிப் போனார்கள், எதற்காக இந்தப் பெருமை காட்டுகிறார்கள்? எனக்குப் புரியவில்லை. இவர்கள்தான் இப்படி என்றால் அங்கிருப்பவர்களாவது 'சுகமா' என்றாவது ஒரு கடிதம் கூடவா போடமுடியாது? ஏன் இப்படி என்று எனக்குப் புரியவேயில்லை.

கூடிப்பிறந்த உறவுகளை, ஓடிவிளையாடிய மணல்வெளியை, பாடித்திரிந்த நெல்வயலை..... எல்லாம் மறந்து கனவுகளை மட்டுமே சுமந்து கொண்டு எங்கோ தொலைதூரத்தில் இயந்திரமாய் வாழ்கிறார்களே அங்கிருப்பவர்களை நினைத்து இங்கிருப்பவர்கள் பெருமைப்படுகிறார்களா?

பெற்றவளை, உடன் பிறப்புக்களை விட்டு எங்கோ இருப்பவன் அழைக்கிறான் என்று அனுப்பிவிட்டு வெறும் படத்தில் மட்டுமே திருமணக் கோலத்தைக் காண்கிறார்களே! அதைக் கண்டு பெருமைப் படுகிறார்களா?

பட்டுச் சேலையும், தலை நிறைய மல்லிகைப் பூவும் வைத்து உறவுகள் சேர்ந்து கோயிலுக்குப் போகும் வயதில் கட்டைக் காற்சட்டையும், ஒட்டிய ரீசேட்டும் அணிந்து காரில் ஊர்வலம் வருகிறார்களாம். அதை நினைத்து இவர்கள் பெருமைப்படுகிறார்களா?

பெற்றெடுத்த மூன்று பிள்ளைகளையும் ஆளுக்கொரு நாட்டுக்கு அனுப்பிவிட்டு வெறிச்சோடிக்கிடக்கும் வீட்டை நினைத்தார்களா? தம் கடைசிக் காலத்தில் கூட பிடிமண் போட ஆளில்லாமல் கடிதத்தில் மட்டும் கடைசிச் செய்தியை அனுப்பிவிட்டு அவர்கள் வரும்வரை உடலைக்காயவைத்துக் காத்திருப்பார்களே அதற்குத்தான் இந்தப் பெருமையா? எனக்குப் புரியவில்லை.

புதிதாகச் செய்த அரைப்பவுண் தோட்டையும் பட்டுச் சேலையையும் முன் வீட்டு வசந்தியக்காவுக்குக் காட்டி மகிழ்வதால் வரும் இன்பம் இவர்களுக்கெங்கே கிடைக்கப் போகிறது?

பாதையில் ஏறி ஆற்றைக்கடந்து மண்டூர் முருகன் கோயிலுக்குச் செல்லும் சுகம் இவர்கள் அனுபவிப்பார்களா?

நுங்கு வெட்டி உண்ணும் சுகம் எங்கே, பனம் பழம் பிழிந்து பலகாரம் செய்து பகிர்ந்துண்ணும் சுகம் எங்கே? முந்திரி மரத்திலேறி பழம் உண்டு பருப்பைச் சுட்டு சுடச் சுட உண்ணும் சுகம் எங்கே?

ஏறுகெழுத்தியும் கறுத்தக்கொழும்பான் மாங்காயும் சேர்த்து பால்கறி சமைத்து பக்கத்து வீட்டு சுமதியக்காவுக்கு கொடுத்து ருசிபார்க்கும் சுகம் எங்கே?

அடித்தாலும் உதைத்தாலும் நானுந்தன் பிள்ளை என்று சொந்தமண்ணில் வாழும் இன்பம் எந்த நாட்டில் கிடைக்கப்போகிறது? ஏனிந்தப் பெருமை இவர்களுக்கு? எனக்கு இன்னும் புரியவேயில்லை.

வாசலில் அம்மா வரும் சத்தம் கேட்கிறது. கேள்வியை மடக்கி நெஞ்சுக்குள் மீண்டும் புதைத்தேன்.

## தருவது ரசிகன்

# 1 = 7

வெற்றி முரசம் விண்ணதிரக் கேட்டது. வில்லில் இருந்து புறப்பட்ட அம்பாக விரைந்து வந்தாள் தோழி பூங்கோதை.

அந்தப்புரத்தில் முத்தும்-பவளமும் பொறித்த கட்டிலில் சாய்ந்திருந்த மலர்விழி விரைந்து வந்த தோழியை வினாக்குறியாக ஏறிட்டாள்.

"என்னடி அவசரம்?"

"சரமாகப் போகிறாய் நீ! அள்ளிக் கொள்ள, அணைத்துச் சூட, பள்ளி யறைக்குள் சரத்தோடு சரசமாட வந்து விட்டார் இளவரசர்!"

தோழி சொன்னதும் மலர்விழியின் வதனத்தில் ஒரு மின்னல். மனதுக்குள் மலர்மாரி. போர் முடிந்து நாடு திரும்பி விட்டான் இளவரசன். பிரிவென்ற நெருப்பிலே புழுவாக துடித்த மனம், களிப்பென்ற தேன் குடத்தில் இனிப்பாக நனைந்து கொண்டிருந்தது.

"இளவரசருக்கும் சுகமள்ளிக் குளிக் கும் அவசரமிருக்கும். நனைய வரும் நேரத்தில் நான் இருப்பது நல்லதல்ல."

சொல்லிவிட்டு, வந்த வேகத்திலேயே திரும்பிச் சென்றாள் தோழி பூங்கோதை.

மலர்விழிக்கோ இருப்பே கொள்ள வில்லை.

'நேற்றுவரை தனிமையிலே தவிப்பு. நெஞ்சமெல்லாம் மன்னவனின் நினைப்பு. கனவுகளில் படுக்கையிட்ட இரவு. அவன் கொஞ்சுகின்ற நினைவுகளே இனிப்பு. மஞ்சத்தில் செய்த குறும்பு, எப்போது நினைத்தாலும் கரும்பு.'

வானவெளி வெளுத்திருக்கும்; என் மனவானம் கருத்திருக்கும். மன்னவனின் திருநாமம் என் நாவில் நிறைந்திருக்கும். வாயிதழில் அவன் தந்த தித்திப்பு தொடர்ந்திருக்கும்.



வாளேந்தும் கரம் நீட்டி இடைவளை வில் பிடித்தபிடி வலிக்காமல் இனித்த தென்ன? மீண்டும் அந்தக் கரம் தேடி இடை துடித்து துவண்டுவிடும்.

நெடு மூச்சு வெளிக்கிளம்ப, மஞ்சம் என்று அவன் புரண்ட நெஞ்சத்து கோபுரங்கள் நெருப்பாகக் கொதித் திருக்கும்.

பாலாடை மேனியென்றும், தேனூறும் கேணியென்றும், சரசத்தில் தேனீ யென்றும், இன்பக் கடலுக்கு தோணி யென்றும், சொர்க்கத்திற்கு ஏணியென்றும் அவன் சொன்ன மேனியிங்கே துடுப்பிழந்த தோணி யாகப் போனதன்றோ? பிரிவென்ற புயல் வந்து துடுப்பைத்தான் பறித்ததுவோ?!'

மலர்விழி மடல் எடுத்து எழுதிக் கொண்டிருந்தாள்.

இளவரசன் புகழரசன் வந்ததும் அவனிடம் காட்ட வேண்டும்.

பிரிவென்ற வாள் பிளந்த நெஞ்சத்தை மடல் மூலம் காட்ட வேண்டும்.

உனக்கென்ன போர் உண்டு. எனக் கிங்கே யார் உண்டு என்று கேட்க வேண்டும்.

இனிக்கின்ற நினைவுகள் கனக்கின்ற நெஞ்சுக் துணையாக எத்தனை நாள் கூடவ்ரும் என்று வேதனையின் வெப்பத்தைக் கொட்ட வேண்டும்.

மலர்விழி தொடர்ந்து மடலில் தன் உணர்வுகளை எழுத்தாணியென்னும் கலப்பையால் உழத் தொடங்கினாள்.

'எரிகின்ற நிலவுக்கும் பகலினிலே ஓய்விருக்கம். விழித்திருக்கும் விழிகளுக்கோ நேரில் நீ தெரிகின்ற நாள் வரையும் ஓய்வேயில்லை.

உறையிலே இருக்கும் வாள் உன்னோடு கூட வரும். அறையிலே இருக்கும் என்னோடும் ஒருவாள் குடியிருக்கும். பிரிவென்னும் கொடுவாளே அதுவாகும். உறைவாள் சிரசறுக்கும். இந்தக் கொடு வாளோ என் நெஞ்சையே அறுக்கும்!

எழுதி நிறுத்தி விட்டு யோசித்தாள் எங்காவது பழுது இருக்கிறதா என்று எழுதியதை மீண்டும் வாசித்தாள்.

மனதுக்குள் ஒரு குரல் கேட்டது 'அடியே மலர்விழி, வேதனை சொன்னாய். இப்போது உனக்கு வேண்டுவதைச் சொல்ல வில்லையே!"

அதுவும் சரிதான் என்று பட்டது. மெல்லச் சிரித்துக் கொண்டே மலர்விழி எழுதினாள்.

## இலக்கிய நயம்

'நினைத்துக் காத்திருந்து நெஞ்சாரத் தழுவுதலும் தேவ சுகம்!

துடித்த நெஞ்சத்தை நீ வருடி, கொதித்த தேகத்தை குளிர்வித்து, 'நில் நிலவே நீளட்டும் இரவென்று வரம் கேட்டு, சொல் இந்த சுவைகளுக்கு சொர்க்கத்தில் கூட ஈடுண்டோ என்று நீ கேட்க, வெட்கத்தை நான் வில்லாக்கி, ஒரு சிணுங்கலை நான் அம்பாக்க, சில் லென்று மலர்ந்த தாமரையோ இதுவென்று என் முகம் முழுக்க நீ நனைக்க, செல் என்று வெட்கத்தை விரட்டிவிட்டு பதிலுக்கு



நானும் உன் முகம் நனைக்க... அம்மட்டோ...' அம்மட்டோ...'

எழுதும்போதே மலர்விழிக்கு வெட்கம் வந்துவிட்டது.

படித்துப் பார்த்தாள். வேண்டாம். கிழித்துவிடலாம் என்று நினைத்தாள். மறு நொடியே முடிவை மாற்றிக் கொண்டாள்.

கொடுக்கலாம். இதையெல்லாம் நேரிலா சொல்ல முடியும்? இப்போது இளவரசனின் காலடிகள் கேட்டன. மலர்விழி தவித்துப் போனாள். ஒரே முடிவாக எழுதிய மடலை கிழித்துப் போட்டுவிட்டாள். பின்னர் இன்னும் நன்றாக எழுதிக் கொடுக்கலாம்.

இளவரசன் வந்துவிட்டான். முகம் முழுக்க மலரத்துடித்த புன்னகையை கட்டாய மாகத் தடுத்துக் கொண்டாள்.

"மகாராணிக்கு மனது சரியில்லை யாக்கும்"

"அதெப்படி சரியில்லாமல் போகும்? மகாராணியை நாள் தவறாமல் கவனிக்கும் மகாராஜாதான் எப்போதும் கூட இருக் கிறாரே!"

மலர்விழி குத்துகிறாள் என்று புரிந்து கொண்டான் இளவரசன் புகழரசன்.

"மகாராணி இங்கிருந்தாலும் மனம் மட்டும் என்னிடம்தானே!"

"நீ எங்கிருந்தாலும் உன் நினைவு என்னுடன் இருக்கும் என்று வசனம் பேசப்போகிறீர்களாக்கும். இந்த வேலை யெல்லாம் இங்கே வேண்டாம்."

மலர்விழி சீறினாள்.

"புரிகிறது உன் வேதனை. நானென்ன வெட்டி வேலைக்காக போனேன். வீர வேலைக்குத்தானே போனேன். அதுவும் அதிக நாட்கள் இல்லையே மலர்விழி!"

"என்ன சொன்னீர்கள்?"

"அதிக நாட்கள் இல்லையே. விரைந்து வந்துவிட்டேனே என்று சொன்னேன்!"

முறைத்தாள் ஒருமுறைப்பு.

"பூ முகத்தில் புயலடிக்கலாமா? தேன் இதழில் தீ கிளம்பலாமா? பிறைப்புருவம் பகையுருவாகலாமா?"

இளவரசன் குழைந்தான். அவளின் மறுப்பையும் மீறி அணைத்தான். ஆதரவாய் நெற்றியில் முத்தமிட்டான்.

"போதும்"

என்றாள்.

"எண்ணாமல் இருந்ததில்லை உன்னை. சத்தியமாய் நான் சொல்வதெல்லாம் உண்மை. எண்ணியெண்ணி அனுமதிக் கிறாயே இது கொடுமை."

"பொய்!"

"எது பொய்?"

"எண்ணாமல் இருந்ததில்லை என்று சொன்னது!"

"எப்படிச் சொல்கிறாய்?"

"எண்ணிக்கையில் தவறு இருப்பதை வைத்துச் சொல்கிறேன்!"

"எண்ணிக்கையில் தவறா?"

கேட்டபடியே இடையில் ஆராய்ச் சியை ஆரம்பித்தான். மலர்விழி இம்முறை தடுக்கவில்லை. அவன் கேள்விக்கு பதில் சொன்னாள்.

"அதிக நாள் இல்லையென்றீர்கள். 49 நாட்கள் என்பது குறைச்சலாக தெரிகிறதோ?"

இளவரசன் சட்டென்று நகைத்தான்.

"என்கனியே! எண்கணிதம் தெரி யாதோ உனக்கு? ஏழு நாட்கள்தானே வெளியூரில் இருந்தேன்!"

மலர்விழி இப்போது பதிலுக்கு நகைத்தாள்.

"எண்கணிதம் வேறு. என்னைப் போல் பிரிவைச் சுமக்கும் பெண்களின் எண்ணக்கணக்கு வேறு."

"அது என்ன எண்ணக்கணக்கு?"


**"தொலைதூரம் சென்றுவிட்ட காதலன் நேரில் வரும் நாளையெண்ணிக் காத்திருக்கும் காதலிகளுக்கு ஒருநாள் என்பது ஏழுநாள் போல நெடியதாய் செல்லும்! இதைச் சொன்னவர் யாதுமறிந்த திருவள்ளுவர். இப்போது என்ன சொல்கிறீர்கள்?"**

"இனிச்சொல்லுக்கு இங்கே வேலை இல்லை. செயலுக்கே முன்னுரிமை" என்றான் இளவரசன்.

**"ஒருநாள் ஏழுநாள்போல் செல்லும்சேட் சென்றார் வருநாள்வைத்து ஏங்கு பவர்க்கு"**

அதிகாரம் -127. குறள்-1267

## குறுக்கெழுத்துப் போட்டி இல—121



### இடமிருந்து வலம்

01. ஜனநாயகத்தின் உயிர்மூச்சு.
02. பெண்களுக்கு விருப்பமான ஒன்று.
04. இதற்கு இறைத்த நீர் என்றொரு பழமொழி உண்டு.
06. உணவுக்குப் பயன்படும் இச்சொல்லை தங்கத்தின் பெறுமதியை அளக்கவும் பயன்படுத்துவார்கள்.
07. யாழ்ப்பாணத்தில் ஒருகாலத்தில் அதிகமான வருமானத்தைப் பெற்றுத்தந்த தொழில்.
08. இரசாயன ஆராய்ச்சிக்கும் பயன்படுத்தலாம்.
09. இந்த இயக்கம் பேடன் பவலால் தோற்றுவிக் கப்பட்டது.
11. தென்னாபிரிக்க அதிபரின் முன்னாள் மனைவி.

### மேலிருந்து கீழ்

01. நம்நாட்டில் இதனைப் பயன்படுத்தாத சமையல் அனேகமாக இல்லை எனலாம்.
03. இன்று மலிந்து விட்ட ஊழலை அன்று உயர்வாக தமிழர் இவ்வாறு கூறினர்.
05. இதனைப் பயன்படுத்தி தங்கள் காரியங்களைச் சுலபமாக முடித்து விடுவோருமுண்டு.
07. சித்திரம் எழுதலாம் என்று கூறுவார் கள்; ஆனால் நாம் இதில் வர்ணம் மட்டும் தான் பூசுவோம்.
09. பூச்செண்டுகளை வைத்து அழகுபடுத்த இது உதவும்.
10. இன்னும் இருமாதங்களில் நம்மை இதுவாட்டும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 14.10.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-121
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-119ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 து | டு | ப் | 2 பு | ■ | 3 சி | லை |
| ணி | ■ | 4 பா | த் | தி | ர | ம் |
| ச் | ■ | ச | த | ■ | சு | ■ |
| 5 ச | வு | க் | க | டி | ■ | 6 சா |
| ல் | ■ | 7 க | ம் | பீ | ர | ம் |
| ■ | 8 பா | யி | ■ | ■ | ■ | ப |
| 9 மு | சி | று | ■ | 10 ம | ட | ல் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 119இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. செல்வி. பி. பரிமளா, கொச்சிக்கடை.
2. என். நிலாந்தன், செங்கலடி.
3. திருமதி. அய்சதுல் மிரீஹா நவ்பர், அக்குறனை.
4. பி. செந்தில் குமாரன், வவுனியா.
5. திருமதி. கி. ரேமன்ட், ஹொரணை.
6. எச்.ஹபீல், அநுராதபுரம்.
7. கே. சின்னதுரை, ஹட்டன்.
8. என். அஜ்வத், ஒட்டமாவடி.
9. என். ரஸ்மியா பேகம், திருமலை.
10. செல்வி. ஜி. வசந்தினி, வத்தளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

# சிந்தியா பதில்கள் /

**பிரேமானந்தா சாமியார் பற்றி லேட்டஸ்ட் செய்தி ஏதாவது?**

**வி. கன்னன்-கம்பளை.**

உயர் நீதிமன்றமும் அவரது பிணை மனுவை தூக்கிக் கிழித்துப் போட்டுவிட்டது. எல்லோருக்கும் விமோசனம் கொடுப்பேன் என்று கதையளந்தவர், தனது விமோசனத் திற்காக மன்றாடிக் கொண்டிருக்கிறார். நீதிபதியின் மூளைக்குள் புகுந்து, 'மானிடனே பிரேமானந்தாவை விட்டுவிடு' என்று சித்து விளையாட்டு காட்டியிருக்கலாமன்றோ!

□□

**டியர் சிந்தியா! ரஜினியின் அரசியல் பிரவேசம் எந்தளவில் இருக்கிறது?**

**எஸ்.எச்.எம்.நௌசாத்-ஹொரவப்பொத்தானை.**

ஜெயலலிதாமீது அதிரடி நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதால், சற்றுப் பொறுமையாக இருக்கும்படி டில்லி உத்தரவிட்டிருக்கிறதாம். ரஜினியை வளர்க்கவே செல்விமீது நடவடிக்கை என்று மக்கள் நினைத்துவிடக்கூடாதல்லவா? தற்போதைக்கு அரசியலுக்கு வரமாட்டேன் என்று ரஜினி சொல்லியிருப்பதும் கவனிக்கப்பட வேண்டியது.

□□

**இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலம் குறித்து உங்கள் கருத்து?**

**எஸ்.ஏ.சி.ஸஹீமா-ஹொரவப்பொத்தானை.**

பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மூக்கில் விரலைவைக்க வைத்திருக்கிறது. முயன்றால் புகுந்து தூள் கிளப்பலாம் என்பதற்கு உதாரணம் காட்டியிருக்கிறார்கள். வசதி குறைந்த ஆனால், வெல்ல வேண்டும் என்ற விருப்பம் உள்ள அணி. முயன்றால் மேலும் சாதிக்கலாம்.

□□

**பசி பெரிதா மானம் பெரிதா?**

**எஸ்.எல்.ஜகானா-கல்முனை-05.**

பசிவந்தால்தானே பத்தும் பறக்கிறது. அதில் ஒன்று மானம். ஆகவே பெரிது பெரிது பசி பெரிது.

□□

**நாகேஷ்-வடிவேலு இருவரையும் ஒப்பிட முடியுமா?**

**ஜெ.சிலாரியன்-மட்டக்களப்பு**

முன்னவர் இமயத்தில் ஏறி கொடி பொறித்துவிட்டவர். பின்னவர் இப்போது தான் அண்ணாந்து பார்க்கவே ஆரம்பித் திருப்பவர்.

□□

**அவசரம் எதில் வேண்டும்? எதில் கூடாது? ஏன்? கூறமுடியுமா?**

**எம்.டலீனா -மாத்தளை**

போரில் இடம்பெயரும் போது அவசரம் வேண்டும். மீண்டும் திரும்பிச் செல்லும்போது நிதானம் வேண்டும். ஏன் என்றால், உயிர் முக்கியமுங்க. (பதில் ஓ.கேயா?)

□□

**கடற்புலிகளின் பேட்டியை ரூபவாஹினி ஒளிபரப்பியதல்லவா: எப்படியிருந்தது.**

**எஸ்.சிவகுமார்-வவுனியா**

பிரபாவின் பிள்ளை என்று, செஞ் சோலையில் வளரும் பிள்ளையை பிரபா தூக்கிவைத்திருப்பதை காண்பித்தார்கள். அதுதான் உறுத்தலாக இருந்தது. தவிர, செஞ்சோலை அநாதைக் குழந்தைகள் பராமரிப்பு விடயத்தில் புலிகளைக் குறை சொல்வது சரியல்ல. நன்றாகவே பரா மரிக்கிறார்கள்.

□□

**'இராசய்யா' படத்தில் இடம்பெறும் மஸ்தானா மஸ்தானா என்னும் பாடலை பாடிய பாடகி யார்?**

**கந்தசாமி ஹரிகரராஜ்-ஆரையம்பதி 01**

இளையராஜாவின் மகள் பவதாரணி.

□□

**ரஜினிகாந்த் அரசியலுக்கு வருவதை கலைஞர் கருணாநிதி விரும்புவாரா?**

**கே. சங்கரநேசன்-கொழும்பு -06**

மாட்டார். இன்னொரு நடிகருக்கும் ஆசை வந்திருக்கிறது என்று லேசாக தனது அதிருப்தியை காட்டிவிட்டார். ஸ்ராலினுக்கு போட்டியாக வை.கோ.வளர்வதையே அவரால் பொறுக்க முடியவில்லை. ரஜினி வருவதையா விரும்புவார்?

□□

**வடபகுதி நிலவரம் பற்றிக் கூறுங்களேன்?**

**மா.பாக்கியநாதன்-குருநாகல்.**

மழையைப் பற்றியா கேட்கிறீர்கள்? சில நாட்களுக்கு தொடர்ச்சியாக பெய்துவிட்டு ஓய்வது. இடைவெளிவிட்டு மீண்டும் கொட்டுவது. பெரும் மழைக்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட மழை.

□□

**குஷ்புவின் இடத்தை நக்மா பிடிப்பாரா?**

**வி.ரஞ்சித்-நீர்கொழும்பு**

கவர்ச்சி விடயத்தில் பிடித்தாலும் குடும்பப்பாங்கான வேசங்கள் என்று பார்த்தால் குஷ்புவுக்குத்தான் பொசிப்பு. நக்மா எப்படித்தான் குலுங்கினாலும் யாராவது கோயில் கட்ட முன்வந்தார்களா? ஆகவே குஷ்பு குஷ்புதான் என்று இத்தால் அறிவித்துக் கொள்கிறோம்.

□□

**இலங்கையருக்கு வர வர நாட்டுப்பற்று குறைந்து கொண்டே வருகிறதே, என்ன காரணம்?**

**எம்.எச்.எம்.பாரிஸ்-கொழும்பு-12**

நமது நாடே வெளிநாடுகளில் தானே 'பற்று' வைத்துக் கொண்டிருக்கிறது.

□□

**அன்பின் சிந்தியா! மொட்டைக்கடிதம் எழுதி எம்மை பிறர்முன் அவமானப்படுத்த நினைப்பவர்கள் பற்றி?**

**செல்வி.ஐ.என்.ஹஸின்-பாலையூற்று-திருமலை**

அவர்களது நினைவே மொட்டை. புறங்கையால் அலட்சியப்படுத்துங்கள்.

□□

**பிரபுதேவா கல்யாண விவகாரம் உண்மையா?**

**ஏ.சரத்குமார்-கண்டி**

உண்மையோ பொய்யோ, பிரபு என்ற பெயரில் இருப்பவர்களுக்கும் கல்யாண விவகார சர்ச்சைகளுக்கும் அப்படியென்ன தொடர்பு!

www.padippakam.com

# இராமாயணம்

## அங்கம் ஒன்று

## அருணனுக்கு ஆராதனை

உதய சூரியன் உதிப்பதற்கு ஆயத்தமானான். உலகம் துயில் நீங்கி எழுவதற்கு முயல்கிறது. கிழக்கு வானம் செம்பட்டுத்துகில் விரித்து கதிரவன் வரவுக்குக் கட்டியம் கூறுகிறது. ஓங்கார ஒலி எழுப்பும் ஓயாப் பெருங்கடல் தனது கருமைப் போர்வையை மெல்ல மெல்ல நீக்குகிறது. பறவையினங்களின் இன்னிசை எங்கும் ஒலிக்கிறது. கறவையினங்கள் கன்றுகளை அருகழைத்து அமுதப் பாலை ஊட்டி உவகை கொள்கின்றன.

இயற்கையின் இன்ப இயல்புகளை அள்ளிப் பருகியவண்ணம் அரிவையர் துயில் நீங்கி எழுந்து அணி அணியாக நீர் நிலைகளை நாடிச் செல்கின்றனர். ஆலயங் களிலிருந்து எழும் கண்டாமணி ஓசை கேட்டு ஆடவர் துயில் நீக்கித் துடித்தெழுகின்றனர்.

தன்னருகே துயில் கொண்டிருந்த தன் மனையாள் இன்னும் பஞ்சணையில் பள்ளி கொள்கிறாளோ என்று ஓரக்கண்ணால் பார்க்கிறான் அவள் அங்கில்லை. அவள், சலசலக்கும் நீரோடையின் நடுவே தன் தோழியர் சூழ நீராடுவதை அவன் அகக் கண்ணால் காண்கிறான். அவனுடன் இரவு அவளிருக்கையில், அவளது தங்க மேனியில் அவனிட்ட அடையாளங்களை அவளுடைய தோழிகள் கண்டுவிடுவார்களோ.....? அவ்வாறு காண நேர்ந்தால்..... அவனுக்கு அந்தக் காட்சியை நினைக்கவே அவனையே அறியாமல் ஒருவகை இன்ப உணர்ச்சி பரவுகிறது.

இரவு நடந்தவையெல்லாம் நினைவில் நிறைந்துவிடுமானால் பகற்கனவு காண வேண்டி வருமே! கடமைக்குக் காலத்தே செல்ல வேண்டுமே என்று படுக்கையிலிருந்து பாய்ந்தெழுகிறான். அவன் எழுவதற்கும் நீராடி முடித்து தண்ணீர் குடத்துடன் அவள் வந்து அவன் முன் நிற்பதற்கும் சரியாக இருந்தது. அவள் கையில் கொண்டுவந்த வெண்தாமரை மொட்டு ஒன்று- அவளுடைய அழகைப் போலவே மலர்ந்தும் மலராத பாதிமலர் போல- அவனைப்பார்த்துச் சிரித்தது. அதனை அவள் கொடுக்க அவன் வாங்கினான்.

காலைப் பொழுதில் காலத்தை வீணாக்க அவனால் முடியாது. கடமை காத்திருக்கிறது. கமல மலரை அவள் கையிலேயே திணித்து விட்டு காலைக் கடன் முடிக்க அடுத்துள்ள தடாகத்தை நோக்கி ஓடினான் அவன்.

உதயமாகும்போது அவன் அந்த அருணன் ஆலயத்தில் நிற்க வேண்டும். அங்கு நடைபெறும் உதயகாலப் பூசையில் கலந்து கொள்ளவரும் கொற்றவனின் மெய்க்காப்பாளர் குழுவின் தலைவன் அவன்.

ஆலயத்தை ஓடிச் சென்றடைந்தான். முழவு ஒலித்தது. மணிகள் நாதமெழுப்பின. கொடி, குடை ஆலவட்டங்கள் புடைசூழ சர்வ அலங்காரங்களுடன் மன்னவன் வருகிறான். மங்கலான ஒலியிலும் அம்மன்னவனின் மேனி ஒளி வீசியது. அவனுடைய அங்கத்தின் ஒளியா அல்லது அம்மன்னவன் அணிந்திருக்கும் அணிமணிகளின் ஒளியா அதிகம் என்பதைக் கண்டு கொள்ள முடியவில்லை.

மன்னவனின் வலது புறம் வெண்தாடி வேந்தராக வேதத்தின் உட்பொருளை ஒத்த வித்தகத்தன்மையை விளக்கும் திருவுருவாக அம்மாமுனிவர் வருகிறார்.

பரிவாரங்கள் அனைவரையும் ஆலயத்தின் முன்றிலிலே நிறுத்தி விட்டு மன்னவனும் முனிவரும் மட்டுமே அவ்வாலயத்தின் உட்செல்கின்றனர்.

அழகழகான அடுக்கு தீபங்கள் இரு மருங்கும் ஒளிபரப்ப, தங்கத் தாம்பாளங்களில் ஏழு வர்ணங்களைக் கொண்ட மலர் மொட்டுக்கள் தனித்தனியே வைக்கப் பட்டிருந்தன.

கிழக்கிலிருந்து ஓர் ஒளிக்கீற்று ஆலயத்தினுள்ளே-கர்ப்பக்கிருகத்தின் பொற்கதவில் படவும் அக்கதவு திறக்கவும் சரியாக இருந்தது. எங்கும் முரசங்கள் ஒலித்தன. குழல்களின் ஊதல் ஒலி ஆலயத்தின் பிரகாரம் எங்கும் எதிரொலித்தது. மணிகளின் ஓங்கார நாதமும் ஒன்றாக இணைந்து எங்கும் பரவும் போது வேதியர்களின் வேத பாராயணமும் தொடங்கியது. எங்கும் தெய்வீக மணம் கமழ்ந்தது.

மன்னவனும் மாமுனிவனும் இரு கைகளாலும் மலர்களை அள்ளி அள்ளி உதய தேவனின் திருவுருவை நோக்கி வீசினார்கள். ஆலய மூலத்தானத்தை இருவரும் மும்முறை சுற்றிவந்தனர். பின்னர் ஆலயப்பிரதான வாயில் வழியே வெளிவந்தனர்.

இளமையும் அழகும் பொங்கும் ஏழு இளம் கன்னியர் ஏழுவகை மலர்களைக் கொண்ட தாம்பாளங்களை ஏந்தி மன்னவனுக்கும் மாமுனிவனுக்கும் முன்னே சென்று நீட்டினார்கள். கதிரவன் தன் பொற்கதிர்களை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தான். வரிசையாக நின்ற மங்கையர் நீட்டிய தாம்பாளங்களில் இருந்து மலர்களை எடுத்து கீழ் வானில் பவனி தொடங்கிய கதிரவனை நோக்கித் தூவினார்கள். அந்தப் பூசையினை மனங்குளிர ஏற்றுக் கொண்டதற்கு அடையாள மாக கதிரவனும் தனது ஆணைக்குக் கட்டுப்பட்ட சிறிய மேகக் கூட்டங்களை ஏவி ஆலய முன்றிலில் நின்ற அனைவருக்கும் பன்னீர் தெளிப்பது போல் சிறு தூற்றலை இறைத்தான்.

▭ ▭

அரசர்க்கரசரான அயோத்திமா நகரக் காவலன் தசரதன், தேவேந்திரன் தனது தேவலோகத்தில் எத்தகைய ஆட்சிபுரிகிறானோ அதே போன்ற முறையில் மக்களுக்கு எக்குறையுமின்றி, நீதி வழுவாது, நேர்மை தவறாது, தர்மம் தழைத்தோங்க ஆட்சி புரிகிறான். ஒவ்வொரு நாளும் உதயவேளையில் உதய சூரியன் ஆலயம் சென்று வணங்கியபின் உதயத்தின்போது எழும் கதிர்களையும் தன் உள்ளமும் உடலும் அள்ளிப் பருகும் வண்ணம் பிரார்த்தனை செய்ததன் பின்னரே தன் அன்றைய பொழுதினை ஆரம்பிக்கிறான்.

## இறை வணக்கம்

**அன்பர்க்கு அருள் புரியும் ஆனை முகன் அடிதொழுது இன்பப் பெருக்கேறி இறுமாந்தேன் – பண்பிலுயர் இராமபிரான் காதையதை இயல்புடனே யானுரைக்க பராபரனே வரமருள வேண்டுகிறேன்.**



## நாட்டு நலனும் மன்னவன் மாண்பும்

### கோசல நாடு

தசரதன் சூரியவம்சத்தவன். இரகு வம்சம் என்றும் இந்த வம்சம் அழைக்கப்படுகிறது. இட்சுவாகு என்னும் மன்னர் பரம்பரையில் உதித்தவன்.

வட இந்தியாவில் கங்கை நதிக்கரையின் வடபுறத்தே சரயு நதிக்கரையில் அமைந்தது கோசலம் என்னும் நாடு. சகல வளமும் நிறைந்த நாடு அது. இல்லை என்ற சொல்லுக்கு அந்நாட்டில் அர்த்தமே இல்லை. வளம் கொழிக்கும் நாடென்பதால் மக்கள் மனம் நிறைந்த வாழ்க்கை அமையப் பெற்றிருந்தனர். கல்வியும் செல்வமும் பல்கிப் பெருகியதால் மக்கள் பண்பிலுயர்ந்த வராக வாழ்ந்தனர். தத்தம் தேவைக்கேற்ப பொருள்வளம் நிறைந்திருந்தமையால் வறுமை அங்கு வாட்டவில்லை. பெருமை கொண்டவர்களாக அந்நாட்டு மக்கள் வாழ்ந்தமையால் பொறாமை என்ற பொல்லாமை அங்கு நுழையவில்லை. அதனால் பகைமையும் அங்கில்லை. வேண்டியதெல்லாம் வேண்டும் போது கிடைப்பதனால் அங்கு களவுகளுக்கோ கொள்ளைகளுக்கோ இடமிருக்கவில்லை.

வயல்கள் பரந்தும் வனப்புமிக்க பூங்காக்கள் மலிந்தும் வேதங்களை ஓதும்



## இராஜகுமாரன்

வேதம் பயில் பள்ளிகள் நிறைந்தும் காணப் பட்டன. வனங்களில் விலங்கினங்களும் வகைவகையான பறவையினங்களும் பவனிவந்தன.

சுருங்கச் சொல்லின், கோசலம் என்ற நாடு, தசரத மன்னனின் தரமுயர்ந்த செங்கோல் சற்றும் கோணாத ஆட்சியின் பயனாக தேவர்களே பொறாமை கொள்ளும் வகையில் சிறப்புற்று விளங்கியது.

கோசல நாட்டின் தலைநகராக விளங்கியதே அயோத்தி மாநகரம். திருமகளான இலக்குமிதேவியின் உறைவிடமாக அயோத்தி மாநகரம் விளங்கியது என்று வர்ணிக்கப் படுவதால் இதற்கு மேல் உவமை கூறி வர்ணிக்க எவரால் தான் முடியும்!

இந்நகரைச் சூழ்ந்து நாலாபுறமும் பெரு மதில்கள் அமைக்கப்பட்டிருந்தன. பகைவர் எவரும் வந்து நுழைந்துவிடாவண்ணம் நன்கு அரண் செய்யப்பட்டிருந்தது.

மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து காணப்பட்டன. மணிக்கற்களால் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. இவை பல்வகை இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டிருந்தன. தூண்கள் வைரத் தாலானவை. சில மாளிகைகளின் தூண்கள் சந்தன மரங்களால் ஆக்கப்பட்டிருந்தன. உத்தரங்கள் மரகதத்தால் ஆனவை. தரையில் காந்தக்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

ஒவ்வொருவரும் செய்யும் தொழிலை ஒட்டி அவரவர் வதிவிடங்கள் வகுக்கப் பட்டிருந்தன. அகன்ற வீதிகளைக் கொண்டிருந்தன. பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வசதியாக அங்காடிகள் அமைக்கப் பட்டிருந்தன. கிராமப் புறங்களில் இருந்து மாட்டு வண்டிகளிலும் குதிரை வண்டிகளிலும் நகர மக்களுக்குத் தேவையான பண்டங்கள் வந்து கொண்டே இருந்தன. அதேபோல் நகரை நாடிவருவோரும் வந்த பணியை முடித்து வெளியேறுவோருமாக மக்கள் கூட்டம் எப்போதும் நெருக்கியடித்துக் கொண்டே இருந்தது.

▭ ▭

ஆலயத்தில் அருணன் பூசையை முடித்துக் கொண்டு அரண்மனை திரும்பிய மன்னர் மன்னவன் தசரதன் தன் பரிவாரங்கள் படைசூழ அரசவை நோக்கிப் புறப்பட்டான். ஆடலழகியர் ஒருபுறம் ஆடற் கலைபயில, பாவாணர்கள் மறுபுறம் பண்ணிசைபாட, வேதியர்கள் வேதம் ஓதி வாழ்த்த, மலர் சொரித்து மங்கையர் குழாம் புடைசூழ அரசன் பவனிவந்து கொண்டிருந்தான். வாயிலில் காவலன் ஒருவன் கட்டியம் கூறினான். அடலேறுபோல் அரசன் அரசவையில் அடியெடுத்து வைத்ததும் அவையிலிருந்த அனைவரும் எழுந்து நின்றனர். எங்கும் வாழ்த்தொலி எழுந்து வான் முட்டியது.

அரியணையினை ஒருமுறை வணங்கி விட்டு அதன் மேல் அரசன் வீற்றிருந்தான். ஆஸ்தானப்புலவர் எழுந்து வாழ்த்துப் பாடியதைத் தொடர்ந்து வேற்று நாட்டுப் புலவர்கள் பலர் வந்து பாக்களைப் பண்ணோடு இசைத்து மன்னவன் கையால் பரிசில்களைப் பெற்றுச் சென்றனர்.

உதயத்தின்போது ஆதவன் ஆலயத்துக்கு அரசருடன் சென்றிருந்த முனிவர் வசிட்ட மாமுனிவராவார். அரசனின் குலகுருவும் அவரே! எந்தக் காரியமானாலும் குருவைக் கலந்தாலோசியாமல் , அயோத்தி மன்னன் எக்காரியத்தையும் செய்யத் துணியமாட்டான். அம்மாமுனிவர் அரசவைக்கு அப்போதுதான் வந்துகொண்டிருந்தார். முனிவர் வருகையைக் குறிக்குமுகமாக வாயிற்காவலன் கட்டியம் கூறினான். அரியணையை விட்டெழுந்த அரசன் வாயிலை நாடிவிரைந்தான். அரசனுடன் அமைச்சர்கள் எண்மரும் தொடர்ந்து சென்று வசிட்ட மாமுனிவரை அழைத்துவந்து அவருக்குரிய இருக்கையில் அமரச் செய்தனர்.

அயோத்தி அரண்மனையில் அரசனுக்கு மதியுரை கூறுவதற்கும் அரச நிர்வாகம் சிறப்புற்று இயங்குவதற்கும் மதிநுட்பம் மிக்க எட்டு அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை இருந்தது. கிருஷ்டி, ஜெயந்தன், விஜயன், சித்தார்த்தன், அர்த்தசாதகன், அசோகன், மந்திரபாலன், சுமந்திரன் என்பது அவர்களுடைய பெயர்களாகும். அமைச்சர்கள் இருந்த போதிலும் மக்களின் கருத்துக்கும் அரசவையில் முக்கியத்துவம் தரப்பட்டு வந்தது.

தசரத மாமன்னன் குடி மக்களுக்குத் தாயைப் போன்றவன்; வரும்பிணி அகற்றும் மாமருந்தைப் போன்றவன்; தருணம் வரும் போது ஒவ்வொரு குடும்பத்தின் மூத்த புதல்வனைப் போலும் கருதப்படுகிறான். மக்களின் அறியாமை இருளை அகற்றும் அறிவுச் சுடராகவும் திகழ்கிறான்.

### குழந்தை இல்லாக் குறை

கௌசல்யா, கைகேயி, சுமித்திரை எனும் பெயருடைய மூன்று மனைவிகள் தசரதனுடைய வாழ்க்கையோடு இணைந்து இல்லறம் சிறக்க உறுதுணை புரிந்தனர்.

இத்தனை சிறப்புகளும் நிறைந்த அயோத்தி மாநகரில் -ஏன் கோசல நாட்டிலும் கூட ஒரு பெருங்குறை இருந்தது. குழலின் ஒலியின் இனிமையையும் யாழின் இன்னிசை ஒலியின் இன்பத்தையும் பருகிப் பருகி அரண்மனையிலுள்ளவர்களின் காதுகள் மரத்துப்போய் விட்டன. இன்னிசை எவையும் இனிமை பயக்காமல் புளிப்பாகவே இருந்தது. அங்கு மழலையின் மணியோசை கேட்கவில்லை. அதுமாபெரும் குறையாகவே இருந்தது.

அரண்மனையிலும் அந்தப் புரங்களிலும் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள்யாவும் அந்தந்த இடங்களிலேயே வைக்கப்பட்டிருந்தன. சுவர்களில் பூசப்பட்ட வர்ணங்கள் அப்படியப்படியே இருந்தன. தரைகளிலும் கூட எக்கறையும் படவில்லை. அவற்றைத் தட்டி உருட்டி எறிந்து உடைத்து விளையாடிக் குறும்பு செய்ய குழந்தையில்லாக் குறை தெரிந்தது. அத்தகைய கோலங்களைக் காணும் அரசிகள் மூவரும் சோகத்திலாழ்ந்தனர். அரசிகளுடன் அண்டிப் பழகும் சேடிப் பெண்களுக்கும் இதே கவலை பீடித்துக் கொண்டது. அரண்மனைக் காவலாளிகளிடம் படர்ந்த இந்தக் கவலை மந்திரி பிரதானிகளையும் நாட்டு மக்களையுமே வாட்டத் தொடங்கிவிட்டது.

தனக்குப்பின் தன் மூதாதையர் வழிவந்த அரியணையில் வீற்றிருந்து செங்கோலை கரம்பிடித்து அரசபரிபாலனம் செய்வதற்கு ஏற்ற வாரிசு கிடைக்கவில்லையே என்ற வாட்டம் தசரத மன்னனையும் வாட்டியது. காலத்தே பயிர்செய்து சிறப்புடன் பலன் கிடைத்தால் தானே நானிலம் சிறக்கும்? "நான் என்ன குறை செய்தேன். ஒரு குழந்தைச் செல்வம் கிடைக்காமல் போனமைக்கு? காலம் கடக்கிறது; என் கோலம் சிதைகிறது; பட்டத்துக்கேற்ற பிள்ளையொன்று பிறக்கா விட்டால் பட்ட பாடெல்லாம் நட்டமாகிவிடுமே?" என்று பலவாறாக மன்னர் மன்னன் தசரதன் தினசரி புலம்பலானான். இம்மைக்கும் மறுமைக்கும் மகப்பேறு ஒன்றில்லாவிட்டால் வாழ்வில் உய்வே இல்லையே என்று எண்ணியெண்ணி ஏங்காலனான்.

மன்னவனின் இந்த ஏக்கத்தின் பிரதிபலிப்பினை அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் காணக்கூடியதாக இருந்தது. அரசவையில் அன்றாட நிகழ்வுகள் முடிந்ததும் அமைச்சர்கள் எண்மரும் அரச குரு வசிட்டரும் ஒன்று கூடினர். வழக்கம் போல் அன்றைய கூட்டத்திற்கு தசரத மன்னவனே தலைமை தாங்கினாலும் அவனுடைய முகத்தில் -அகத்தில் படிந்திருந்த வாட்டத்தின் ரேகைகள் பிரதிபலித்ததை அனைவரும் கண்டனர்.

அயோத்திமாநகரின் அரியணையில் தசரத மாமன்னனுக்குப் பிறகு அமர்வதற்கு ஒரு இளவரசன் வேண்டுமே! எக்குறையுமில்லாத ஏற்றமிகு நாட்டுக்கு இக்குறை ஏன் வந்தது என்பதனை ஒட்டியே அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் வாதங்கள் எழுந்தன. பல நாழிகைகள் இடம்பெற்ற கூட்டத்தின் இறுதியில் வசிட்ட மாமுனிவர் புன்முறுவல் பூத்தவராக தனது கருத்துக்களை வெளியிட்டார். அரசன் முதல் அமைச்சர்கள் வரை அம்மாமுனிவரின் அரிய கருத்துக்களை செவிமடுத்தனர்.

"இரகு வம்சம் வாழையடி வாழையாக வளர்ந்தோங்க வேண்டியது. இடைநடுவில் இவ்வம்ச விருட்சம் தொடர்பற்றுப்போக அந்த இரகுநாதனான சூரியதேவனே வழி விடமாட்டான். தசரத மாமன்னனுக்கு மகப் பேறுண்டு. முற்பிறப்பில் மன்னனுக்கு ஏற்பட்ட ஒரு சாபத்தின் பயனாகவே இதுவரை மகப்பேறு கிட்டவில்லை. இந்தச் சாபம் நீங்க புத்திரகாமேட்டி யாகம் ஒன்றினை முறையாக மன்னவன் செய்தாக வேண்டும். இந்த மாபெரும் வேள்வியைத் தலைமை தாங்கி நடத்தித் தருவதற்கு தகுதி உடையவர் இருசியசிருங்க முனிவராவர். அம்மாமுனிவர் முன்பு இமயமலைச்சாரலில் பெரும் தவம் இயற்றியவர். நீண்ட நெடுங்காலம் மிகக் கடுமையான பிரமச்சரியம் அனுஷ்டித்தவர். தேவர்களுக்கும் மேலான சக்திபடைத்தவர். இந்த மகான் அயோத்தி மாநகரை அடைந்து மன்னர் மன்னவன் நடத்தும் புத்திரகாமேட்டி யாகத்தை நடத்தித் தருவாரானால் நிச்சயம் மகப்பெறு கிட்டும்."

### கலைக்கோட்டு மாமுனிவர்

இவ்வாறு மாமுனிவர் வசிட்டர் உரைத்ததும் அவையிலிருந்த அனைவரும் பெருமகிழ் வெய்தினர். இருசியசிருங்க முனிவரை மன்னர் சென்று அழைத்து வருவதற்கான நாள் குறிப்பிடப்பட்டது. முன்னர் இமயமலைச் சாரலில் தவ வாழ்க்கை மேற்கொண்டிருந்த தவசிரேட்டரான இருசியசிருங்கர் தற்போது அங்கநாட்டிலே வாழ்ந்து வருவதாகவும் முனிவர் கூறினார்.

அங்க நாட்டதிபனாகிய உரோமபாதன் தசரத மன்னனின் நண்பன். ஆகையால் இருசியசிருங்கரை உரோமபாத மன்னனின் உதவியுடன் அணுகலாம் என வசிட்ட மாமுனிவரும் அமைச்சரான சுமந்திரனும் கூறினர். வசிட்டர் இருசியசிருங்கர் பற்றி வேறுபல தகவல்களையும் மன்னனிடம் கூறினார்.

▭ ▭

அங்க நாட்டில் பல்லாண்டுகாலமாக மழை பொய்த்தமையினால் வயல்களில் விளைச்சல் இல்லை. மண்வரண்டு கிடந்தது. பசியும் பட்டினியும் படர்ந்ததால் மக்கள் பெரும் துயரடைந்தனர். மக்கள் படும் துயரம் கண்டு வருந்திய மன்னன் உரோமபாதன் வேத விற்பன்னர்களையும் மாமுனிவர்களையும் அழைத்து "மழை பொழிய வேண்டுமெனில் யாது செய்ய வேண்டும்" என்று வினவினான்.

"தன் தந்தையைத் தவிர வேறு எவர் முகத்தையும் கண்டறியாத ஒரு இளம் துறவி இமயமலைச்சாரலில் கடும் தவம் இயற்றிய பின் தற்போது தபோவனம் அமைத்து தனித்து வாழ்கிறார். அம்மகானை அவருடைய தந்தை யாருக்குத் தெரியாமல் தங்கள் நாட்டுக்கு அழைத்து வருவீர்களானால் நிச்சயம் நாட்டில் "மழை பொழியும்" என்றார் ஒரு முனிவர்.

காசிப முனிவரின் மகன் விபாண்டக முனிவன். இந்த விபாண்டகன் தன்னுடைய மகனான இருசியசிருங்கரை தனியான ஒரு தவச்சாலை அமைத்து அங்கிருந்து தவம் செய்வதற்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார். அந்தச் சாலைக்குள் எந்த மாநிடனும் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. விபாண்டகர் அவ்வப்போது தன்மகனிடம் சென்று அவருடைய சந்தேகங்களைத் தீர்த்து வைப்பார். இவ்வாறு வேற்று மனித வாடையே தெரியாத ஒருவரை உரோமபாத மன்னரால் எவ்வாறு அழைத்து வர முடியும்? இவ்வாறு மன்னவன் கலங்கியபோது அந்நாட்டிலுள்ள பேரழகிகளான விலைமாதர் சிலர், "நாங்கள் போய் அந்த இளம்துறவியை அழைத்து வருகிறோம்" என்று மன்னரிடம் கூறி விடை பெற்றுச் சென்றனர்.

இருசியசிருங்கரின் நெற்றியில் மான் கொம்புகள் போன்ற இரு கொம்புகள் இருந்தன. இதனால் இவரைக் கலைக்கோட்டு மாமுனி என்று அழைத்தனர்.

கலைக்கோட்டு மாமுனிவர் வசித்து வந்த தவச்சாலைக்குச் சற்றுத் தொலைவில் அங்க தேசத்திலிருந்து வந்த மங்கையர் அழகிய பர்ணசாலை ஒன்றினை மரந்தடி கொடிகளால் அமைத்தனர். அவர்களும் தவசிகள் போன்று வேடம் தரித்தனர். விபாண்டகர் அறியாதவாறு இம்மங்கையர் ஒருநாள் கலைக்கோட்டு மாமுனிவனின் கண்களில் பட்டுவிட்டனர். முதன் முதலில் தன்னைப் போன்று தோற்றமுடைய தன்னைவிட எழிலும் கவர்ச்சியும் கொண்ட தவசிகளைக் கண்ட கலைக்கோடன் முதலில் பயந்தார்-பின்னர் மருண்டார்- வைத்த கண் வாங்காமல் பார்த்து நின்றார்-அருகே வந்தார்-அவர்களைத் தொட்டும் தடவியும் பார்த்தார்: எக்காலத்திலும் அவரிடம் எழாத ஒருவகை புத்துணர்ச்சியும் பூரிப்பும் ஏற்பட்டதை உணர்ந்தார்.

காந்த சக்தி படைத்த கண்களால் அந்த இளம் துறவியின் உள்ளத்திலே என்றுமே அனுபவித்திராத இன்பக்கிளர்ச்சியை ஏவிவிட்டு வனிதையர் ஓடி மறைந்துவிட்டனர்.

அன்று மாலை 'சந்தியா வந்தனம்' எனும் மாலைக் கடனை முடிப்பதற்காக நதிக்கரை சென்ற முனிவன் நீராடிக் கரையேறி வடக்கு நோக்கி தியானத்திலமர்ந்தான். மனம் ஒரு நிலைப்படவில்லை. காதுகளில் அன்று காலை அந்த இளமங்கையர் உதிர்த்த வார்த்தைகளின் ஓசை தேனாகவந்து மோதியது. அகக் கண்களில் அந்த அரம்பையர் வீசிய விழிக்கணைகள் வந்து தாக்கின. அம்மங்கையரின் கொவ்வைக் கனி வாய் எத்தகைய சுவை ஊறுமோ என்று மனம் விம்மியது. அன்று அந்த இளந்துறவியால் எந்தக் கடமையையும் சரிவரச் செய்ய முடியவில்லை. உணவும் கொள்ள முடியவில்லை. உறங்குவதற்காக விரித்த மான்தோலும் உடலை உறுத்தியது.

பொழுது புலரும்வரை பொறுத்திருந்தான். விடிந்தும் விடியாத பொழுதில் எழுந்தான். நித்திய கடமைகளை நிறைவேற்ற மனமின்றி அந்த அழகிய 'துறவி'கள் எங்கிருக்கிறார்களோ அங்கேபோக வேண்டும் என்ற துடிப்பு மேலிட தவச்சாலையை விட்டுப்புறப்பட ஆயத்தமானான். வாயிலின் வழியே வெளியேறி வந்தபோது அந்த இளந்துறவி கண்ட காட்சி அவனைச் சிலையாக நிறுத்தி விட்டது.

### இராமாயணப் போட்டி

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஸ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:- முனிவர் ஒருவருக்கு நெற்றியில் இரண்டு கொம்புகள் இருந்தன. அவரது பெயர் என்ன?**

ஒக்டோபர் 14ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி<br>
தினமுரசு வாரமலர்<br>
த.பெ. இல– 1772<br>
கொழும்பு



படிப்பகம்

www.padippakam.com
Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)

அருள் ஜுவலர்ஸ்
ARUL JUWELLERS
பெண்களின் அழகிய இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# எது முதலில்

வேட்டுத் துப்பாக்கி
போர் முகத்தை
திரையிட வெண்புறா!
எது முதலில்?
வேட்டுக்கே
விரைவு அதிகம்.

வேட்டு உயிர் குடிக்க
பிணங்கள்
புவிமீது குவிய
வெண்புறாவுக்கு
அங்கென்ன வேலை?
கழுகுகளுக்கே விருந்து!

வெண்புறாவும்
வேட்டுத் துப்பாக்கியும்
கூடி வாழ முடியுமா?

வேட்டுக் கிளப்பும்
அதிர்வோசையில்
வெண்புறா
பொறிகலங்கிப் பறந்துவிடும்.



யுத்தம் புரிவோரே
நீங்கள் முகங்களை
மறைக்கலாம்.
ஆனால்-உங்கள்
அகத்தில் உள்ளது
நாட்டு நடப்பில்
நமக்கெல்லாம் தெரியும்.

அம்மன் ஜுவல்
AMMAN JUWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

# கந்தக அரும்புகள்

எவருக்குத்தான் தங்கள் பிஞ்சுகளை போர் நெருப்பில் போட மனது வரும்? அடுத்தவர் குழந்தைகள் துப்பாக்கியோடு நிற்பதை ரசிக்கவும் வியக்கவும் நாமெல்லாம் தயார்தான். ஆனால், நமது பிள்ளைகளை....? நியாயம் சாகும்போது போராடுவது தர்மம். ஆனால், தர்மத்தின் பெயரில் அரும்புகள் கந்தகக் குச்சிகளாக வீசப்படுவது நியாயம்தானா? வளரட்டும். பக்குவம் வந்தபின் பாதையைத் தெரிவு செய்யட்டும். வளர அனுமதிப்போம்.

சிறுவர்களை போரில் ஈடுபடுத்துவது கொடுமையிலும் கொடுமை. கால நிர்ப்பந்தம் என்று காரணம் சொல்லலாம். சொல்பவர்களின் பிள்ளைகளும் துப்பாக்கியோடு அலைகிறார்களா என்று பாருங்கள்.




# புதுவித அழகி

த
ரு
வ
து
லி
யோ
டெ



உடை பார்த்து, நடைபார்த்து, நடக்கும்போது வெட்டும் இடையசைவு பார்த்து புள்ளிபோட்டு அழகுராணிப் பட்டம் கொடுக்கப்படுவது தெரிந்த சமாச்சாரம். அமெரிக்காவில் வோஷிங்டன் நகரில் நடக்கும் அழகு ராணிப்போட்டி சற்று வித்தியாசமானது. நடையைப் பார்த்து எடை போடும் சமாச்சாரமே கிடையாது. நடந்து காட்டச் சொன்னாலும் அப்போட்டியில் கலந்து கொள்ளும் அழகிகளால் நடக்கவே முடியாது. கால் ஊனமானவர்களுக்காக நடத்தப்படும் அழகுராணிப் போட்டிதான் அது. படத்தில் இருப்பவர் சங்கீதா ஜெமின். வயது 19. வோஷிங்டன் போட்டியில் 'மிஸ்ரீன்' பட்டம் இவருக்குத்தான். 10 வயதில் விபத்தொன்றில் இரு கால்களையும் இழந்து விட்டார். என்றாலும் மலைபோல மனஉறுதி. அதனால் சந்தோஷமாக இருக்கிறார். இன்னொரு தகவல். இவர் ஒரு இந்தியப் பெண். அமெரிக்காவில் வாழ்பவர். சுஸ்மிதாவுக்கும், ஐஸ்வர்யாராய்க்கும் பட்டம் கிடைத்தால் மட்டும் பக்கம் பக்கமாக செய்தி போடுபவர்கள் சங்கீதா ஜெமினை மட்டும் ஏன் கவனிக்கவேயில்லை?!

# பிரித்தானியாவில் பெரிசு

என்ன ஒரு கம்பீரம் பாருங்கள். பிரித்தானியாவில் மிகப்பெரிய நாய் இதுதான். எடை 400 இறாத்தல். பெயர்: மெர்ஃபி. இங்கிலிஸ் மஸ்ரிங் ரகத்தை சேர்ந்தது.

10 இலட்சத்தில் ஒரு நாய்தான் இப்படி வளருமாம்.

இவ்வளவு உயரமாக இருக்கிறதே எத்தனை வயது இருக்கும் என்று ஊகியுங்கள் பார்க்கலாம். இரண்டு வயதுதான்.

வயதுதான் இரண்டு. வயிற்றில் போட்டுக்கொள்ளும் உணவுப் பட்டியலைப் பாருங்கள். (மயக்கம் போட்டுவிடாதீர்கள்).

14 பாத்திரங்களில் உயர் புரதச் சத்துக்கொண்ட பிஸ்கட்டுக்கள். 2 இறாத்தல் சீஸ். 7 டப்பா பதப்படுத்தப்பட்ட பீன்ஸ். 2 இறாத்தல் திராட்சை. இது தவிர அது விரும்பும் பானம் ஒரு போத்தல். இதெல்லாம் ஒரு நாள் சாப்பாடு. ஒரு வாரத்தில் 4 பேர் கொண்ட குடும்பம் உண்ணும் உணவை ஒரே நாளில் லபக்கென்று வயிற்றில் போட்டுக்கொள்கிறது. வருடம் ஒன்றுக்கு சாப்பாட்டுச் செலவு மட்டும் 1500 ஸ்ரேர்லிங் பவுண்ஸ். நமது நாட்டுப் பெறுமதிப்படி கிட்டத்தட்ட 13 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய். இதுதவிர மருத்துவச் செலவுகள். பட்டுமெத்தை வசதிகள், பராமரிப்பாளர் செலவுகள் என்று அவை தனி.

பிரித்தானிய 'நாய் அழகுப்' போட்டியில் பட்டமும் பெற்று, பதக்கமும் வாங்கியிருக்கிறது.

மெர்ஃபியோடு செல்லம் கொஞ்சுபவர்தான் எஜமானி. ஜுலிபார்க்கர்.

ஜுலிக்கு மெர்ஃபிமீது கொள்ளைப் பிரியம். பணத்தைக் கொட்டி வளர்க்கிறார். செல்வம் இருக்கிறது. செல்லத்துக்கு செலவு பண்ணுகிறார். நமக்கென்ன? வியப்போமே!



Murphy with his owner Julie Barker


படிப்பகம்